R42
N19

67815

சிவமயம்

வடிவேல்துணை.

# கிரகாச்சிரம தர்மம்.

இஃது

கீழக்கல்லூர் முருகலிங்கசுவாமிகள் குமாரர்,

மு. ஆழ்வாரப்பபிள்ளையென்று பூர்வநாமம்பெற்ற

முருகதாசசுவாமிகளால்.

வசனமாயெழுதப்பட்டதை

இந்நூலாசிரியரின் முதன்மைபெற்ற

ஜேஷ்ட சகோதரர்

பாளையங்கோட்டை

மாஜிக்கிராமமுனிசீப் சீதாராமபிள்ளையவர்களின்

குமாரன் இராஜகோபாலபிள்ளையவர்கள் புத்திரன்

**P. R.** சீதாராமபிள்ளையவர்களால்

பல சைவ நண்பர்களின் விருப்பத்தின்படி

பாளையங்கோட்டை

சாரதா அச்சு இயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1095-ம் ஞு சித்தார்த்தி ஞு

கி. 1919-ம் வருஷம்

அணா எட்டு

R42
N19
67815

உ

சிவமயம்.

வடிவேல்துணை.

# கிரகாச்சிரம தர்மம்.

இஃது

கீழக்கல்லூர் முருகலிங்கசுவாமிகள் குமாரர்

மு. ஆழ்வாரப்பபிள்ளையென்று பூர்வநாமம்பெற்ற

முருகதாசசுவாமிகளால்,

வசனமாவெழுதப்பட்டதை

இந்நூலாசிரியரின் முதன்மைபெற்ற

ஜேஷ்ட சகோதரர்

பாளையங்கோட்டை.

மாசிக்கிராமமுனிசிபு சீதாராமபிள்ளையவர்களின்

குமாரன் இராஜகோபாலபிள்ளையவர்கள் புத்திரன்

P. R. சீதாராமபிள்ளையவர்களால்,

பல சைவ நண்பர்களின் விருப்பத்தின்படி.

பாளையங்கோட்டை

சாரதா அச்சு இயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1095-ம் ௵ சித்தார்த்தி ௵

1919-ம் வருஷம்

இதன்விலை அணா எட்டு.

உ

சிவமயம்.

## அறிவிப்பு.

இவ்வுலகத்தில் ஸ்திரீ புருஷர்கள் கிரகத்திலிருந்து இல்லற தர்மத்தை வழுவாது நடத்தி வீடுபேறடைதற்குரிய கிரமங்களைத் தொகுத்தும் விரித்தும் கிரகாச்சிரமதர்மம் என்று ஒரு நூலும் ஸ்திரீகளைக் குறித்துமட்டும் மகளிர் இலக்கணம் என்று ஒரு நூலும் எழுதப்பட்டதில் மகளிர் இலக்கணம் முன்னர்ப்பதிப்பித்து வெளியிடப்பட்டது இந்நூல் வாசிக்கும் நமது நண்பர்கள் கிரகாச்சிரம தர்மம் நடத்த இன்றியமையாது வேண்டற்பாலனவாகிய ஸ்திரீகளின் இலக்கணத்தைக் கூறப்பட்டுள்ள மகளிர் இலக்கணத்தையும் வாங்கி வாசித்துப்பார்த்துக்கொண்டு தங்கள் தங்கள் ஸ்திரீகள் சொற்றவறாமல் ஊசியும் சரடும்போல ஒத்துமையாக நடக்கும்படி சீர்திருத்திப் போதித்து தன் வசமாக்கிக்கொண்டு தர்மத்தை நடத்தி வீடுபேறெய்தல்வேண்டும்.

முருகதாசசுவாமி

ஆக்கியோன்,

கீழக்கல்லூர்.

67815

உ

வடிவேல்துணை.

இந்நூலாசிரியரான சிவபுரியென்று பேர்வாய்ந்த கீழக்கல்லூர் முருகலிங்கசுவாமிகள் குமாரர் முருகதாசசுவாமிகள் சரித்திரச்சுருக்கம்.

(1) ஸைடியூரில் கொல்லம் 1014-ம்ஹு வைகாசிமீ 15உக்கு 1839-ம்ஹு மேமீ 26உ சோமவாரம் இரவு முருகாவுடையார் பிள்ளையவர்களுக்கு 4-வது புண்ணியபுத்திரனாய் அனுஷ நக்ஷத்திரம் இடபராசியில் ஜெனனமாய் பூர்வம் ஆழ்வாரப்பன் என்ற பிள்ளைத்திருநாமம் பெற்று ஐந்தாம் ஆண்டில் கல்வி ஆரம்பம் செய்து 13 வயதுவரை தமிழ்ப்பயின்று 1027-ம்ஹு தைமீ 15வது வயதில் விவாகம்செய்யப்பெற்று 1031ம்ஹு 17வது வயதில் தூத்துக்குடியில் ஜேஷ்ட சகோதரரான சுப்பிரமணியபிள்ளையவர்களிடம் இங்கிலீஷ் வாசிக்கச்சென்றனர் 1855-ம்ஹு.

(2) அங்கு தமிழில் கொஞ்சம் தேர்ச்சிபெற்று பூர்வபுண்ணியத்தொடர்ச்சியால் திருச்செந்தூர் ஸ்ரீ முருகப்பிரானைப்பஜித்து வந்தனர் 1860—1861-ம் வருஷத்தில் ஜெனரல் டெஸ்டு ஆங்கிலோ வெர்னாக்கியூலரில் பாஸ் செய்தனர் வயது 21, 22.

(3) அப்பால் கல்லூரில்வந்து 26வது வயது 1040-ம்ஹு கார்த்திகைமீ ஸைடியூர் ஸ்ரீ காசிவிசுவநாதர் ஆலயத்தில் முருகப்பிரானைப் பஜித்துவந்ததும் தவிர 'சண்முகனைப்பாடு' என்ற வாக்கு உதயமாக அதை முதன்மையாகக்கொண்டு காங்கேயன்பேரில் பஜனை கீர்த்தனங்கள், சேரகுளம் சுவாமி சோமசுந்தரேசுவரர்பேரில் உளசற்கவிதை விருத்தங்கள் பாடி வந்தனர்.

(4) ஊழ்பற்றியிழுக்க 28வது வயதில் 1042-ம்ஹு தைமீத்துக்கு 1866-ம்ஹு திருச்செந்தூர் தபால் குமாஸ்தாவேலை பெற்று அங்கிருக்குங்காலத்தில் சில நண்பர்களைச் சேர்த்து ஸ்ரீ சண்முகர் பஜனைமடம் ஒன்று ஸ்தாபித்தனர். பிரமோத்திரகாண்டத்தில் சிவயோகிமகிமையுரைத்த சரித்திரம் முதலியதுகளை நாடகத்தமிழ்ப்பாமட சுமதுல்லாசம் என்று பேர்கொடுத்து 1068-ம்ஹுத்தில் அச்சிட்டு அரங்கேற்றினர்

(5) 31-வது வயதில் தூத்துக்குடி எ. அ. கலெ. ஆபீஸ் மொச்சியாயிருந்தபோது 1044-ம் ௵ கார்த்திகை ௴ பிதாவாகிய முருகலிங்க சுவாமிகள் சிவத்துடன் கலந்தனர். பின்னும் அநேகப் பிரபந்தங்களைப் பாடிவந்தனர். 32 வயதில் 1873-ம் ௵ செப்டெம்பர் ௴ குலசேகரப்பட்டணம் சப்மேஜிஸ்டிரேட் ஆபீஸ் குமஸ்தாவாக இருக்குங்கால் அந்தஸ்தலத்தில் ஸ்ரீ கச்சிகொண்ட பாண்டீசர் அறம்வளர்த்தம்மன்பேரில் ஊசல், நலுங்கு முதலிய பிரபந்தங்களியற்றி அச்சிட்டு அரங்கேற்றினர்.

(6) 33-வது வயதில் ஸ்ரீவைகுண்டம் தாலூகா எட் குமஸ்தாவாயிருந்தபோது 1047-ம் ௵ அங்கோர் பஜனைமடம் ஸ்தாபித்து சில நண்பர்களை பஜிக்கும்படி செய்துவைத்தனர். 1050-ம் ௵ 36-வது வயதில் துதிகை விவாகம். 38-வது வயதில் 1052-ம் ௵ புரட்டாசி ௴ மாதா சிவலோகமடைந்தனள். கார்த்திகை ௴ முதல் மூன்று மாசம் ரஜாபெற்று சில நண்பர்களுடன் திருச்சிராப்பள்ளி முதலான அநேகஸ்தலங்களுக்குப்போய் வந்தனர். 1053-ம் ௵ மாசி ௴ வயது 39ல் முதல் மனைவி பதியைமறந்து இவ்வுலகத்தை விட்டாள். ௸ ௵ பங்குனி ௴ த்துக்கு 1878-ம் ௵ தென்தெரிபேரி சினிமியூ இன்ஸ்பெக்டராயிருந்தபோது 1055-ம் ௵ புரட்டாசி ௴ ராமேஸ்வரம் முதலிய ஸ்தலங்களுக்கு யாத்திரைசெய்துவந்தனர்.

(7) வயது 42ல் 1056-ம் ௵ பங்குனி ௴ பெருங்குளம் செங்கோல் மடம் பண்டாரசன்னதியிடம் சிவபூஜை எழுந்தருளச் செய்துகொள்ளப்பட்டது..

(8) 1084-ம் ௵ ஜெனவரி ௴ த்தில் வயது 45ல் 59-ம் ௵ அங்கே ஒரு பஜனைமடம் ஏற்பாடுசெய்து சொந்தத்துக்கு ரூ 150 வரை செலவுசெய்து பஜனைச் சப்பரம் முதலானதுமுண்டாக்கி ஸ்ரீ முருகப்பிரானை பஜித்துவந்தனர். வயது 45ல் 1059-ம் ௵ தை ௴ வள்ளியூர் டிவிஷன் ரி. இ. வேலைக்கு மாற்றப்பட்டு வந்தபோது மேற்கண்ட பிரபந்தங்களையெல்லாம் ரூ 250 செலவுசெய்து 1885-ம் ௵ அச்சிற்பதிப்பிக்கப்பட்டது. [illegible] வள்ளியூர் ஸ்தலபுராணம், [illegible] முருகக்கடவுள்பேரில் கீர்த்தனங்கள், கந்தரந்தாதி முதலியவைகள் பாடி [illegible] அச்சிட்



டனர். சண்முகக் குருக்களுக்கு சங்கீதப்பயிற்றுவித்து ஒரு பஜனைமடம் ஏற்பாடுசெய்து பஜிக்கச்செய்தனர். கன்னியாகுமரி முதலிய ஸ்தலங்களுக்கு யாத்திரை போய்வந்தனர். திருச்செந்தூர் குகன்பேரில் பாடிய கீர்த்தனம் வகையறுவை அங்குசென்று அரங்கேற்றினர்.

(9) 52-வது வயதில் 1067-ம் ௵ தை ௴ அம்பாசமுத்திரம் தாலூகாவுக்கு மாற்றப்பட்டு அங்கிருக்குங்காலத்தில் மரகதம்மாள் பேரில் மரகதமாலையொன்று பாடி 1892-ம் ௵ அச்சிற்பதித்தனர். பின்னும் சில பிரபந்தங்களும் கீர்த்தனங்களும் பாடிக்கொண்டு வந்தனர்.

(10) 54-வது வயதில் 1068-ம் ௵ புரட்டாசி ௴ க்கு 1892-ம் ௵ அக்டோபர் ௴ முதல் தேதிமுதல் பென்ஷன் பெற்று கல்லூர் வந்தனர்.

## சிவாலயப்பணிவும் தொண்டும்.

இந்த ஊர் கன்னிமூலையில் ஒரு கணேசர் கோவில் 1066-ம் ௵ கட்ட ஆரம்பித்து 1068-ம் ௵ முடித்து 1069-ம் ௵ தை ௴ 19௳ புனர்பூச நக்ஷத்திரத்தில் ஸ்ரீ செல்வவிநாயகரென்று ஒரு விநாயகரை பிரதிஷ்டைசெய்தனர். தன் சொந்தமான ஸ்ரீ காசிவிஸ்வநாதர் ஆலயத்தில் 1067-ம் ௵ புரட்டாசி ௴ த்தில் நவராத்திரி கட்டளையொன்று ஏற்பாடுசெய்து நிலம்விட்டனர். 1068-ம் ௵ முதல் 1070-ம் ௵ வரை ௸ ஆலயத்தில் மகாமண்டபம் முதலிய அநேக திருப்பணிகள் ரூ 568 வரை செலவுசெய்து கட்டிவைத்தனர். நவராத்திரி உத்ஸவத்துக்கு சோடசதீபாராதனை தட்டுகளும் பீடம், பிரபை முதலிய சாமான்களும் ரூ 285 செலவு செய்து முடித்து வைத்துக்கொள்ள பெட்டகம் ஒன்றும் செய்தனர்.

1074-ம் ௵ வைகாசி ௴ 13௳ விகாரி ௵ வயது 60ல் சஷ்டிபூர்த்தி விசேடம் நடத்தினர். 1078-ம் ௵ முதல் 1080-ம் ௵ வரை கருவேல அறை பஜனைமடம் ரூ 370 வரை செலவுசெய்து கட்டிமுடித்து 1080-ம் ௵ தை ௴ அனுஷ நக்ஷத்திரத்தில் படமூர்த்தியை எழுந்தருளச்செய்து அபிஷேகஞ்செய்தனர். கதா

பிரசங்கம்செய்து 125 சரித்திரத்துக்கு லாவணிச்சிட்டை பாடியும் கதைக்கு முற்கூறிச்சொல்லவேண்டியதற்கு, பீடிகாவிதி யென்று பல சாஸ்திரங்களை கோர்வைசெய்து யெடுத்துத்திரட்டியும் கையெழுத்திலெழுதிவைத்தனர். 62-வது வயதில் 1076-ம் ௵ கார்த்திகை௴ திருவண்ணாமலை யாத்திரைபோய் சிதம்பரம் முதல் அநேகஸ்தலங்களுக்கு யாத்திரைசெய்து கோயில்பட்டி வந்து கல்லூர் வந்தனர். 1077-ம் ௵ ஆடி௴ பிரிதிவிஸ்தலம், சங்கரநயினார் கோவில், அப்புஸ்தலம், தாரகாபுரம் தேயுஸ்தலம், கருவநல்லூர் வாயுஸ்தலம், தென்மலை ஆகாசஸ்தலம், தேவதானம் யாத்திரை செய்து வந்தனர். 1079-ம் ௵ வைகாசி௴ க்ஷேத்திரம் வகையறா ஸ்தலங்களை யாத்திரைசெய்தனர். 1080-ம் ௵ ஆடி௴யில் வள்ளியூர் சண்முகர் சன்னதியில் வேலாண்டிப்பரதேசி 6 காவடி கட்டி யெடுத்ததைப்பற்றி காவடிவைபவமென்று ஓர் பிரபந்தம் செய்யப்பட்டது. கல்லூர் சண்முகம்பிள்ளை வேண்டுகோளின்படி இராமாயணப்பதத்துக்கு இசைய கும்மியாகபாடப்பட்டது. கல்லூர் புரவேலிநாதர் கோவிலில் நடேசருடைய அபிஷேகத்துக்கு ஒரு குறடு செய்யப்பட்டது.

1082-ம் ௵ புரட்டாசி௴ வள்ளியூர் ஸ்தலபுராணம் வகையறா அச்சிற்பதித்து தை௴ 21௳ முதல் 25௳ வரை வள்ளியூர் முருகன் சன்னதியில் அரங்கேற்றியது வயது 69ல் 83-ம் ௵ ஆவணி௴ 5௳ குருவாரம் கிரகாச்சிரமத்தை விட்டு லங்கோடு கௌபீனம் தரித்து வெள்ளைவேஷ்டி துறவடைந்தது. வெள்ளை வேஷ்டியை மாத்த உத்தேசித்து ஷ்டி ஆண்டு சித்திரை௴ 5௳ சுக்கிரவாரம் திருச்செந்தூர் முருகப்பிரான் சன்னதியில் காவி வஸ்திரம் முருகன் பாதத்தில்சாத்தி பிரசாதமாகப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

## மதுரை ஆவணிமூலயாத்திரை.

1908-ம் ௵ ஆகஸ்டு௴ 23௳க்கு 1084-ம் ௵ ஆவணி௴ யாத்திரை ஆரம்பம் 30௳ திரும்ப வரவு வாகனக்கவிதைகள் பாடப்பட்டது வடவாலவாய் திரு அப்பனார் தெரிசித்து 30௳ கல்லூர் வரவு.

1083-ம் ௵ மார்கழி௴ 17௳ திங்கட்கிழமையன்று நடந்த திருச்செந்தூர் அஷ்டபந்தனத்துக்குப் போய்வரப்பட்டது. 1093-



ம் ௵ மாசி௴ மகா மகம் கும்பகோண யாத்திரை மாசி௴ 18௳ ஆரம்பம். பங்குனி௴ 2௳ கல்லூர் வரவு அநேக ஸ்தலம் பார்த்து தெரிசித்து வரப்பட்டது. பங்குனி௴ 4௳ புதன்கிழமை கிரகத்தை விட்டு வெளியேபோனது வயது 69.

பங்குனி௴ புளியரைசென்று சேவித்துவரப்பட்டது காசிவிஸ்வநாதர் ஆலயத்தில் திருமதில் கட்டி கதவுசேர்த்து கணேசர், தக்ஷிணாமூர்த்தி, சுப்பிரமணியர், சனீஸ்வரன், சந்திரன், சூரியன் இந்த பரிவாரத் தேவதைகளுக்கு ரூ 260 செலவுசெய்து ஆலயம் கட்டி ரூ 125 செலவுசெய்து விம்பங்களமைத்து 1084-ம் ௵ சௌமியவருஷ ஆனி௴ 17௳ புதவாரத்தன்று இரவு நாழிகை 23-க்குமேல் 27-க்குள்ளாக அனுஷ நக்ஷத்திரம் இடபராசியில் அஷ்டபந்தன கும்பாபிஷேகம் ரூ 260 வரை செலவுசெய்து நடத்தப்பட்டது. ரூ 150 செலவுசெய்து மண்டலப்பூஜை நடத்தப்பட்டது. 1085-ம் ௵ ஆவணி௴ 15௳ 71-வது வயதில் காஷாயவஸ்திரம் தரித்து ஆண்டான் அடிமைத்திறம் நோக்கி "முருகதாசன்" என்ற பேர்வகிக்கப்பட்டது.

## மலையாள யாத்திரை

வயது 73 1087-ம் ௵ கார்த்திகை௴ 25௳ புறப்பட்டு கொல்லம், ஆலப்புழை முதலியவைகள் கடந்து வைக்கம்போய் அஷ்டமிதெரிசனம்செய்து கொச்சிமார்க்கமாய் வடக்கன்பாலூர், திருவஞ்சைக்களம், கொடுங்களூர், திரு ஆல்வாய் சேவித்து கல்லூர் வரப்பட்டது. 1089-ம் ௵ ஆடி௴ 18௳ சங்கரன்கோவில் முதலிய ஸ்தலங்களுக்கு யாத்திரைசெய்து ஆடி௴ 26௳ திங்கட்கிழமை கல்லூர் வரப்பட்டது.

## காசியாத்திரை.

1089-ம் ௵ ஆவணி௴ 9௳ ஆரம்பித்து திருவண்ணாமலை பண்டாரபுரம் தெரிசித்து, பூனாதேசம், பம்பாய் கடந்து நாசிக் மார்க்கம் பஞ்சவடிதெரிசித்து கோதாவரி நதியாடி இராவணன் சீதையைக் கொண்டுபோன பர்ணசாலை இருந்த இடம் பார்த்து ஜப்பல்பூர் வந்து நர்மதை தீர்த்தமாடி பிரயாகைஎன்ற அலகபாத் வந்து திருவேணி சங்கமத்தில் ஸ்நானமாடி கங்கையாடி தீர்த்த

மெடுத்துக்கொண்டு காசிக்கு ஆவணி ௴ 28௳ சுக்கிரவாரத்தன்று வரப்பட்டது. தீர்த்தமாடி சுவாமி தெரிசனம்செய்தது அப்பால் அயோத்திமார்க்கம் கான்பூர் வழியே ஆக்ராசென்று டாஸ்மால் பார்த்து அப்பால் வடமதுரை சென்று யமுனாதீர்த்தமாடி பிருந்தாவனம் கோவர்த்தனம் பார்த்து தெரிசித்து டெல்லியென்ற அஸ்தினாபுரம் பார்த்து குருக்ஷேத்திரம்பார்த்து தீர்த்தமாடி மாயாபுரிப் பட்டினமென்ற ஹரித்துவாரம்வந்து தீர்த்தமாடி தீர்த்தமெடுத்துக் கொண்டு அயோத்தி தெரிசித்து அயோத்தியில் சரயுநதிதீர்த்தமாடி ராமரைதெரிசித்து காசிமார்க்கம் கயாவுக்கு வந்து பிண்டம்போட்டு அப்பால் கல்கத்தாவுக்கு வந்து காளியை தெரிசித்து அப்பால் ஜெகநாதம்வந்து சுவாமி தெரிசித்து இராஜமயேந்திரம் வந்து அகண்ட கோதாவரியில் தீர்த்தமாடி சென்னப்பட்டணம் மார்க்கம் அற்பசி ௴ 25௳ திங்கட்கிழமை யன்று கல்லூர்வரப்பட்டது.

## இராமேஸ்வர யாத்திரை

1083-௵ கார்த்திகை ௴ 10௳ கல்லூரிலிருந்து பிரயாணமாய் மதுரைமார்க்கம் இராமேஸ்வரம் சென்று தீர்த்தமாடி அபிஷேகஞ்செய்து தெரிசித்து டிஷ ௴ 18௳ கல்லூர்வரப் பட்டது.

காசிபோனவர் கன்னியாகுமரி போகவேண்டியதால் ஆடி அம்மாவாசைக்குச்சென்று தீர்த்த அபிஷேகம்செய்து சுசீந்திரம் வகையறா ஸ்தலங்கள் தெரிசித்து கல்லூர் வரப்பட்டது. ஆடி ௴ சங்கரன்கோவில்போய் கழுகுமலை தெரிசித்து யாத்திரையை சமாப்தி செய்தனர்.

கிரகச்சிரமகர்மமென்றும் மகளிர் இலக்கணமென்றும் இரண்டு நூல்வசன நடையில் நமது சைவ நண்பர்கள் ஸ்திரிகளுக்கு உபகாரமாகும்படி செய்து வெளியிட்டு அச்சிடப்பட்டது. அதுமுதல் 1094-௵ மாசி ௴ வரை வயது 79 மாசம் 10 கடந்துவிட்டது. இனிமேலுள்ள சரித்திரத்தை பின்னிட்டு வெளியிடப்படும். சித்தாந்த சாஸ்திர ஆராய்ச்சியின்பேரில் கடவுளை தியானித்துக்கொண்டு இருக்கின்றனர்.



## விஷேடக்குறிப்பு

இந்த சுவாமிகள் ஜீவதிசையில் 17 வயது முதலாக முருகப்பிரான் திருவருளுக்காளாக்கினதாகத் தெரியவருவதில் ஜீவகாலத்தில் 20 வருஷம் சர்க்கார்பந்தத்தில் சிக்கியிருந்தாலும் அதை ஒரு பொருட்படுத்தாது உதிரகால க்ஷேபம்மட்டில் சிலவு செய்த காலம்போக மிகுதியுள்ள காலத்தையும் இப்பந்தம் நீங்கினகாலம் முதலுள்ள பூறுக்காலத்தையும் கொஞ்சங்கூட அவம்போக்காமல் கீர்த்தனங்கள் பிரபந்தங்கள் செய்வதிலும், பஜனைமடங்கள் ஸ்தாபிப்பதிலும் அன்பர்களை ஆங்காங்குகூட்டி பாடபயிற்றுவித்து கடவுள் திருநாமத்தைப் பஜிக்கப்பழக்குவிப்பதிலும் சிவ ஆயலப்பணி செய்வதிலும் ஸ்தலயாத்திரையிலுஞ் செலவிட்டதாகத் தெரியவருகிறது. இது ரொம்பவும் வியக்கத்தக்கதே. இது பின்னுள்ளவர்களுக்கும் அறிகுறியாய் வெளிப்படுத்தவேண்டுமென்ற ஆவலால் சுவாமிகள் அனுமதிபெற்று, இந்த சுவாமிகளால் யாத்திரை விஷேடக்குறிப்பு முதலான விஷயங்களைப்பற்றி ஸ்தலயாத்திரை ரோட்டு என்னும் சரித்திரமென்னும் இரண்டு நூல் வெகு விரிவாய் எழுதியிருப்பதில் அநேக விஷயம் எல்லாச்சைவ நண்பர்களும் அறிந்துகொள்ள வேண்டியதாயிருந்தாலும் பூறவும் அச்சுப் பதிக்க வேண்டுமானால் 15 பாரங்களடங்கிய ஒரு புஸ்தகமாக அமைவதை உத்தேசித்து டிஷ நூல்களிலிருந்து ரொம்ப சுருக்கியெடுத்து இந்த நூல் மூலமாய் வெளியிட்டிருக்கிறோம்.

இப்படிக்கு

இந்நூலாசிரியரின் மாணாக்கர்

புதூர் சுப்பிரமணியபிள்ளை, மேலக்கல்லூர்.

இஜாரா திரவியம்பிள்ளை, திருநெல்வேலி.

அப்பாப்பிள்ளை என்ற சித்திரசபாபதியாபிள்ளை

திருநெல்வேலி

பி. ஆண்டியப்பன் செட்டியார், காரைக்குறிச்சி

## மதுரை ஆவணிமூலத் திருநாள் வாகனக்கவிதை

### ஆசிரிய விருத்தம்

1. கரிக்குருவிக்குபதேசஞ்செய்தது.

மருப்பொலியு மதுரைநகர்ச்சொக் கேசரங்கயற்
கண்மங்கையோடு
முருப்பெரிய பொன்னூற்செய்சப்பரத் தாவணிமூல
வுலாப்போந்தன்ப
ரிருக்குமறையோதவும் பின்றமிழ்வேத முழங்கிடவுமெ
ளிமையான
கரிக்குருவிக் குபதேசஞ்செய்த திருக்கோலத்தைக்
கண்ணுற்றேனே. (1)

வலியானுக்குபதேசம் நண்பகலிற் செய்தபிரான்
மங்கையோடு
நலியாதகற்பதரு மீதமரிமேலுற்றும்
கண்ணும்வீதி
கலியாததொண்டர் குழாம்நெருங்கிடூர சங்கார
தஞ்சமென்று
மொழியோ யாதவைதபிரவிற் கேட்டேனென்
மலர்க்கழுறப்பெற்றேனே. (2)

2. நாரைக்குபதேசஞ்செய்தது.

பாண்டியனு யுலகாண்டோன் பகற்போதில்நாரை
யைத்தன்பதத்தில் சேர்த்தான்
வேண்டுவர மளித்திடவே யிரவிலேபூதத்தின்
மேலேவந்தான்
மாண்டகையவன்னத்தின் மீனலோசனிவந்தாள்
மகிழ்ந்துகண்டே
னீண்டவ்விதன்னிலின்னம் பிறந்திடேன்
றிருவடிக்கீழெய்துவேனே (௩)



(3) மாணிக்கம் விற்றது

வழுதிக்குமுடிசெய்து புனைந்திடவே வணிக
னுய் கிறுகினூடு
பழுதிலாமாணிக்கம் பகர்ந்திர விற்கைலைமலை
மீதும்பாவை
விழுமியநற்றேனு விதுமெழுந்தருள விண்ணோ
ருமண்ணுளோருங்
குழுமிவர வாலால சுந்தரனற்றிருக்காட்சி
கொடுத்திட்டானே

4. தருமிக்குப் பொற்கிழியளித்தது

கருவுக்குள்ளடியர்களையாழ்த்திடாப்பாஞ்
சோதிகன்னியோடுங்
திருவுற்றநகரிமீதுஞ் சப்பரத்தின்மேலும்வந்து
தெருவினூடே
மருளற்றவெனது வினையிரவினில்வந்தகற்
றினன்மறைவலான்
தருமிக்குப்பகலிலே கிளிகொடுத்தான
வனிருதாள் தலைக்கொண்டேனே

5. உலவாக்கோட்டையருளியது

நிலவாருஞ்சடைதரித்த பரமசிவன்வருமை
யுற்றநேசற்காக
வுலவாதநெற்கோட்டை யருளினனன்றிரவு
வுமையாளோடு
சுலவாத நந்திகேச்சான்யாழிவாகன
மேற்றோன்றக்கண்டு
பலவாறுய்த்துதிசித்தேன் மனமகிழ்ந்தேன்
சுகவாரிபடிந்திட்டேனே.

6. அங்கம்வெட்டியது.

கங்கைமதியணிந்த பிரான்குருபன்னிகை
தொட்டகள்வன்றனை
யங்கங்கள் ஒவ்வொன்றும் வகைசொல்லிக்
குருவுருக்கொண்டடைந்துவாளாற்
பங்கஞ்செய்துயிர் கவர்ந்தானிரவுபா
பரையுடனே விடையிற்றோன்றி
வெங்கழுவிற் சமணர்களையேற்றினான்
கண்டென் வினையாற்றினேனே.

7. வளையல் விற்றது.

அணியுமணிப் பொன்சிவிகையீதேறி
யங்கயற்கணம்மையோடு
வணிகமடமாதருக்குச் செட்டியாயுருக்
கொண்டு வளையலிட்டான்
பணியாவப்பூணுடையான் தானுண்டபோது
பணிபரனைப்போற்றி
நணியிரவில் நங்கைதரமுடிசூடிக்கோல்
வாங்கிநகராண்டானே.

8. ஆவணிமூலம் இரவு நரிபரியாக்கியதுகாலை

ஊடல் தணித்தது.

காலையிலே விறைசெய்கள்யாவு மனமொ
வ்வாமற் கசந்தேனடும்
சேலையார் தண்ணிக்கு நடராசரூபமாய்
த்தேற்றிக்கேளாள்
மேலையுள சொத்தெல்லாமுன்னதெனவரைந்
தோலைவிளக்கியிருந்து
மாலைதாழ்குழலிமனந்திருத்தினன்றனைவண
ங்கப்பொருத்தினனே.



ஆவணிமூலத்தன்று வாதவூரடியார்க்குப்
பரிகளெல்லா
மேவுமெனச்சொற்றபடி நரிக்கூட்டங்
களைத்திரட்டிப்பரியாய்விட்டுக்
காவலனுக்கொப்பித்துக்கயிறளித்துபின்
நரியாய்க்காட்டியுய்க்கரன்
வாவுமுயிர் தோறுமொளித்திசெல்வ
னடலையார்வழுத்தவல்லரா.

பரிநரியாய்ச்செய்தவன்பின்பொன்றாவே
அடியாரைப் பாண்டிவேந்தா
லரியதுயர் செய்வித்தானது பொறுக்காதன்
பாமுவந்திக்காக
பெருவெள்ளம்வரச்செய்து கூலியாளெனவந்து
பிட்டுத்தின்று
னரியநதியுடைப்படையாதிறைவன்கைப்
பிரம்போச்சவொளித்திட்டானே.

ஒளிக்கவே வந்திதனதடிசார்ந்தாளிரவில்
விடையூர்ந்துவந்தா
னளிக்கையாலடித்தவடி தன்றோடெவ்வுயிரும்
பட்டான் செய்யாடல்
விளக்கியதால் கூலியாளானெனமீனவ
னுணர்ந்துவியப்புற்றன்பாற்
பனிச்சிவிடைகொடுக்கமணிவாசகரும்
பெருந்துறையாம் பதிசார்ந்தாரே

இசைவாது வென்றது
விறகுவிற்றது

விருத்தம்.

இசையினால் யாவரையும் வென்றுவருமே [illegible]
[illegible]டான்
நசையின்றோமதுரைவந்தான வனைவென்றிட
நங்கைபங்கனன்பரல்

வசையிலாப்பத்தர் தமக்கடிமையென
விந்தனந்தன்முடி மேல்வாங்கி
தசையொடுங்குழுதியவனுய் விறகுவிற்றுன்
கண்டவன்ருள் சரண்புக்கேனே.
கொள்ளாதவில்லைசொல்லிப்பகற்போது
நீக்கியொருகுடிசையெய்திக்
கள்ளாருமிதழியான்மாடக நல்யாழ்வீக்கிக
கனிவாயாரும்
விள்ளாதசாதாரிப்பண்பாடக்கேட்டேம
நாதன்வெள்ளி
யுள்ளாத நெறி யெய்திப்பரிசனத்தோடவ்
வூர் விட்டோடினுனே.

## காசியாத்திரைக்கவிகள்

### முருகதாசசுவாமிகளாலியற்றிய வெண்பாக்கள்.

1089-ௗ ஆவணிமீ 9உ ஆரம்பம்.

1. நெல்லைப்பதி சிங்கமொன்பதிலே நீங்கித்திருத்
தில்லைப்பதிபத்திற்சென்றமர்ந்து—தொல்லைவினை
போகநடராஜன் பொற்பதத்தை கைதொழுதோர்
தாகமுடன் எல்லோருஞ்சார்ந்து.
2. பன்னொன்று காலைப்பதி அண்ணாமலைக்கு
அன்னின்றுமாலை யினிலங்கெய்தி—பொன்னென்று
மேனியான் உன்னுவோர்தங்கட்கு மேல்வீடு
தானருள்வானைத்தாழ்ந்தோம்சார்ந்து.
3. நாறு உச்சிதனிலார்க்கோணத்துக்கேறி
மாறிலாதஞ்சுமணிவந்தெய்தி—ஏறுபுகழ்
பண்டரிக்குட்டிக்கட்டுப் பத்தியுடன்பெற்றேறி
கண்டுயில்கொண்டோமங்குகாண்.
4. பன்மூன்று ... கங்கபத்ராநதிமூழ்கி
அன்னின்று கிருஷ்ணாநதியடைந்து—... ... ...
நன்மனத்தோடாடி நவியும் பசிநீக்கி
அன்னிலையில ... யமர்ந்தோம் ... ... ...



5. ஈரேழுநாலையிறங்கினேம் பார்சியினில்
ரோகவுண்டு பின்னர் நீங்கிரெயில்—சீருடனே
ஏறினேமாலையினி லெய்தினேம் பண்டரியில்
கார்வண்ணன் விட்டலனைக்காண.
6. சந்திரபாகாநதியில் நானுடி ரெண்டுதினம்
அந்தமொடு செய்கிரியையாற்றியே—சிந்தையுற
வந்தித்திரெட்டில் வழிக்கொண்டு பம்பாய்க்கு
வந்தனம் பார்சிரோட்டிலே.
7. மற்றைநாள் பூனவில் வந்திருந்து காலையினில்
உற்றபசி நீக்கி யொருங்கேறி—கற்றவர்கள்
செல்வர்வாழ் பம்பாயில் சேர்ந்தோம் ஈ ரெண்பானின்
நல்லமழையால் நனைந்தோம்யாம்.
8. பத்தொன்பதாந் தெய்தி பம்பாய்தனிலிருந்து
பத்துமுடியோன்றங்கை பாசமுடன்—நத்தணியும்
நாசியறுபட்டதனுல் நாசிக்கெனப்பெற்ற
ஆசிவிடம் வண்டிவிட்டோமாங்கு.
9. அப்பால் வடமுகமாய் ஐந்துமயிலூரடைந்து
ஒப்பிலாப் பஞ்சவடியுற்றேரும்—அப்படியே
நாலுமணியானதினுல் நானக்கடனுற்றி
பாலுள சத்திரம் வந்தோம்பார்.
10. மற்றைநாள் தென்முகமாய் வந்திடுங்கோதாவரியில்
உற்று சங்கற்பாதி ஓதி—முற்படிந்து
உண்டபின் பண்டுள்ள பன்னசாலையுமூறுங்
கண்டனமால் பொற்பார்கழல்.
11. இருபாணேர் தெய்தி இருந்தோம் ஸ்தலவாசம்
வருநாளில் நாசிக்குவந்து—கருதியே
செப்பல்பூர் நாடியே டிக்கெட்டெடுத்தேறி
அப்போடன்னமற்றேமேயன்று.
12. மன்வாடு மூசாவல்விட்டு வந்திட்டார்க
தன்னில் மற்றோர் வண்டிதாண்டியே—பன்னும்
இருபான் மூன்றூர்தெய்தி எட்டுமணிவேளை
வாலானேம் செப்பல்பூர் மற்று.

13 மதிலைந்து தெற்காய் வருமாமு மேற்றிசையாய்
பயில் நர்மதா நதியில் பண்டாய்—கைல்மலை
கொண்டருச்சிக்காடிக் கொதிக்குட்சிரீதை
அண்டிலேனைமல்லில் செயில்.

14. செப்பல்பூர்விட்டுத் திருப்ப சொரிசேரி
அப்பணனி கங்கை யமுனை—ஒப்புடன்சேர்
பிரயாகைவேணிப் பெருந்தீர்த்தமாடினோம்
பிறகய்யாவேது பிறப்பு.

15. பின் மூன்று நாளிருந்து பேறுபிருயாக்தேமன்
றன்னிலேயாக்கண்டம் செயிநுற்று—தன்னேரில்
காசி யிருபத்திகட்டில் காலை அக்கிரவாரத்தில்
ஆசையுடன் வந்தடைந்தோமாங்கு.

இது முருகானந்த சுவாமி சொன்னது.

16. எங்கும் சிவலிங்கம் எங்கும் சிவாலயங்கள்
தங்குமிடமெல்லாஞ் சத்திரங்கள்—அங்கங்கே
கட்டுப்படித்துறைகள் கங்கை சூழ் காசிநகர்
இட்டாது பாவிகளுக்கே.

மு ஆ. சொன்னது மூர்த்தி மகிமை.

17. மூர்த்திதலந்தீர்த்த மெனமுன்னோர் மொழிந்ததெல்லாஞ்
சேர்த்திபெறு காசிக்கேதேற்றம்—போர்த்துமொரு
தெய்வதலமுண்டேன்று செப்பல் உபசாரம்
ஐயமில்லை யென்றே அறி.

விருத்தம்.

18. எத்தல மேனுமூன்றிலொன்றி ரண்டேற்றமாகு
முத்தமக காசி தன்னில் மூன்றினுக்குயர்வுமொப்பும்
சத்தியம் இல்லையெனவே சாக்ஷியமிருப்பதாலே
இத்தலமதற்கே மூன்றும் தேற்றமென்றியம்பினேனே.

18. இத்தகைவைப்வங்கள் எத்தலந்தன்னிலேனும்
சித்தமாய் நடக்கக்கண்டார் கேட்டபேர் சிறிதுமில்லை
முத்தியையளிக்குமிந்த மூர்த்தியே மூர்த்திபூவில்
எத்தகு மூர்த்திமேனும் இதன்கிணையாகுமன்றே.



19. எழுவகைத்தோற்றமாக எழுந்திடுஞ் சீவர்க்குள்ளே
பழுதறக்கலந்திருக்கும் பான்மையும் சாதிபேதம்
வழுவுறுதாழ்வுமேன்மை மற்றெலாம பேதமென்று
தொழுபவர்க்கிங்கு காட்டத்தோன்றியேயிருக்கின்றானல்.

20. ஆதலாலன்பரொல்வாங் கையினாலபிஷேகித்தும்
காதலால் மலர் அர்ச்சித்தும் கையினால் ஸ்பரிசித்தங்கு
வேதனந்தூபதீபஞ்செய்து நற்றமிழ்வேதத்தை
ஓதியும் இறைபாதத்தை யுட்பதித்திறைஞ்சுகின்றார்.

வெண்பா தீர்த்தமகிமை.

21. அங்கக்குறைவின்றியாக்கியதலால் காசி
தங்கி விஸ்வேசன் பொற்றாள்பணிய—அங்கை
அலர்துவகோட அன்றெழுதிவைத்த
மலர் அயனுக்கென செய்கைம்மாறு

விருத்தம்.

22. தீர்த்தமோ பராயின்கையில்ஜெனித்தவள் முனிகோபத்தால்
நாத்தியாய்ப்போன முன்னோர் நற்கதிசேரவேண்டிப்
பார்த்திபன் பகிரதன் செய்தவத்தினால் பாரில்வந்தாள்
சீர்த்தியுமுர்வும்வாயால் செப்பிடவல்லார் யாரே.

23. புண்ணிய தீர்த்தமென்று புகன்று பல் க்ஷேத்திரத்தில்
நண்ணியாகாடுகின்றார் நாடுங்காலத்தீர்த்ததில்
எண்ணரும் பெருமைபெற்ற கங்கையங்கிருந்தாளென்று
மண்ணுள்ளாருணர்ப்பதல்லால் மற்றொன்றுங்கேட்டிலோமால்.

24. யாத்திரை செய்வோர் கங்கை தீர்த்தினை யெடுத்துநல்ல
பாத்திரந்தனிலடக்கி பண்பொடு பூசிக்கின்றார்
ஓர்ந்தியாயனந்தமாண்டு கெட்டிடாதிருத்தல் ஒன்று
மாத்திரம்போதும் வேறு வழுத்திடவேண்டாமாதோ.

ஸ்தலமகிமை.

25. ஜீவர்கள்முகருங்காலை வலப்புறச்செவியிலீசன்
மாசறுதாரகத்தை வழுத்தி விடளிக்கின்றானல்
மேவியடயிருமந்தச் செவிவழிவெளிப்பட்டேகும்
பூவில் மற்றெத்தலத்தை யிதற்கிணைபுகல்வதம்மா.

26 மரித்திடும் சவர்தம்மை யிமத்தில் விறகில்வைத்து
நெருப்பிடுகின்றார் சத்ததாதுக்கள் நிறைந்ததேகம்
கரிப்படும்போதுப் பேரத நாற்றத்தைகண்டிலோமால்
விரித்திடி வித்தலத்துக்கிதுவொரு விசேடமாமே.

27. மற்றயதலங்கடன்னில் மனிதராயவதரித்துக்
குற்றமாம் பிறவிலே குளித்துமாய்வதனைப்பார்க்க
கற்றுளார்வாழுமிக்காசிக் கர்த்தயமதாக
உற்றிடுவதற்காம்புண்ணியம் உள்ளதேல்போதுமன்றே

28 பிறவிநோய்தீருமென்றும் பேறுவேண்டியதேயென்றும்
துறவுநல்மார்க்கமென்றும் துணையெனவருவோரெல்லாம்
அறவுந்தீங்குடையாரென்றும் அறிவிலனேனுங்காசி
குறுகியே வசிக்கிலெல்லாப்பேறுங்கைகூடுமன்றே.

யாத்திரை வெண்பா

29. சுக்கிரவாரத்தில்த் தாய்கேதாரக்கட்டம்
சக்கரதீர்த்தம் கர்ணிதான்படிந்து—அக்னியும்
காசிவிஸ்வேசன் கழல்கண்டு கங்காபி
ஷேகஞ்செய்தேத்தினோம்சென்று.

30. கன்னிபன்னிரண்டினிலே காசிநகர் தன்னைவிட்டு
பசனுமாக்கிராவுக்குப் பண்பாய்ச்—சொன்னவழி
டிக்கெட்டெடுத்தேறிச் சேர்ந்து மறுநாள்மால்
ஏற்கட்டிடம் பார்த்தோம் நாம்.

31. மாலவதாரஞ்செய்த மாமதுரா நன்னகரில்
காலை யமுனாநதியைக்கண்டுபடிந்—தேலவே
கஞ்சன்வதமுதலாக் கண்ணனுடல் பணிந்தோம்
அஞ்சி நமனம்மையணுகான்.

32. மூவைந்துதேதி ப்ரந்தாவனத்தை முந்தியே
தாவு யமுனாநதி தீர்த்தந்தானாடி—மேவியசீர்
கண்ணனுடல்கண்டு கைதொழுது மற்றைநாள்
நண்ணினோம் மாமதுரா நாம்.



33. கோவர்த்தனகிரியைக் கூடியேபன்னேழில்
ஆவலாய்மானச தீர்த்தம் ஆடிச்—சேவித்து
மாலையினில் மீண்டு மதுரை வந்தோமன்றிராக்
காலம் டெல்லிக்கேகக்காண்.

34. ஈரொன்பானில் டெல்லியெய்தினோம் பண்டிதற்குப்
பேனுஸ்திரபுரியாய்ப் பேசுவார்—சீர்பெற்ற
க்ஷேத்திரத்தில் கோட்டைமுதல் சித்திரிப்புநோக்கிகுரு
க்ஷேத்திரத்துக்கேறினோம் செல்ல.

35. பத்தொன்பான் தெய்தி குரு க்ஷேத்திரத்தில்பணபாகத்
தத்து புனலாடிபசனஞ்செய்து—விஸ்தார
யுத்தகளம் பார்த்தேயுவந்தரியைச்சேவித்து
பற்றிரெயிலேறினோய்பார்.

36. ஆயர்மேவிந்திரனுக்குண்டான சீற்றத்தால்
மாயமழையேவினன்மாள—மாயவனார்
கண்டுமலையைக்குடையாய்க்கைபிடித்த க்ஷேத்திரத்தை
அண்டியே கண்டுவந்தோமால்.

37. அரவக்கொடியோனுமைவர்களுமன்னாள்
மருவியேபோரசெய்துமாண்ட—குருநாம
க்ஷேத்திரத்தை கண்ணுற்றுச்சேவித்து வந்தடைந்தோம்
ஆத்திரமோடஞ்சரித்துவாராம்.

38. முன்செய்தவப்பேற்றால் மூவாதமாயா
நன்புரியை இன்று வந்து நண்ணினோம்—அன்போ
டிரித்துவாரக் கங்கையாடினோம்பாவம்
அரித்துக்கொண்டேனுளம்மை

39. மூன்றுதினந்தங்கி மூழ்கினோம் தீர்த்தம்பின்
னான்குநாள் தீர்த்தமெடுத்தாடியே—வான்றிகழுங்
காசிக்கனுப்பிவிட்டுக் கார்வண்ணனயோத்தி
மாசில்நகர்க்கேகினோமற்று

40 சரயுநதியாடித் தங்கிரண்டுநாளில்
அரவணையானாலயங்கள்கண்டு—இரவினிலே
காசிநகர்க்கேகிக் கன்னியிருப்பத்தாறில்
ஆசையுடன் வந்தமைந்தோயால்

41 பின்னோன்பான் நாளிருந்து பிஞ்ஞகனைச்சேவித்தே
இன்னுமுள்ள நற்கிரியையெல்லாம்—நன்னயமாய்
ஆற்றிநற் றீர்த்தமனுப்பித்து லாவியில்
சாற்றுங்கயா சார்ந்தோமால் பற்குனிநதி

42 ஐந்து தினந்தங்கி அரும்பற்குனிமால்
அந்த பதம் அக்ஷவடமார்ந்து—வந்தவர்கள்
பிண்டங்கள்போட்டு பிதிர்தர்ப்பணமாற்றி
அண்டினேம் கல்கத்தா ஆங்கு

43 ஈரைந்தில் கல்கத்தாவீடில் ஜெகாதம்
ஏர்விஜயமாநகரமெய்தி—பார்புகழுங்
கோதாவரியாடிச்சென்னை வழிக்கூடிதலாம்
மாதமிருபானைந்தில் வர்

சம்பூரணம்.

இந்நூலாசிரியரின் மாணாக்கர் திருவிதாங்கோடு சமஸ்தானம் வடக்கன்பரவூர் பழனியப்பபிள்ளையவர்கள் மகவீர் இலக்கணம் பார்த்த மேல் எழுதியனுப்பிய கவி.

ஆசிரியவிருத்தம்

களிதுளும்புமுளமுருகும் கரைகடந்தானந்த
வெள்ளங்கவிழ்ந்துபாயும்
மளிதுளும்புமிதழ்துடிக்கும் மொழிகுளறும்
குறுவேர்வைவதனங்காட்டும்
நளிதுளும்பும் விதிர்விதிர்க்கும் அருள்பழுக்குமி
ருள்வழுக்கும் நலங்கள்வாய்க்கும்
ஒளிதுளும்பும் முருகதாசன் சொல் மகவியல்
பொழுக்கமோதுவோர்க்கே.

---

சிவமயம்.

இஃது

சாற்றுக்கவிகள்.

திருநெல்வேலியைச்சேர்ந்த பாளையம் வண்ணைநகர் ஸ்ரீமத் சுந்தரமூர்த்தி பௌராணிகரவர்களியற்றியது.

ஆசிரியப்பா.

மணிமுடிப்பணாடவி மாசுணந்தாங்கிய
வணிமுடிப்புவிக்கோர் அங்கமாய்விளங்கிய
வல்லைநீர் நகர்களினிலங்கியமுகமாம்
நெல்லைமாநகரிதி னேர்தருதிலதமாய்
பன்னரு வளத்தது பாவலர் புகழ்வது
நன்னறுமலருளார் நாடிநன்குறுவது
செங்கோன்மடத்தலர் திகழ்தருசைவமாந்
தங்கோனடாத்திய தன்னிகரில்லது
ஆயிரமாரமொடாரகினுவல்சூழ்
தாமிரபர்ணியைச் சார்பினிலுற்றது
வலாரியேமுதலினோர் வந்துவந்தனைசெயுஞ்
சிலாபுரியென்றிடுஞ் சீர்க்கல்லூரே
இந்நகர்தனிலோ ரிருவகையறங்களும்
தந்நிகரில்லெனத்தானே தாங்கினோன்
அறம்புகழொழுக்கமன் பாசாரத்தினிற்
றிறம்புதலில்லாச் செய்தவப்பெரியோன்
கங்கையாதிறைதரு சங்கரன்றருளிய
கங்கையின்குலம்புரி சங்கையிறவத்தோன்
சொற்றவக்கல்லூர்த் தூயநற்பதிதனி
லற்றவர்க்கருளா லயமிறவிப்
பரிவாரங்களும் பாங்குறப்புரிந்துத்
துரியாசிரமியுந் தொழுதுளங்களிக்க

நித்தியமுதலா நிறைதிருவிழாக்கள்
பத்தியினடத்திய பத்தரினுத்தமன்
யோகியர்தமக்கே யுரியதுஞானமென்
றாகியகருத்தானருந்துறவுற்றோன்
முருகலிங்கப்பேர் முனிவரான்றவத்தாற்
குருலிங்கத்தொடு கூடுசங்கமமோர்
வடிவெடுத்தாங்கு வந்தவதரித்து
முடிவிலாப்பேரற முற்றுநன்கியற்ற
ஆங்கிலமதனோடருந்தமிழ்க்கடலையும்
பாங்கினிலுகர்ந்ததிற் பாரித்தோங்கிய
முப்பொருளியறலை முற்றுநன்குணர்ந்து
வப்பொருட்டிறந்தனி லகஞ்செலத்தானும்
இல்லறத்திருந்தநா ளியல்புளோர்றிதர
நல்லறநூற்பல நவிற்றிநன்குணர்த்தி
உத்தியும்யோகமு முறுதலால் ரெவினியூ
வுத்தியோகத்தினி லுயர்பதமடைந்தும்
அருங்கலைகற்றிலு மாங்கதுகேட்டலும்
ஒருங்குறத்தெளிதலு முடைமையென்றுன்னிநன்
னூட்கழித்தொழுகுறு நர்ட்களின்சிவ
னூட்களுக்குரியதர் மருங்கதைபுரிந்து
தந்தைசெய்யலாயத் தன்னிலப்பணியொடு
முந்தரன் பஜனைகண் முறைமுறைபுரிந்து
சங்கரனுமையவ டப்புகழ்க்கீர்த்தனம்
இங்கரனடியர்களிசைத்திடவிசைத்துப்
பாவோநூற்களும் பற்பலவியற்றி
நாவோர்செவிகளு நன்குறவருத்தி
வானுண்முழுதுமம் மலைமகடுணைவனற்
றாணுண்மலரலாற் றன்னுளத்தறியா
முருகதாசப்பெயர் முனிவனுமுன்னையோர்
அருகினிலாள்வா ரப்பனென்றிசைப்போன்
உதாரணச்செய்யு ளோடியர்தமிழ்நடைதன்னிற்
சதாரணமிதுவெனச் சற்சனர்புகழ்தரச்
சிரகத்தாஸ்ரம சித்தியமெண்பதோர்
வாகத்தவமுறு மாண்புறுநூலொடு



மாதவர்புகழ்தரு மகளிரிலக்கணம்
என்றெனப்பெயர்கொடுத்தியற்றிய நூலையும்
ஆக்கினனவற்றினரும்பெறற்பெற்றியை
நோக்கிடிற்சொற்சுவை நண்பொருட்சுவைபல
வமைந்துயர்புலவர்க் கமுதெனலாகிச்
சமைந்துறலாலவை தம்மியல்பிற்றென
வன்னொரு நாவாலிசைப்பட்டதோ
பன்னருஞ்சிறப்பிற் பாரினுள்ளீரே

---

அம்பாசமுத்திரந்தாலுகாவடக்குகாராகுறிச்சி தமிழ்ஸ்கூல்
உமையொருபாகஞ்செட்டியாரவர்கள் இயற்றிய சாற்றுக்கவி.

## விருத்தம்

ஆசு மதுரநற்சித்ர வித்தார வமிர்தகவி
பேசுஞ்சிலாபுரி யாழ்வாரப்பன்றன் பிரபந்தமே
காசிமுதற்கன்னியெண்டிசை ஞாலங்கசிந்துருகி
வீசும்புகழண்ட கோசகைக் கப்புறமேவியதே

---

## இஃது

இந்நூல் ஆசிரியர் முருகதாசசுவாமிகளின் சீடர்களிலொருவனான அம்பாசமுத்திரந்தாலுகா வடக்குகாராகுறிச்சியிலிருக்கும் பி. ஆவுடையப்பன் செட்டியாரியற்றிய.

## முற்றுமோனைக்க வெண்பா.

எண்ணேறிலக்கண விலக்கியமுநீரேகித்
தண்ணேறுஞ்சம்பரதைத்தாயருகிப்—பண்ணேறிச்
சாருந்தமிழ்வான்றன்னிசைந்த தாரணங்கொண்
டேருஞ்செய்யுட்செல்லுறத்தாக்கி—சேருமனு
மேனல்விதிவசனமிளவிசி வேண்டியசொற்
கானக்கவிசெய்கனபுலவ—ரானபிரக்
காற்றில்லறத்தியல்போடாங்குகற்பாண்மகளிர்க்

சேற்றநெறியின்பாரிலக்கணயாக்—தேற்றமமை
தன்னைமகிழ்ந்தன்பாற்றளிப்பெரிதாய்த் தான்பொழிந்து
பொன்னைநிகர்பொற்புடையப்புண்யவதி—யன்னையொடு
வென்னிலத்துமேறுபுகழில்லறத்தையேகருதி
யின்னுபடிமீதுபுரி மேற்றருமச்—செந்நெல்
விளையச்செய்வித்ததுவே மேன்மேலுமென்மை
வளையச்செய்மாணடியார்வாழும்—பிளையறவற்
சொல்லோருக்கொல்புலவர்சூழுஞ் சுகிர்தவிசைப்
பல்லோரும்பார்த்துப்பரிமளிக்கு—நல்லூராங்
கல்லூரிற்கைவேற்கடம்பன்பலர்க் கந்தனடி
யில்லார்க்கெழுந்துதுதிசேற்புமன—நல்லோரெக்
காலுமுகங்கண்டுகசிந்துருகிக்கைகூப்பி
மேலும்விரும்பும்வெகுபுகழோன்—மாலுடைய
பொய்வாழ்வைப்போக்கிளர்புண்ணியனும் பூசைபுரி
தெய்வவடிவாச்சிறந்ததேசிகனுஞ்—சைவமறைத்
தேவாரச்சீருந் திருவாசகச்செயலு
நாவாரக்கூறுநயந்தோதிட்—டாவாரும்
வாசமலர்மாலைமணிதொடுத்து மாமயிலோ
னீசனிணையடியிலேயிசைப்போன்—றூசரொடு
பார்த்தினிவாய்பாடிப் பலனடைந்தோன்
க்ஷேத்திரங்கள்சென்றுதரிசித்தோன்—கீர்த்தியிலாத்
துன்மார்க்கச்சூழற்றொடக்கறுத்துத் தொண்டருக்கு
சன்மார்க்கஞ்சாற்றுமருள்சற்குருவா—நன்மார்க்க
அன்புருத்திராக்க மணியாழ்வாரப்பனெனு
முன்பேர்முதன்மையுறமோனமுளோன்—பின்பேர்
ததியோகந்தாங்குந் தமுருகதாசன்
பதியறிவாகியமஞ்சு

---

இன்நூலாசியர் சிஷிர்களில்ஒருவரான கலியாணிபுரம் ஏ. கோ. நல்லசிவன்பிள்ளையியற்றிய

## ஸ்தோத்திரக்கவிகள்.



### வெண்பா:

தேசம்புகழுஞ்சிலாபுரியில் வெள்ளிகொறு
மீசன்மகன்பஜனையான்செய்ய—நேசமுடன்
வந்தருளுந்தேசிகனை மன்னுழ்வாரப்பனடி
சொந்தமெனவே துதிசெய் (க)

### கட்டளைக் கலித்துறை

மாலயனேடியுங்காணுதவள்ளல்வரைநகரி
லாலயமாவமர் சன்னிதானத்திலாறுமுக
வேலன்பஜனையை யான்வெள்ளிதோறும்விளம்புதற்கென்
மானிக்கியாள்குரு ஆழ்வாரப்பன்பதம்வாழ்த்துவனே (உ)

### விருத்தம்

நன்றுவளம்பெருகும்வரை நகரமென்றும்
    நற்கதியில்நாட்டமுறும்படிநீஅவ்வூர்க்
குன்றுள்ளிசன்னிதியில் வெள்ளிதோறுங்
    குகன்பஜனையியற்றிவைத்தகுருவேபோற்றி
அன்றசுரர்சுரர்க்கிடுக்கஞ்செய்ததோர்ந்தே
    அறன்விழித்தீதா ஆறுமுகனுப்சந்த
குன்றுறைவாழறு முகனுக்கன்பாமென்றன்
    குருஆழ்வாரப்பனடி போற்றிபோற்றி (ங)

மண்புகழும்வரைநகரில் முருகலிங்கமாதவத்தன்
    மனதுகந்துபதிஷ்டைசெய்த
அண்ணல்விசுவேசர் விசாலாக்ஷிசன்னிதானத்தி
    லறுமுகனைப்பசிக்கநல்ல
பண்ணிறைந்த கீர்த்தனத்தால் துதிக்கச்செய்த
    பாவலனெனென்குரவன் உபயபாதத்
தண்ணருளைநாடியுய்ய வேண்டியன்றன்
    தாள்மலரையன்போடுதலைக்கொண்டேனே (ச)

சென்னல்வயல்சூழ்சிலாபுரியில் வளர்செல்வனுஞ்
    சிவனருள்மிகுந்ததீரன்
திருமுருகாவுடையானெனுநாமஞ்
    சிறந்துவாழ்கின்றநாளில்

தன்னைப்புணர்மெய்யனுக்தவவேடமுங்கொண்டு
  சகலருமுய்யலாகத்
தழைபுமங்கர் மேலவீதியில்தாபித்த
  சங்கரன் சந்நிதியிலே
நன்னிதிகள்பெருகவே நாற்பதாமாண்டினில்
  நளில்திங்கள் கார்த்திகையிலே
நாலைந்து தெய்திக்கு முன்தெய்தியாளதில்
  நற்சுக்கிரவாரநாளில்
இந்நிலம்புகழ்செந்திலறுமுகன் பஜனையை
  யியற்றிய வனென்குரவனா
மெழிலாழ்வாரப்பனடி முடிசூடியுய்யவே
  வெண்மணர்துணிகின்றதே (௫)

இரவினிற்றாதுசென்ற விறைவனுக்குபதேசித்த
வரைபகவெறிந்தோன் பாதமலரிணையகத்துட்கொண்டு
தரைபுகழ்முருகலிங்கன் றவக்கொழுந்தாகுமென்றன்
குரவனாமாழ்வாரப்பன் குரைகழல் போற்றிபோற்றி (௬)

பூவுலகுதித்தநாயேன்புகழ்வயதிருபானொன்றில்
காவுசூழ்மதுரைமுக்கட் கடவுள்தன் ஆடல்தன்னை
நாவினாலுரைத்தர்சிக்கநல்லருட் குருவாய்த்தோன்றி
பாவுரைபகராழ்வாரப்பன் பதம்பணிதல்செய்வாம் (௭)

---

1084-ம் ௵ சித்திரை ௴ 4௳ அப்பர்சாமி குருபூசை காரா குறிச்சி மடத்தில் நடந்ததில் இரவு கதாப்பிரசங்கஞ் செய்ததைப் பற்றிப் பத்தமடைக்காலேஜ் தமிழ்ப்பண்டிதர் செவ்வல் காந்திமதிநாதபிள்ளையவர்கள் சொன்னது.

### வெண்பா.

காரைக்காலம்மைதிருக்காதையிணைபாங்கள்மிகு
சீரைப்பெறும்படிநீ செப்பினையால்—காரைப்
பதியாண்டவப்பன் பதம்போற்றுமெங்க
ணிதிமே யாழ்வாரப்பனே



ஸ்ரீவில்லிபுத்தூர் சர்ச்சுமிஷன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் மூன்னீர்ப்பள்ளம் மு. போ. ஈசுரமூர்த்தியாபிள்ளையவர்களியற்றியது.

### சிறப்புப்பாயிரம்.

### வெண்பா.

இல்லறமும் இல்லறத்திற்கேற்ற வில்லாளின்னியல்பும்
நல்லமுறையால்நயந்துகாட்டினான்—கல்லூர்
முருகலிங்கத்தில் முளைத்தருளும்முத்தன்
முருகதாசன்றன் முயன்று (௧)

### கட்டளைக் கலித்துறை.

சொல்லறமாண்புடையான் சுயஞ்சோதிநலங்குணர்வால்
அல்லறநின்றொளிர் ஆழ்வாரப்பன் முருகற்கடிமை
கல்லறநின்றகல்லூர் கனிலே கன்னிகற்புடனே
இல்லறமாண்புவிளங்கவைத்தானினிதாய்ந்தெடுத்தே (௨)

---

திருநெல்வேலிசுவாமி நெல்லையப்பரென்னும் அனவரததானநாதரது ஜேஷ்டபரம்பரை வித்துவான் கவிராஜ முத்துக்குமாரசுவாமியாபிள்ளையவர்களியற்றியது.

### அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

இவ்வுலகிற்குலமகட்குத் தெய்வமெழிற்
  கொழுனனெனயிசைத்தமுன்னோர்
செவ்வியதாமில்லறமற்றறமனைத்து
  நன்றலதாய்ச்செப்பலாலே
திவ்வியமாகல்லூரான் முருகலிங்க
  முனிசெய்தவஞ்சிறக்கவந்தோன்
எவ்வுலகும்புகழ்முருகதாசன்
  இல்லறவியலையியம்பினனால்

---

முன்னீர்ப்பள்ளம் ஸ்ரீ ஆனந்த நடராஜமூர்த்தி பஜனை சபைத்தலைவர் ம. முத்துசுவாமியாபிள்ளையவர்கள் இயற்றியது.

## ஆசிரியப்பா.

செந்நெற்கழனிசூழ் நன்னகர்நெல்லைப்
பதிக்குமேற்றிசையில் மதிப்புடன்வைகும்
சிலாபுரியதனில் நிலாவியிருந்த
பெரியோனென்னு முருகலிங்கேசன்
செய்தவத்தாலே வையகமதனில்
புண்ணியமகனாய் நண்ணிவந்துள்ளோன்
நற்பெயராள்வாசப்பனென்றிடுவோன்
கல்வித்துறையினெல்லைகண்டவன்
ஒழுக்கமுநடையும் விழுப்பொருளெனவே
கண்டவவ்வழியே கொண்டிடுநடையோன்
சித்தாந்தமெனும் உத்தமக்கனிதனை
வித்தியதுடனே விழுங்கும்பெருந்தகை
கந்தன்றிருவடி சிந்தையிலிருத்தி
வந்தனைபுரிவோனெங்கு நாடனிலும்
பலவிடங்களிலு நலமார்பஜனை
மடமதுநிறுவித்திடமுறச்செய்தோன்
பஜனைசெய்துய்யும் நிசவழியீதென
றெம்மனோர்க்குணர்த்திவம்மெனவிழுத்துப்
பாடிப்பழித்து நாடிடவைத்தோன்
பத்தர்கள்சபைக்கோருத்தமத்தலைவன்
அன்பர்கள்பாடியின்புறுவதற்குங்
கந்தன்பேரில் சிந்தைசென்றிடவுங்
கீர்த்தனம்பலவுஞ் சீர்த்தியாயிசைத்தோன்
சுமதிவிலாசம் அமைவுறச்செய்தோன்
வல்லிமாநகரின் நல்லமான்மியத்தை
நற்றமிழாக்கிச்சொற்பாவினமாய்த்
தலபுராணஞ்செய்திலகிடத்தந்தோன்
கந்தன்கப்பல்ச் சிந்துங்காவடி
வைபவங்கீர்த்தனப்பைபவர்க்களித்தோன்



கந்தரந்தாதியுமந்தமதுடனே
சொற்றனம்மைபாற்றலமுறையும்
மரகதாம்பிகைமேல் வருதிருமாலையும்
புரிந்தனனெல்லாம் பரிந்துபார்த்திடுவோர்க்
கச்சிடுவித்தே யிச்சையிலளித்தோன்
அடியார்சரிதம்படிமீதுலவ
லாவணிச்சிட்டை யீரவலோடியற்றி
பீடிகைவிதியும் நாடுநூற்றிரட்டுந்
தந்தனனுத்தியோகந்தனைவிடுத்து
வந்தெழிலானூர் தந்திடுங்கந்தன்
அருள்வழியில்லமொருவியுந்துறவு
பூண்டவனுகியவ்வாண்டவனடிமைத்
திறத்தினுக்கிசையநிலுத்தினன்முருக
தாசனென்றெங்குமெந்நேசருஞ்சொலவே
உத்தமத்தமையும் பத்தினிமார்கள்
இல்லறதருமம் நல்லறமெனவே
கொண்டதைநடத்தப் பண்டுளநூலோர்
கூறியவழியே மாறிலாதியற்ற
விடையும்வினவுடன் நடைபெறச்செய்து
கிரகாச்சிரமதருமமதெனவும்
நலக்குறுமகளிரிலக்கணமெனவும்
தந்தனனிவற்றினந்தமதோர்கில்
காமுகரோடு பாமரரான
இருவரைத்தண்டம் புரியுநற்கோலது
பூதிசாதனமும் நாதன்மணியும்
அணியுமடியவரைப்பணியச்செய்வது
வீடுறுபவர்க்கு நாடருமேணி
என்னவேநிற்பதுபன்னருந்தருமப்
பயிரைவளர்ப்பது முயிரையோம்புவதும்
எவ்வகைச்செல்வமுஞ் செவ்விதினளிப்பதும்
இன்னவைமுதலாம்நன்னயம்பலவும்
அடங்கினதிதனைத்திடம்பெறநாவால்
என்னுவியம்புந்தன்மையதிதுவே.

---

ஆத்துக்குடி சைவசித்தாந்த சபை காரியதரிசி ஸ்ரீமாந் தே. ச சுப்பிரமணியபிள்ளையவர்களியற்றியது.

## ஆசிரிய விருத்தம்.

பன்னாட்டுப்பன்மாதர்பரவுற்றுப்பயிலொழுக்கின்
  பழக்கத்தாலே
நன்னாட்டுநங்கையர்க்கு நாண்முதனாற்குணமு
  நழுவாவண்ணஞ்
சொன்னாட்டுசுருதியெலாமாய்ந்தது சொல்விதிவிலக்கைத்
  தொடர்ச்சியாக
வென்னாட்டார்களும்வியப்பமகளிரிலக்கண நூலா
  விசைத்தானமன்றே (௧)

இவ்வியல்கொண்மடநலாரின் றுணையா
  னியற்றுகின்றவில்வாழுதன்மச்
செவ்விதனைத்தேர்ந்துலகோரிருமையின்பம்
  முறையானே திளைக்குமாறு
நவ்விகரத்துறுபரமன் நவில்சுருதிவரைசெய்து
  நவிற்றுகின்ற
வெவ்விதியும்விளக்கமுறக்கிரகத்தாச்சிரம
  நூலிசைத்தான்மன்றே (௨)

செயற்கரியவிச்செயலைச்செய்ப்பரி
  யோன்யாவனெனிற்றெரிப்பான்கேண்மின்
னயற்கரியகுகப்பரனையகக்கோயி
  லுள்ளிருத்தியகிலத்தாசை
யுயர்க்கிடஞ்சற்றுதவாதுபேரின்ப
  வீட்டினுக்கேயுரியசெய்து
வயற்புடைசூழ்கல்லூரின்வாழ்
  முருகதாசனெனும் மதிவல்லோனே (௩)



இந்நூலாசிரியர் மாணாக்கன் கீழக்கல்லூர் சிவசங்கரம்பிள்ளை அவர்கள் குமாரர் சிவஆழ்வாரப்பபிள்ளை யியற்றியது.

## ஆசிரிய விருத்தம்.

சிலைநகர்தனில் வாழுந்தேசிகன் முருகதாசன்
மலைதொறுமுகந்தவேலன் வரப்பிரசாதம்பெற்றோன்
பலபுராணங்கள் நூல்கள் பார்த்ததை முறையிற்சேர்த்து
நலமுற இல்லோர் தர்மம் கற்புநூல் நவின்றான்மாதோ

இவ்விருநூல்கள் சொற்றதேதன்பொருட்டென்னிற்
  கேண்மோ

கவ்வைநீருலகில்வில் லாள்தன்னொடுங் கலந்துவாழ்வோ
ரெவ்வவரேனுமின்னூல்கடைப்பிடித்துறுதியெய்திப்
பவ்வமாய்பிறவிமாற்றிப்பரனடிசார்வதற்கே

சிவமயம்.

வடிவேல்துணை.

# முகவுரை.

சமுத்திரஞ்சூழ்ந்த நிலவுலகின்கண் மானிடத்தோற்றத்தில் வந்து குலவுயர்வுபெற்ற (குணகடல் குமரி, குடகம் வேங்கட)மென நான்கு எல்லைக்குளமைந்த தமிழ்நாட்டிலுள்ள சைவ சமையிகளாயுள்ளார் யாரும் அனுஷ்டித்து மோக்ஷமடைய பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசமென நான்கு ஆச்சிரமபேதங்களும் உபாசிக்க சரியை, கிரியை, யோகம், ஞான, மென்ற சோபானமான நாலு படிமுறைகளும் ஏற்பட்டிருப்பதில் ஸ்திரி சையோகம்பற்றி கிரகஸ்தாச்சிரமமான இல்லறமே மேலானதென்றும் துறவறம் நிலையுதலாதல் பிரயாசமென்றும் ஏற்பட்டிருக்கிறது. நமது சைவநண்பர்கள் பிரபஞ்சமயற் சுழற்காற்றுலெற்றுண்டு பிறவிசாகரத்தில் மொத்துண்டு கிடப்பதன்றி அதை ஆராயவெண்ணமுடையார் சிலராயினும் இலராயினர் இல்லறமென்றுலென்ன, அதை நடத்தவேண்டிய கிரமமென்ன, அதையேன் நடத்தவேண்டும், அதினாற்பெறும் பயன்யாது, எனக்கடாயினர்க்கு, இது மோக்ஷமடைய இன்றியமையாது வேண்டற்பாலனவென்பதுவும் நடத்தவேண்டியமுறையும், அதற்குத்துணைக் காரணமாய்மையவேண்டியவை யிவைகளென்றும், சிவசின்னமாகிய விபூதி, உருத்திராக்கவரலாறும், அணியும்பலனும், அடியாராவார் இத்தன்மையார், அவர்க்கமுதூட்டும் பலனிது வென்பதுவும், அதற்குவேண்டும் பொருளீட்டவும், செலவுசெய்யவுமான வழி இஃதென்பதுவும், துணைக்காரணமாய் வரிக்கவேண்டிய குணநல்பெண்களின் தன்மையும், மற்றும் அவர்க்குவேண்டுவெனவும் நடக்கும்படிக்கேற்பட்ட விதிகள்பலவும், பலபுராணங்கள், நீதிநூல்கள், முதலியவற்றிற் பரக்கக்கூறப்பட்டுள்ளதாயினும், ஆராய்வாரின்மையின், அவைகள் விளங்கப்பெறாமல், மறைபட்டுக் கிடக்கின்றன. உலோகோபகாரமாயும், யாவரும் அறிந்துகொள்ள வேண்டியது அத்யாவசியமாயும், இருப்பதால் இதை வெளியிட

வேண்டுமென்று அநேகநாளாய் எனக்குண்டான நன்னோக்கங் கொண்டு பன்னூலாராச்சியின்பேரில், மேற்கோள்சகிதம் கிரகாச் சிரமதருமம், மகளிரிலக்கண, மென்று இரண்டு நூலாய் யாவருக் கும் பயன்படக்கூடிய எளிய தமிழ்நடையில் வசனரூபமான, வினாவும் விடையுமாக வரைந்துள்ளேன் இந்நூலைக்கண்ணுறும் ஆன்றோர்கட்கு ஆங்காங்கு பலவழுக்கள் காணப்படினும் பொறுத்து அதை எனக்கறிவுறுத்தி நீக்கற்பாலனசெய்யுங் கடமைப்பாட்டினுள்ளாராயிருத்தல்வேண்டுமெனப் பிரார்த்திக் கிறேன். அடுத்தபதிப்பில் சீர்திருத்தி அச்சிடப்படும். கைம் மாறுவேண்டாகடப்பாடென்றபடி நானெதிரேற்றுபாஞ்துசெய்ய வல்லேனல்லன்.

இங்ஙனம்.

மு. ஆழ்வாரப்பபிள்ளை யெனப் பூர்வநாமம்பெற்ற,

முருகதாசசுவாமி,

கீழக்கல்லூர்.

உ

விநாயகக்கடவுள் துணை.

காப்பு.

## விருத்தம்.

பூவில்வாழ் மாந்தர்க்காகப் புகன்ற நாலாச்ரமத்தின்
மேவுமில்லறத்தினோர்கள் செய்திடும் விதியுங்கற்பார்
பாவையார் தமக்குவேண்டுமிலக்கணம் பலவுங்கூறத்
தாவில் சீர்கயமுகேசனருளினை சிரமேற்கொள்வாம்

### பரமசிவன்ஸ்துதி.

சீவர்கள்மலத்தைநீக்கித் திருவடிசேர்பானுன்னு
மாவலாற்றனு மூன்றுதியருளியாகமங்களாலே
மேவு நல்வழிதெருட்டி வீடுபேறுதவுமீசன்
பார்வதிபாகன்பாத பங்கயமுடிமேற்கொள்வாம்

### கந்தன் சரசுவதி தோத்திரம்.

அழல்விழிதனில் வந்துற்றவறுமுகன் யானைவள்ளி
கழல்களைப்பணிந்துபோற்றி கலைமகள் எந்நாவுற்றுப்
பழகிவீற்றிருந்தாள் பாதம் பாவியவ்வன்னைதூண்ட
வழுவறவில்லோர் தர்மமீதென வழுத்துவேனே

### அடியார் வணக்கம்.

அப்பனதடிசாரப்பன் பிள்ளைபாரணியாரூரன்
ஒப்பறுவாதவூரருள்ளிட்டார் எழுபான் மூவர்
தப்பிலாவடியாரில்லத்திருந்தறஞ் சாதித்தார்கள்
பொற்பதம் வணங்கியிந்நூல் புகன்றிடத்துணிந்தோன்மாதோ.

### குருவணக்கம்.

ஆருயிர்குடிக்கவந்தவனோ தொல்லையாம்பவக்கடனீந்த
ஒருறுபுணையாய்நின்றவனெவனோ எத்திடமுதலடிமுன்னுள்
சீருடனறிவில்உணர்த்தினனெவனோஅவனருட்டேசிகனுவான்
வாருளசழல்கள் வணங்கியிந்நூலை வரைந்தனனாணையின்வழியே

### அவையடக்கம்.

குடமுனியருளுஞ் செந்தமிழ்வாரி குடித்துயர்கந்தமேனவே
மடமுனிகவிபாமாரி பெய்புலவர்முன்வாத்துணிந்தென்மனதின்
திடமுனில்நகையும் நாணமுந்தருபாலாயினுமாவால்முன்செலுத்தி
விடமுனின்றிந்நூல்வரைந்தனனவைநீர்த்தேற்பதுமேலவர்கடனே

### நூற்பயன்.

எழுவகைத்தோற்றத் துள்ளுமேற்றமாமனுடதேகம்
பழுதறுமுள்ளபோழ்தே பண்ணியோடில்லில்வழி
தொழுதகுகருமத்தானந் தவங்களுந்துணையோடாற்றி
அழிவிலாவீடுகூடல் இந்நூற்பயனதாமே

---

முருகக்கடவுள் துணை.

# கிருகஸ்த ஆச்சிரம தருமம்.

1. வினா?

அநாதியிலேயுள்ள நித்தப்பொருள்களாகிய வுயிர் வருக்கங்களெத்தனை.

1. விடை:—

மூன்று.

2. வினா?

அவற்றின் விவரமென்ன.

2. விடை:—

விஞ்ஞானகலரென்றும், பிரளயாகலரென்றும், சகலரென்றும், சொல்லப்படுவோரேயாம்.

3. வினா?

இவர்களில் எவ்வவர் எவ்வவ் மலங்களையுடையார்.

3. விடை:—

விஞ்ஞானகலர், ஆணவமலம் ஒன்றுமட்டும் உடையார் பிரளயாகலர் ஆணவமலம் கன்மமலமென்ற விரண்டுமுடையார் சகலர், ஆணவமலம், கன்மமலம், மாயாமலமென்ற மூன்றுமுடையார் இவரில் சகலர்க்கு பஞ்சகலையுங்கூடுமுடைமைபற்றிச் சகலரென்றாயிற்று.

4. வினா?

இவர்கள் எந்தெந்தநிலையர்.

4. _விடை:—_

அட்டவித்தியேசுரர், அனுசதாசிவர், மந்திரமயேசுரர், சப்தகோடி மகாமந்திரர், இவர்கள் விஞ்ஞானகலர் நூற்றியபதினெட்டு உருத்திரர், பிரளயாகலர் பிரமவிஷ்ணு காலாக்கினிருத்ரன் முதல் கிருமியீறும் வரையுள்ள ஜீவர்கள் சகலர்.

### உதாரணம்.

### சிவப்பிரகாசம் மங்கலவாழ்த்து.

மூவகையாருயிர் வர்க்கமலத்தார்கன்ம
மூலமலத்தார் மூன்றுமுடையாரன்றே
சிவகமா மெனவுருவாய் வந்திநாதன்
றிருநோக்காற்பரிசத்தாற் றிகழும்வாக்காற்
பாவனையான் மிகுநூலால் யோகப்பண்பாற்
பரவிவருமவுத்திரியாற் பாசநாச
மேவவருளுதவுமவுத்திரியிரண்டுந்தானும்
வியன்கிரியை ஞானமென விளம்புமாறே

5. _வினா?_

பரமேசுரன் சகலரென்றவுயிர் வர்க்கங்களை இரக்ஷித்தற் பொருட்டு அவைகளுக்கு ஆகந்துக மலத்தால் தநுகரணாதிகளைக் கொடுத்தவில் எடுக்கும் உயிர் வேறுபாடுகளின் தோற்றங்களெத்தனை.

5. _விடை:—_

நால்வகையோனி, எழுவகைத்தோற்றம், எண்பத்து நான்கு லெக்ஷம் ஜீவபேதங்கள்,

6. _வினா?_

நால்வகையோனியாவதென்ன,

6. _விடை:—_

இயோனியென்றால் கருவமையும் ஸ்தானம் அதாவது சராயுசம், (பை) அண்டசம் (முட்டை) சுவேதசம், (வேர்வை) உற்பீசம் (வித்து, வேர், கிளங்கு)



7. _வினா?_

இதில் எந்தெந்த ஜீவராசிகள் எது எதிற்கட்டுண்டு பிறக்கும்

7. _விடை:—_

தேவர், மக்கள், விலங்கு, இந்த மூன்று தோற்றங்களும், பைக்குட் கட்டுப்பட்டு அதனிடமாய்ப் பிறக்கும் பக்ஷி, ஊர்வன, நீர்வாழ்வன, வாகிய மூன்று தோற்றங்களும், முட்டைக்குட்கட்டுப்பட்டு அதனிடமாய்ப்பிறக்கும்.

இவற்றுள், கிருமி, கீடம், பேன், விட்டில், முதலிய சில ஜீவராசிகள் வேர்வினிடமாய் பிறக்கும், புல், பூடு, விருக்ஷமுதலியதுகள் வித்து, வேர், கிழங்கிணிடமாய்ப் பூமியைப்பற்றிப் பிறக்கும். ஆக உயிர் வருக்கங்கள் ஏழில், முன்சொன்ன ஆறும், சர உயிர், அல்லது சங்கமமென்றும், பின் சொன்னது அசரஉயிர் அல்லது தாபரமென்றுஞ் சொல்லப்படும். இந்த அசரவுயிருக்கு ஜீவாதாரம் தண்ணீர்மட்டும் அதைப்பாதம் அல்லது தூர்ப்பக்கத்தால் கிரகித்து அதன்வழி அந்தச்சாரம் கொம்பு, கிளை, இலை, காய்களுக்கேறப்பட்டுச் செழித்து வளரும்.

மற்ற மிருகம், பக்ஷி, ஊர்வன, நீர்வாழ்வென இந்நான்கு தோற்றமும், குறுக்காக ஆகாரங்கொள்ளுகிறது.

திரியக்குஜாதி என்று பேர் தேவர், மனித தோற்றம் மேலேயிருந்து ஆகாரங்கொண்டு கீழேயிறங்கி அந்தச்சாரஞ் சரீர முழுதும் வியாபிக்கிறது.

8. _வினா?_

எந்தெந்தவுயிர் எத்தனை எத்தனை பேதங்களையடையும்.

8. _விடை:—_

(1) தேவபேதம் பதினொரு லெக்ஷம்.
(2) மனிதபேதம் ஒன்பது லெக்ஷம்.
(3) பறவை.
(4) நீர் வாழ்வன.
(5) _விலங்கு ஒவ்வொன்றும் பத்து லெக்ஷம்._

(6) ஊர்வன பதினொந்து லக்ஷம்.
(7) தாபரம் பத்தொன்பது லக்ஷம்.

ஆக எண்பத்துநான்கு லக்ஷம்.

9. <u>வினா?</u>

மெய், வாய், கண், மூக்கு, செவி, யென்ற ஞானேந்திரியங்களின் வழித்தாய்வருந்தொழில்களான தன் மாத்திரையென்ற சத்தம், பரிசம், ரூபம், இரசம், கந்தம் எனவரும் ஐயறிவுகளில், எந்தெந்தவுயிர்கள் என்னென்ன அறிவையறியும்.

9. <u>விடை:—</u>

1. அசரம் அல்லது தாபரவுயிர்கள் ஓரறிவுடையது ஸ்பரிசத்தை மட்டும் அறியும்.

2. அந்து சங்கு இப்பிமுதலிய வுயிர்கள் ஸ்பரிசத்தையறிவதோடு இரசத்தையும் அறியப்பட்டயீரறிவுயிர்கள்.

3. கறையான், எறும்பு முதலியவுயிர்கள் ஸ்பரிசம், இரசம், கந்தம், என்ற இம்மூன்றையும் அறியப்பட்ட மூவறிவுயிர்கள்.

4. தும்பி, வண்டு, முதலியவுயிர்கள், ஸ்பரிசம் இரசம், கந்தத்தோடு உருவத்தையும் அறியக்கூடிய நாலறிவுயிர்கள்.

5. விலங்குமுதலிய மற்ற வுயிர்கள் மேற்கண்ட நாலோடு சத்தமுஞ்சேர்ந்து ஐயறிவுடைய உயிர்கள்.

6. தேவர், மனிதர் முதலியோர், சத்தம், ஸ்பரிசம், உருவம், இரசம், கந்தமாகிய ஐயறிவுடன், சித்தத்தினாலே நன்மை, தின்மை, சுகம், துக்கம், பாவம், புண்ணியம், சுவர்க்கம், நரகம், இவைகளைப் பகுத்தறியக்கூடிய அறிவோடு ஆறறிவுடைய ஜீவர்களாம்.

10. <u>வினா?</u>

இந்த வெழுவகைப் பிறப்பில் மேலான பிறப்பு எது,

10. <u>விடை:—</u>

மக்கட்பிறப்பே மேலானது. இதரதோற்றங்களிற் பிறந்துழன்றுதவப்பேற்றின்பேரில் இது கிடைக்கவேண்டும். மற்ற



ஐவகைத்தோற்றங்களும் இந்தத் தோற்றத்துக்குள்ளடங்கி இருக்கக்கூடியதே.

உதாரணம்.

சித்தியார் 2வது சூத்திரம் 89-ம்பாட்டு.

அண்டஞ்சுவேதசங்க ளுற்பிச்சஞ்சராயுசத்தோ
டெண்டரு நாலெண்பத்துநான்கு நூறாயிரத்தா
லுண்டுபல்யோனியெல்லா மொழித்துமா னுடத்துதித்தல்
கண்டிடிற்கடலைக்கையானீந்தினன் காரியங்காண்

ஷை. 90-ம் பாட்டு.

நரர்பயிறேயந்தன்னிஞ்ன்மறை பயிலாநாட்டில்
விரவுதலொழிந்துதோன்றன் மிக்கபுண்ணியந்தானுகும்
தரையினிற்கீழைவிட்டுத் தவஞ்செய்சாதியினில்வந்து
பரசமயங்கட்செல்லாப் பாக்கியம்பண்ணொணாதே

சிவப்பிரகாசம்.

2-வது சூத்திரம் அவஸ்தை யியல்பு 28-ம்பாட்டு

தோற்றியிடமண்டசங்கள் சுவேதசங்கள்பாரிற்
றுதைந்துவருமுற் பிச்சஞ்சராயுசங்களென்றி
யூற்றமிகுதாவரங்கள் பத்தொன்பதென்றும்
மூர்வபதினொந்தமரர் பதினொன்றேடுலவா
மாற்றருநீருறைவன நற்பறவைகளுற்காலி
மன்னியிடும்பப் பத்துமானுடரொன்பதுமா
வேற்றியொரு தொகையாகவியம்புவர்களியோனி
யெண்பத்துநான்கு நூறாயிரமென்றெடுத்தே

ஔவையார் தனிற்பாடற்றிரட்டு.

அரியது கேட்கில் வரிவடிவேலோய்
அரிதரிது மானிடராதலரிது
மானிடராயினும், கூன், குருடு, செவிடு,
பேடுநீக்கிப் பிறத்தலரிது

பேடுநீக்கிப் பிறந்தகாலையும்
ஞானமுங்கல்வியும் நயத்தலரிது
ஞானமுங்கல்வியும் நயந்தகாலையுந்
தானமுந்தவமுந் தான்செயலரிது
தானமுந்தவமுந் தான்செய்வாராயின்
வானவர்நாடு வழிதிறந்திடுமே

சிவதருமோத்திரம்.

7வது சுவர்க்க நரகவியல் 207-ம் பாட்டு.

அரிது மானிடயோனி யவற்றுளு
மரிது பூசுராகையுமாகியு
மரிது நான்மறை வாய்மையுமாசற
வரிதுவாறோடு முத்தியடைகையும்

வைராக்கியசதகம்.

வாழிநெஞ்சமே சென்றிடேனின்றிநேரார்
    வாத்தையெற் குரைசெய்வாய்
இழியாமியற்றுயர் தவத்திவ்வுடல்
    கிடைத்ததன்றோ மற்றி
தாழிகாலமிங்கிருக்குமோ நீயுமோர்ந்
    தனையெனி னுளபோழ்தே
சூழுமேழ் பவந்துடைத்தல் செய்யாயேற்றன்
    றொழுத்தான் றனைத்தானே

பாரதம்.

சஞ்சையன்றூதுச்சருக்கம் 7-ம் பாட்டு

உற்றயோனிகடம்மிலுற்பவியாமன் மானிடவுற்பவம்
பெற்றுவாழ்தலரிதுமற்றது பெறினுமாமறைசெய்பெருமையுங்
கற்றஞானிகளாய் வழங்குதலரிது விடுறுமறிவுபின்
பற்றுமாசிலீதின்றுனக்கில்லை பண்பிலேனேடுபவித்ததே



குற்றால ஸ்தலபுராணம்.

மந்தமாருதச்சருக்கம்.

எறும்புகடையானைதலையெண்பத்துநான்கிலக்கயோனிபேதம்
பிறந்துழலுமுயிர்க்கெலா மனிதராய்ப்பிறப்பரிது பிறந்தாரேனும்
பறம்பர், சோனகர், குனரீனர், கானவர், நுளையர், பறையராதி
யறைந்தகீழ்க்குலநீங்கி மேற்குலத்திலவதரிப்பதரிதுமைந்தா

வள்ளலார்சாத்திரம் யாக்கையருமை.

மக்களாக்கையிற் பிறத்தலேயரிது மற்றதிலுங்
குக்கலூன் குருடூமைமையைத் துறத்தலுமரிது
நற்குலத்திடைவருதலுமரிது ஞானத்தான்
முக்கணீசனுக்காட்படல் முற்றிலுமரிதே

அமிர்தசாரம்.

பெறவரிதுமக்கட் பிறவிபெற்றாலு
மறிவுநூலாய்தலரிதே—யதினுந்
துறவுடையனாதலரிதே யதின்மெய்
யறிவுடையனாதலரிது

11. வினா?

மானுடதேகம் எதனாலேற்றம்.

11. விடை:—

ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், இந்நான்கு குணமும் மிருகத்துக்கும் மற்றவுயிர்கட்கும் மானுடருக்குமுண்டு, ஆனால் மிருகங்கள் முதலானவைகள் அது அதற்கு வேற்பட்ட தன்மைபோலனுபவிக்கும்.

மனிதன் பகுத்தறிவுள்ளவனாதல்பற்றி யிந்த நான்கும் மேன்மையாயனுபவிப்பான் இந்த நாலு குணங்கொண்டு, மிருக முதலியது இகத்தைமட்டும் அறியும். மனுடன் பகுத்தறிவுடன் இகபர மிரண்டையுமறிவான் ஆதலால் மக்கட்பிறப்பே மேலானது

## அருட்பிரகாசம்.

ஆறுசுவையோடருந்த தனுவம்பந்தரினுயிரல்
கூறுகரணவிதங்களின் மாதரைக்கூடிடுதல்
தேறிவிசாரத்திறனைச்ச நீங்குதநேறின்மண்மேல்
வேறுமுயிர்கட்கின்மை யானரமேலென்பவே

12 வினா?

தேவதோற்றம் உயர்வென்று சொல்லக்கூடாதா.

12. விடை:—

தேவர் இமையா நாட்டமுஞ் சாக்கிர அவஸ்தை ஒன்றுமே பெற்று புண்ணியப்பலனை யநுபவிக்கிற போகபூமியாரென்று சொல்லப்படுவர், ஆனாலும், சரீராதிகள் பெற்றிருப்பதில் நமக்குண்டான அவஸ்தைபோல அவர்களுக்குமுண்டு, ஆனதுபற்றி அத்தனை விசேடமில்லை. மானிடத்தில் வந்தே மோக்ஷமுத்தியடையவேண்டும்,

## பெருந்திரட்டு.

தீயஅசுரர்பகையுண்டு செற்றமார்வமிகவுண்டு
நோயுண்டனங்களுமுண்டு நோய்கட்கெல்லாந்தாயான
காயமுண்டு கைதொழவேண்டினருமுண்டு கற்பகத்தே
மாயுந்தன்மையுண்டானல் வானோர்க்கென்னவளனுண்டே.

13. வினா?

அனாதிகேவலதிசையில் மூலமலமாகிற ஆணவமலத்தாற் கட்டுண்டு கிடந்தவுயிர்க்கு இந்த உயர்வான மானுடசரீரங் கொடுத்தது எற்றுக்கு அதனாலடையவேண்டிய பலன் யாது.

13. விடை:—

சரீரமோ இன்னகால மரணமுண்டாகுமென்றறியவாராத அநித்தப்பொருளாயும் உற்பத்தி, திதி, இலயம், என்கின்ற காலத்திரயத்திலும் துன்பமுள்ளதாகவேயிருக்கிறது உற்பத்திகாலம் மாதா உதரத்தில் கருக்கொள்ளும்பொழுது.



[1] கருப்பாசயப்பையுறுத்தல்.
[2] அதில் ஜலம்பூரித்தல்,
[3] உதராக்கினிசுடுதல்.
[4] பிரசூதவாய்வு தலைகீழாய் முறித்துத்தள்ளல்
[5] யோனித்துவாரத்தில் நெருக்குண்டுவரல், இந்த ஐந்தும் பிருதிவிமுதல் ஆகாயம்வரையுள்ள பஞ்சபூதங்களாலுண்டாகிறது. இலயத்துன்பம் இதற்கு எட்டுமடங்கு அதிகம். திதிகாலம், வியாதி, பசிநோய், காமநோய், பொருள்தேடல், விருத்தபருவம், மனைவிமக்கள் இவர்களால் பலதுன்பமுண்டாகிறது. இதை யுணர்ந்து,விட்டுநீங்கி ஜென்மலாபம் பெறுதற்கே இதுகொடுக்கப்பட்டதென்றோர்ந்து சரீரமுள்ளபொழுதே தவமியற்றி மோக்ஷ வீடடைதலே யிதன் பலனும்.

## குறள் 34 அதி; நிலையாமை.

நெருநலுளனொருவனின்றில்லை யென்னும்
பெருமையுடைத் திவ்வுலகு
உறங்குவதுபோலுஞ் சாக்காடுறங்கி
விழிப்பதுபோலும் பிறப்பு

## நாலடியார் ௩-ம் அதிகாரம் யாக்கை நிலையாமை.

மலைமிசைத்தோன்று மதியம்போல் யானைத்
தலைமிசைக்கொண்டகுடையர்—நிலமிசைத்
துஞ்சினாரென்றெடுத்துத் தூற்றப்பட்டாரல்லா
லெஞ்சினாரிவ்வுலகத்தில்

## நீதிவெண்பா.

தாமோதரன் முதலோர் சாதனால் சாற்றுவதும்
பூமேலோர் பொன்றுவதுங் கண்டோமே—நாமுடலை
நேசிப்பதென்னோ நிலையாகுஞ் சங்கரனைப்
பூசிப்பதென்றே புகல்

### சித்தியார் உ-ம் சூத்திரம் கூ௱-ம்பாட்டு.

கருவிலுளழிவதாயுங் கழிந்திடாதழிவதாயும்
பரிணமித்தழிவதாயும் பாலனாயழிவதாயுந்
தருணனாயழிவதாயுந் தானரைத்தழிவதாயு
முருவமேயழிவேயானா லுள்ளபோதேபாருய்ய

### வள்ளலார் ஞானகுருமான்மியம்.

எந்நாளிருப்பினு மிறப்பது நிச்சயம்
பொன்னாட்டிந்திரனாயினும் பொன்றுவ
னென்னாட் கழியுமுன் ஞானத்தினாலே
தன்னாலறிவது சற்குருபாதமே

### சுந்தரர் தேவாரம்.

தோற்றமுண்டேல் மரணமுண்டாந் துயரநெடுவாழ்க்கை
மாற்றமுண்டேல் வஞ்சமுண்டா நெஞ்சமனத்தீரே
நீற்றரேற்றர் நீலகண்டர் நிறைபுனனீழ்சடைமே
லேற்றர் கோயிலெதிர்கொள் பாடியென்பதடைவோமே

## துன்பம்.

### வைராக்கிய தீபம்.

உடலிறப்பவத்தோரைம் பெருந்துயர்மாய்ந்
துறுகணத்துயரி னெண்மடங்கா
மிடையுளதிதிகட்டியா மூப்பறிவோ
மிளமையிற் பிணியுறுவிடத்தும்
விடலரும் பசிநோய் காமநோய்தீர்ப்பான்
மிகுபொருட்டேடுதற்றுயரின்
னடையினுமதனைக் காக்குதற்றுயர்வே
றாயினுமிகுநாற்றுயரே



நடை.

### உற்பத்திகாலத்திலுள்ள துன்பத்திற்கு விவரம்.

(1) கருப்பாசயப்பையுறுத்தல், அதாவது ஒரு குழந்தையைப் பூமியிற்கிடத்தி யதன்மீது ஒரு பருவதத்தைத் தூக்கிவைத்தாலெப்படியோ அதுபோலுள்ள கஷ்டம். இது பிருதிவியாலுண்டாகிறது.

(2) அதில் ஜலம் பூரித்தல், அதாவது ஒரு சிசுவைச் சமுத்திரத்திற்குள் தலை கீழாக ஆழ்த்திக்கொண்டிருந்தாலெப்படியோ அதுபோலுள்ள துன்பம், இது அப்புவாலுண்டாகிறது.

(3) உதராக்கினி சுடுதல், அதாவது சதாகாலமும் நெருப்பெரிந்துகொண்டிருக்கிற எண்ணெய்க்கொப்பரையில் ஒரு குழவியைத்தூக்கிப் போட்டுவிட்டாலெப்படியோ அது போலுள்ள வருத்தம். இது தேயுவாலுண்டாகிறது.

(4) பிரசூதவாய்வு முறித்துத்தள்ளல். அதாவது மலையிலுச்சியினிற்கிற பிள்ளையைத் தலைகீழாகத்தள்ளுதலெப்படியோ அதுபோல் நேராக உற்பத்தியாயிருக்கிற குழந்தையைப் பிரசவகாலஞ் சமீபிக்க, தனஞ்செயனென்ற வாய்வால் வயிற்றுக்குளிருக்கிற கால்முளையைத் தலைகீழாக முறித்துத்தள்ளி முதலாவது சிரசைப் பூமியை நோக்கும்படி செய்கிற துயரம். இது வாயுவினாலுண்டாகிறது.

(5) யோனித்துவாரத்தில் நெருக்குண்டுவால், அதாவது கரும்பைச் செக்கிற்கொடுத்துச் சக்கையாய்க் கசக்கியெடுத்தல்போலுள்ள பெரிய அவஸ்தை. இது ஆகாயத்தாலுண்டாகிறது.

மற்றது வெளிப்படை.

இதிகால அவஸ்தையைச் சூதசங்கிதை
முதலியவற்றில் காண்க.

### பெருந்திரட்டு மரணத்துன்பம்.

வந்திடுமரணத்துன்பம் மறித்துரை செய்யப்போமோ
வுந்திமேலெய்யும்பித்து முணர்வொடு பொறிகலங்கி
நந்திடாவிருளேமூடி நாவுலர்ந்த லமந்தென்னே
விந்தமாவிறப்பிற்றுன்பம் பவத்துன்பத்தெண் மடங்கே

### குறுந்திரட்டு.

பரணமாகிய பெண்டிருஞ் சுற்றமும்
  பண்டுதங்கையிற்றந்த
விரணமானவை கொண்டிடவிவரை
  விட்டியம்பிடாதிவணேகு
மரணவேதனையாவரா லறியலாம்
  மயங்கியைம்புலனந்தக்
கரணயாவையுங் கலங்கிட வருந்துயர்
  கடவுளேயறிகிற்பார்

### குறள் ௩௪-ம் அதி: நிலையாமை.

நாச்செற்று விக்குள்மேல் வாராமுனல்வினை
  மேற்சென்று செய்யப்படும்

### ஔவைக்குறள்.

உடம்பினாற்பெற்ற பயனாவதெல்லா
முடம்பினி லுத்தமனைக்காண்

### வைராக்கியதீபம்.

கருமமொன்றியற்றப் பிறர்கையிற் கருவி
  கவர்ந்துளோன் பினுமவர்கொளுமுன்
விரைவினெண்ணிய செய்யாதுமற்றவையே
  மிகச்சிறப்பித்து நோக்குதல்போற்
புணரின் வீட்டின்ப முடைதுவானதற்குப்
  பொருந்திய வருந்தவம்புரியா



தொருகணமெனினு நிலையிலிவ்வுடல்வைத்
  தொப்பனைசெய்து நோக்குதலே

### நாலடியார் ௪-ம் அதி: அறன்வலியுறுத்தல்.

கரும்பாட்டிக்கட்டி சிறுகாலைக்கொண்டார்
துரும்பெழுந்து வேங்காற்றுயரா ணுழவார்
வருந்தியுடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்காற் பரிவதிலர்

### ஷை ௫-ம் அதி: யாக்கை நிலையாமை.

யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர்தாம்பெற்ற
யாக்கையாலாயபயன்கொள்க—யாக்கை
மலையாடு மஞ்சுபோற்றோன்றி மற்றாங்கே
நிலையாது நீத்துவிடும்

### வள்ளலார் அறுதி கேவலநிசையில்.

### உயிர்படுந்துன்பம்.

கட்டிய கட்டோ கருமலக்கட்டு
பூட்டியதளையோ பொன்றானசைத்தளை
வடைத்தவச்சிறையோ—வறிவிலாதச்சிறை
யெனினுமுயிர்க்கள்வ னெங்ஙனமுய்யுமே.

இருவினைமுசலம் யாக்கையுரலே
யதிற்பெய்பண்டம் போலாருயிரே
நினை நினைதாக்க நெளிவுபுழுங்கி
யுடுவான்காலை யல்லற்பட்டு
விடுவான்காலை விம்மிதமுறுமே.

14. வினா?

ஜென்பலாபம் பெறுதற்குச்சோபான முறையா யனுஷ்டிக்க வேண்டிய கிரமமென்ன?

14. விடை:—

பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாச மென்று நான்கு ஆச்சிரமதருமங்களேற்பட்டிருக்கிறது.

15. வினா?

அவைகளின் விவரமென்ன?

15. விடை:—

(1) பிரமச்சரியமாவது உபநயனம்பெற்று வேதமோதிக் கையிற் பலாசக்கோல்தாங்கி வயிறு கொள்ளுமளவும் பிச்சையேற்றுண்டு, சந்நியாசம்பெற்று விபூதி தரித்து நித்தியகன்மமனுஷ்டித்து பார்பதி பரமேசுரனை வழிபடவேண்டும். இப்படி யிருபத்துநான்கு வயசுவரை யிருந்து அப்பால் கிருகஸ்த ஆச்சிரமத்திக்கு வந்து ஒரு கன்னிகையை விவாகஞ்செய்து அந்த ஆச்சிரம தர்மத்தை நடத்திவரவேண்டும். இவனுக்குப் பௌதிகப் பிரமச்சாரி யென்று பேர். ஆயுள்வரை விவாகமில்லாமல் இந்த ஆச்சிரமத்திலிருப்பவனுக்கு நைட்டிகப் பிரமச்சாரியென்று பேர்.

(2) கிருகஸ்தமாவது மேற்கண்டபடி மணம்புரிந்து தருமத்தை நடத்துவது.

(3) வானப்பிரஸ்தமாவது மனைவியைப் பிள்ளைகள்வசம் ஒப்புவித்தாவது, அல்லது, உடன்கொண்டாவது வனங்களிற் சென்று [புல்வீடு, முனிவர்வாசமென்ற] பன்னசாலையிலிருந்து இயமாதியனுஷ்டித்து, கந்தமூலங்களாவது, பதினாறு கவளம் அன்னமாவது அருந்தி கிருச்சரம் சாந்திராயணமுதலிய விரதங்களிருந்து தேவர், பிதுர், தர்ப்பண முதலானது செய்து ஈசுர வழிபாடு செய்திருக்கவேண்டும்.

(4) சந்நியாசமாவது அப்பால் மனைவியை நீத்து, சிகை, உபவீதம், காஷாய வஸ்திரந்தரித்து தவஞ்செய்து எட்டுக்கவளம் அன்னமருந்தவேண்டும். இந்த ஆச்சிரமங்கள் பிராமணர்குலத்துக்கு மட்டும்.



## குற்றாலஸ்தலபுராணம்.

### தருமசாமிச்சருக்கம்.

பேதையர்பான்முகம் பாராதொழிதல் பிரமச்சரியங்
காதலியை மணம்புணர்ந்து வாழ்தல்காருகத்தியமா
மாதரொடு வனத்துறைந்து நோற்பது வானப்பிரஸ்தம்
ஓதுமிவை மூன்றுமொழித் தோன்றுணர்தல் சந்நியாசம்.

## மாகபுராணம்.

### 14-வதுமிருகசிருங்கன் இல்வாழ்க்கை உரைத்த அத்தியாயம்.

குண்டிகைக் கைப்பகவருக்குக் குக்குடமண்டத்
தளவாய்க்கொள்ளுஞ் சோற்றுப்
பிண்டமிருநாலாகு முயர்வானப் பிரஸ்தருக்கவ்
விரட்டிபேசில்
எண்டிசையும் புகழிடுமில்லறத்தினருக்
கெண்ணென் கென்றியம்பலாகுந்
தண்டுறைத்தலைப் பிரமச்சாரிக்கு
வயிறுகொள்ளுமளவுதானும்

## திருநெல்வேலி ஸ்தலபுராணம்.

### மகளிரிலக்கணங்கூறியசருக்கம்.

நன்கினில்லறம் விரும்புவோரிருபத்து நாலாண்
டன்புகூர்ந்திடு பிரமச்சரிய நெறியாற்றிப்
பின்பு நற்குருவருளினாற் பிறைநுதல்மாதை
இன்பமாகவே வதுவை செய்திணங்குதல் மரபாம்

நடை.

இதன்விரிவு சூதசங்கிதை 2-வது ஞானயோககாண்டம், பிரமச்சரியவிதி யுரைத்த அத்தியாயம், பின்னும், வானப்பிரஸ்தம், சந்நியாசவிதியும் பார்த்துக்கொள்க.

16. விஞ?

இந்தக்கருமத்திலெது விசேடம்.

16. விடை:—

கிருகஸ்தாச்சிரமமான இல்லறதர்மமே.

குறள் ௫-ம் அதி. இல்வாழ்க்கை.

அறனெனப்பட்டதே யில்வாழ்க்கையஃதும்
பிறன்பழிப்பதில்லாயினன்று

அறத்தாற்றினில்வாழ்க்கை யாற்றிற்புற
த்தாற்றிற்போ ஒய்ப்பெறுவதெவன்.

ஔவையார் கொன்றை வேந்தன்.

இல்லறமல்லது நல்லறமன்று
அறஞ்செயவிரும்பு

குற்றாலத் தலபுராணம்

மந்தமாருதச் சருக்கம்.

ஓதுபிரமச்சரிய மொழிந்தவானப்பிரஸ்த
முயர்சந்யாசம்
நீதியிலே பெறுகாருத்தியமாமாச்சிரம
நெறிகளுண்கிற்
கோதிலாமூவர் நெறிப்படர்பயிர்க்குக்
கொழுகொம்பாங் கொள்கையாலே
மேதினியில்யாவர்க்கும் வியன்காருகத்தியமே
விசேடமாமால்

17. விஞ?

அறம் என்றுலென்ன?

17. விடை:—

தருமம் அதாவது எழுவகைத் தோற்றத்திலு முயர்வான மானிடத்தோற்றத்தில் வந்தோன் தொன்று தொட்டு மாறி



மாறி காற்றுடிபோலும் ஊசல்போலும் சுழன்று சுவர்க்கம், நரகம், பூமியாகிய மூன்றிடத்துஞ்சென்று இன்ப துன்பமனுபவித்துவருகிற, ஜென்ன, மரணக்கடலை இறைவனது திருவடிப் புணைபற்றிக் கடத்தற்கு வேண்டுமுயற்சி செய்வதாம்.

18. விஞ?

இல்லறமாவதென்ன?

18. விடை:—

கிரகாச்சிரமத்திலிருந்து அதற்குரிய தருமத்தை நடத்தி முத்திபெறுவது

19. விஞ?

துறவாச்சிரம மாவதென்ன!

19. விடை:—

யான், எனது, என்று விகற்பித்துவருகிற அகப்பற்றும் புறப்பற்றையும், அதன் வழித்தாய்வரும் பிரவஞ்சமயலையும் விட்டு முற்றத்துறந்து அதற்குச் சோபானமுறையா யேற்பட்டிருக்கிற சரியை, கிரியா யோகங்களை, யநுஷ்டித்து அவைகளைத்தாண்டி ஞானசாஸ்திரத்தால் ஞானங்கைவந்து முதல்வன் திருவடியிற் கலத்தல்,

குறள் ௩௫-ம் அதி. துறவு

யானெனதென்னுஞ் செருக்கறுப்பான்
வானோர்க் குயர்ந்தவுலகம்புகும்

20. விஞ?

மேலேசொன்ன இல்லறதருமம் விசேடமென்பதெதுபற்றி

20. விடை:—

இல்லறதர்மி, பிதிர் தேவதை, தெய்வம், விருந்து, சுற்றம், பிரமசாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி, முற்றத்துறந்தவன், வறுமையுடையவன், அநாதியாயிருந்தவன், இந்தப் பத்தோடு

தானுள்பட, பதினொருபேர்களுக்கும் ஆகாரமாயிருந்து பிண்டங்கள் போட்டும் பொருளளித்து வழிபட்டும், குக்ஷிவாதைதீர அன்னமாடைகொடுத்தும், நல்லடக்கஞ்செய்தும், இரக்ஷித்து வருகிறான். அல்லாமலும் உலகோம்பற்பொருட்டு, கிரிஷி, வாணிபத்தொழில்களால், மற்றஜீவராசிகளுக்குங் களைகணாயிருக்கிறான், அந்தணர் தொழிலும் அரசன் செங்கோலும். இதுபற்றியே கோணாமனடை பெறுகின்றது, இதனாலேற்றம்.

குறள் ரு-ம் அதி: இல்வாழ்க்கை.

இல்வாழ்வானென் பானியல்புடையமூவர்க்கு
நல்லாற்றினின்ற துணை
துறந்தார்க்குந் துவ்வாதார்க்கு, மிறந்தார்க்கு
மில்வாழ்வானென்பான் றுணை

தென்புலத்தார் தெய்வம்விருந்தொக்கலொன்றாங்
கைம்புலத்தா றோம்பறலை

உஉ-ம் அதி: ஒப்புரவறிதல்

தாளாற்றித்தந்த பொருளெல்லாந்தக்கார்க்கு
வேளாண்மை செய்தற்பொருட்டு

குற்றாலத் தலபுராணம்

தருமசாமிச் சருக்கம்

இத்தகையநால்வர்களின் மூவர்க்குமிறந்தார்க்கும்
அத்தமுதலற்றவர்க்கு மாதாரமாதலினா
லுத்தமமாமில்லறமே வாழ்வினுக்குமுயர்நிக்கும்
வித்துமாந்துறவறத்தின் வேருமாமெனும்வேதம்

பெரியபுராணம்

திருத்தொண்டர் புராணவரலாறு

காராளரயரி வயலிலுழுதுதங்கள்
கையாரநட்ட முடியிருந்திலரேல்,



பாராருந்திறலரசர் கவித்தவெற்றிப்
பசும்பொன்மணி முடியிருந்துங்கலப்பைபூண்ட
ஏராலெண்டிசைவளர்க்கும் புகழ்வேளாள
ரேரடிக்குஞ்சிறு கோலாற்றாணியாளச்
சீருமுடியரசிருந்து செங்கோல்செலுத்துவர்
வேளாளர் புகழ்செப்பலாமோ

நான்மணிக்கடிகை மழைச்சிறப்பு.

மழையின்றிமா நிலத்தார்க்கில்லை மழையுந்
தவமிலாரில்வழியில்லை தவமு
மரசிலாரில்வழியில்லை அரசனு
மில்வாழ்வாரில் வழியில்

21. வினா?

இப்படிப்பட்ட இல்லறதருமமெது கொண்டு நடத்தவேண்டும்.

21. விடை:—

பரமேச்சுரன் தன்னுடைய அருள், அல்லது, வல்லபத்தை, வேருக்கி அபின்னசத்தி, சிற்சத்தி; யென்று பேர்கொடுத்து ஜீவர்களை இரக்ஷிக்கப் பஞ்சகிர்த்தியம் நடத்துவதுபோல நிமித்த காரணனான புருடன் முதற்காரணமான கருமத்தைத் துணைக் காரணமான உத்தமஸ்திரீகொண்டு ஆச்சிரம தருமத்தை நடத்த வேண்டும்.

குறள் சு-ம் அதி. வாழ்க்கைத்துணை நலம்

மனைத்தக்க மாண்புடையளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத்துணை

22. வினா?

அத்தகையமனைவி கிட்டாதவர்யாது செய்தல்வேண்டும்

22. விடை:—

கிட்டாவிட்டாலும் கிட்டினது நடக்கப் பொருத்தமில்லாவிட்டாலும் இல்லத்தைவிட்டுத் துறந்துபோகவேண்டும்.

ஔவையார்.

பத்தாவுக்கேற்ற பதிவிரதையுண்டானால்
எத்தாலுங்கூடியிருக்கலாஞ்—சற்றேனும்
ஏறுமாறாக விருப்பாளேயாமாகிற்
கூறாமற் சந்நியாசங்கொள்.

நாலடியார் 6-ம் அதி. துறவு.

மாண்டகுணத்தொடு மக்கட்பேறில்லெனினும்
பூண்டான்கழித்தற்கருமையாற்—பூண்ட
மிடியென்னுங்காரணத்தின் மேன்முறைக்கண்ணே
கடியென்றார் கற்றறிந்தார்

23. வினா?

இல்லறவாசி உலகத்தில் இன்றியமையாது பெற்றுக் கொள்ளவேண்டிய பொருளெது.

23. விடை:—

உத்தமஸ்திரியன்றி வேறுபொருளில்லை.

பிரமோத்திரகாண்டம்.

சிவதானமகிமை.

பெண்ணலத்தினைப் பெறாதவர் மகவினைப் பெறார்
பெண்ணலத்தினைப் பெற்றவரே மகப்பெற்றார்
பெண்ணலத்தினால் மகவுபெற்றிருமையும் பெறுவார்
பெண்ணலத்தினையன்றியோர் பெறும்பொருளின்றே



குறள் ௬-ம்அதி வாழ்க்கைத் துணைநலம்

பெண்ணிற்பெருந்தக்க யாவுளகற்பென்னுந்
திண்மையுண்டாகப்பெறின்.

பெற்றாற்பெறிற்பெறுவர் பெண்டிர்பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழுமுலகு

புகழ்புரிந்தில்லிலோர்க்கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடுநடை

24. வினா?

ஆயின் எக்குண நலமுடைய பெண்ணைத்தேடி வரித்தல் வேண்டும்

24. விடை:—

நாற்படி விலக்கவேண்டிய பெண்கள்

(1) ஒரு கோத்திரத்திற் பிறந்தவள்

(2) உபாதியுள்ளவள்

(3) உயர்ந்த ஆண்மகப்பெறாமல் பெண்ணைமட்டும் பெறுகிறவழியில் வந்தவள்

(4) பூமியில் நிலைத்துநிற்கிற குற்றமுள்ள மாயிற் பிறந்தவள்.

(5) மலை, சர்ப்பம், நக்ஷத்திரம், நதி, பறவை, இந்தப்பெயருள்ள பெண்கள்

(இதற்குதாரணமாக)

மலையரசி, நாகம்மை, கெங்கையம்மை, அன்னம்மை, மாலையம்மை, சித்திரைவடிவு, இதுபோலுள்ள பேர்களையுடையவள்

## காசிகாண்டம்

### 37 - மகளிர் இலக்கணங்கூறிய அத்தியாயம்

நண்ணுகோத்திர மொன்றினிலுதித்துளோர்
  நலிதருபிணியுற்றோர்
பெண்ணலாதயர்நன் மகப்பெறுநிலைப்
  பேதையர்வழிவந்தோர்
மண்ணினின்றவான் பழிபடுமரபினில்
  வந்துளோர் வரைபரந்தள்
விண்ணின், மீன், நதி, பறவையின் பெருளோர்
  வேட்டிடல் விதியன்றே

### திருநெல்வேலித் தலபுராணம்

உரியகோத்திர மொன்றினிலுதித்துளோருடலி
லரியவெம்பிணியுற்றவாலர் மொழிவழியோர்
பரியுமாண்பெருப்பாவையர் வழியினர்பணிபுள்
வரைவிண்மீனதிபேருளார் வரைந்திடலாகா

### வரிக்கவேண்டிய பெண்கள்

[1] இனிய சொல்லுடையவள்

[2] தனக்கிளையவள்

[3] பொறுமையுடையவள்

[4] முகத்திர்க்க முடையவள்

[5] பலசகோதரரோடு பிறந்தவள்

இப்பேர்ப்பட்ட பெண்களை வரித்தல் வேண்டுமென்றும், தள்ள வேண்டுமென்றும் காசிகாண்டம் திருநெல்வேலித் தலபுராணங் கூறுகின்றது



## காசிகாண்டம்

### 37-வது அதி

இனிய மென்மொழியுடையளாய்த்தன்னி னு
  மிளையளாயெவரோடு
முனிவிகந்திடு குணத்தளாய்ப்பொருந்திய
  முயற்கறை யொழிந்தோக்கும்
பனிசெய்வெண்மதி முகத்தளாய் மைந்தர்கள்
  பலரொடும்பிறந்தாளாய்த்
துனியிலாதநற்கன்னியை வேட்டிடல்
  தொன்மறைவழக்காமல்

### திருநெல்வேலித் தலபுராணம்

அமுதமென்மொழியுடையளா யழகினிற்றிருவாய்க்
குமுதமென்மொழி நண்பனுமுகத்தளாய்க் குணமுடைய
[வளாய்ச்
சமைகொள்மைந்தர்கள் பலரொடும்பிறந்த தங்கயளாயக்
கமழுமெய்யுடைக்கன்னியை வேட்பதுகடனும்

### மாகபுராணத்தில் தள்ளவேண்டிய

### தீப்பெண்கள் நடை

கணவனுடைய சொல்வழி நடப்பவளைப் பெண்டாகப் பெற்றவன், தெய்வேந்திர பதவியடைவானென்றுஞ், சொற்றட்டுகிறவளை மனைவியாகப் பெற்றவன், நரகம் புகுவானென்றும், அட்டைபோலப் பற்றின்விடத்திலுள்ள உதிரத்தைக்கிரகியாமல் கணவனுடைய புத்தியையும், திரவியத்தையும் பலவளங்களையும், உள்ள மகிழ்ச்சியையும் பெண் தன்மையின்றிப் பறித்துத் துன்பந்தருவாளென்றும் 5-வது மிருகசிருங்கன் தவஞ்செய்துமீண்ட அத்தியாயத்திற் கூறுகின்றது.

அதின்படி வரிக்கவேண்டிய பெண்கள்.

[1] கற்புடையவளாய்.

[2] நற்குலம் வந்தவளாய்.

[3] மகப்பேற்றுக்குரிய உறுப்புவாய்ந்தவளாய்.

[4] சத்திய நன்மையுடையவளாய்.

[5] குறிய உருவமில்லாதவளாய்.

[6] செம்பட்டை ரோமமில்லாதவளாய்.

[7] நிரம்பவளர்ந்தவளல்லாதவளாய்.

[8] தேகத்தைப்பார்த்திராதவளாய் இருத்தல்வேண்டும்.

இவ்வித உறுப்புகள்வாய்ந்த பெண் உண்டானால் கொண்டு வாருமென்று தந்தைகுச்சமுனியிடமிருககிருக்கன் சொன்னதாய் மாகபுராணங்கூறுகின்றது.

## தனிப்பாடல்.

### ஒப்பிலாமணிப்புலவர்.

சேய்கொண்டாருங்கமலச் செம்மலுடனேயரவப்
பாய்கொண்டானும் பணியும் பட்டீச்சுரத்தானே
நோய்கொண்டாலுங் கொள்ளலா நூறுவயதாமளவும்.
பேய்கொண்டாலுங் கொள்ளலாம் பெண்கொள்ளலாகாதே.

## மாகபுராணம்.

### 5-வது அத்தியாயம்.

அன்பிற்கணவனேவல்வழி
யடைவாளவளைப்பெறுமவனே
இன்பப்புவனத்தமரர்பத
மெய்திவாழுமியல்புடையான்



வன்பிற்கணவன் மொழியிகழ்ந்தாள்
மனையாளாகின் மற்றவனே
துன்பநரகக் குழிவீழ்ந்து
துயரம்புவியிற் றுய்ப்பவனே

தெண்ணீர்வாழுமட்டையுடன்
றீயமகளிர் நிகரென்றால்
புண்ணீரளவே யட்டையுறும்
புகன்றமகளிர் புந்தியுட
னுண்ணீர்மையினீட் டருந்தனமு
முலவாவலியும் முளமகிழ்வும்
பெண்ணீர்மையினாலறப்பறித்துப்
பிழைமிகவுந் தருகுவரால்

ஆதலாலித்தகையோரை யறவும்நீத்தே
யருங்கற்பின்
மாதராகி நற்குலத்தில் வந்தாளாகி
மதியினளாய்த்
தீதில்லாத மகப்பேற்றிற்
சென்னமுடையாடானாகி
ஓதும்வாய்மை நன்மையினின்
றொளிருமுகத்தாடானாகி

செய்யநிறத்திற் பொலிபவளாய் அங்கத்தொன்றுஞ்
சிதைவிலளாய்
வெய்யபிணிகளில்லாளாய்
விளங்குமொழுக்கமுடையளாய்த்
மெய்யதாயர் தந்தைவழித்
துகளொன்றில்லாத் தொடர்பினளாய்
சைய, மரவம், நதி, பறவை,
நாரு, வுடும்ப், பேரிலாதவளாய்

குறியவுருவமில்லாளாய்க்
கூந்தல் செம்மையில்லாளாய்

அறவுநெறியல்லாளாய்
அங்கநோயிராதவளாய்
மறுவின்மாதர்க்கெடுத்துரைக்கு
மியல்பிலொன்றாம் வழுவிலாத
யுறையுமவளை யுண்டாகிற்
கோடியென்று மறுதவத்தோன்

நடை

இன்னும் பெண்களுடைய குணவிசேடம் ஒழுக்கம், நடக்க வேண்டிய விபரங்களைப்பற்றி பின்னர்க்கூறப்படும்.

மகளிரிலக்கணத்திற் பரக்கக்காணலாம் இப்பேர்ப்பட்ட நற்குணம், நற்செய்கையுடைய பெண்ணை தேடி வரித்தல்வேண்டும்.

காமநூல் வழிச்சாதிப்பொருத்தமும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

25. வினா?

வரிக்கவேண்டிய பெண்களைக்குறித்து இக்கலை விதி, நூல்களிற் கூறப்பட்டுள்ளது. பெண்டுவாய்க்கும் புண்ணியவானுக்கு மாடுவாய்க்கு மகாராஜனுக்கு, என்று வாக்கியம் ஏற்பட்டிருக்கிறதே, அப்படித், தக்கருவாகலமுடைய பெண், எல்லாருக்குங் கிட்டுதல் கூடுமா.

25. விடை:—

புண்ணியபுருஷனுக்கன்றி மற்றவருக்கப்படிக்கூடாது தவப்பேற்றின்பேரில் மனிதத்தோற்றத்தில் யார்தான் அந்தத் தோற்றத்துக்குரிய தநு கரணமுதலியவை கிடைத்தகாலமுதல் ஜென்மந்தோறும் ஆர்ச்சிக்கப்பட்டேறியும் அநுபவிக்கப்பட்டுக் குறைந்தும் வருகிற, ஏலதனமும், முன்னிருப்புமாகிய, பாவபுண்ணியமென்ற, சஞ்சிதகன்மமே, பின்பிறவிக்குக் காரணமாய், வித்தாய்நிற்கிறது.

கன்மமில்லையாகிற், ஜென்மமில்லை,



பட்டணத்தார்.

வினைப்போகமேயொருதேகங்கண்டாய்
வினைதானொழிந்தாற்
றினைப்போதளவு நில்லாது கண்டாய்
சிவன்பாதமலர்
நினைப்போரைமேவு நினையாரை
நீங்கின் னெறியினின்று
னைப்போலொருவருண்டோ மனமே
யெனக்குற்றவரே

சிறும்வினையது பெண்ணுருவாகித்
திரண்டுருண்டு
கூறுமுலையு மிறைச்சியுமாகிக்
கொடுமையினாற்
பீறுமலமு முதிரமுஞ்சாயும்
பெருங்குழிவிட்
டேறுங்கரைகண்டிலே
னிறைவா கச்சியேகம்பனே

நடை.

அப்படி ஜென்மமாகப்பட்டவனுக்கு ஜெகதீசன் அவனுடைய முன்வினையில் அநுபவித்துத் தீர்ந்ததுபோக, எஞ்சிநிற்கிற பாகத்தில், எது, எது, பின் அநுபவத்துக்குவிடும்படியான பக்குவம் அடைந்திருக்கிறதோ அந்த வினையில், எவ்வளவு பாகம் கொடுக்கக்கூடுமோ அவ்வளவுபாகம், ஜெகதீசனால் நியதிசெய்து கொடுக்கப்பெற்று, அந்தப்புண்ணிய பாவச்சுமையாகிய வினையோடே, கருவமைந்து வருகிறான். இத்தவினையைத்தான், பிராரத்தவினை யென்று சொல்லப்படுகிறது.

சித்தியார் உ-ம் சூத்திரம்.

பேறிழவின்பமோடு, பிணிமூப்புச்சாக்காடென்னு
மாறுமுன் கருவுட்பட்ட, தவ்விதியனுபவித்தா
லேறிடுமுன்புசெய்த கன்மமிங்கிவற்றிற்கேது
தேறுநீயினிச்செய் கன்மமேலுடற் சேருமென்றே

### தனிப்பாடல்.

இன்னானை யின்னாள்பா லின்னபடி செய்யென்றால்
முன்னாளெழுதினவன் மூடனோ, மன்னாகேள்
பேறிழ, வின்பம், பிணிமூப்புச்சாக்காடிவ்
வாறுங்கருவிலமைப்பு

### நடை.

அந்தந்தச் ஜென்மத்தில், பிராரத்தவினை யநுபவம் நிகழுங் காலத்தில், வெறுப்பு விருப்புப்பற்றியும், நானென்கின்ற தற்போத முனைப்பின் பேரிலும், இதாகிதம், பாராபலநுபவித்தலில் செய்யிற் களிப்புபோல, மேலைக்குவித்தாய் வந்தேறுகிறவினை ஆகாமிய வினையெனப்படும். சஞ்சிதம்; பாரத்தவினை கூறவந்தவிடத்து இனப்பற்றி ஆகாமியவினையுங் கூறப்பட்டது.

### சிவப்பிரகாசம் பிரசலியல்பு.

மேலைக்குவருவினையே தென்னினங்கண்
விருப்புவெறுப்பென வறியவ்வினையுமெல்லா
மூலத்தவினைபயில்லா மென்னினுமென்
முற்றியதன்பயனுக்கு மூலைக்குமென்பர்
ஞாலத்து வினைகளிருதிறனாகும்புந்தி
நன்னாதவினை நனாகும்வினை யெனவொன்றிரண்டா
மேலைத்தானிதமகிதமா மிதனால்வாழ்வா
தெய்தியிடும்புண்ணிய பாவங்களென்றே

### நடை.

பாவ புண்ணியப்பலனை யூட்டுவிக்கும் பருவம் வந்தழி, அந்தக்கன்மங்கள் எந்தஸ்திரி சம்பந்தப்பட்டு நின்று, முன் ஈட்டப்பட்டதோ அந்த ஸ்திரியைப் பொருத்தி அந்தக் கன்மங்களை யிருவருக்கு மூட்டிவிக்கவேண்டியது சிவ ஆக்ஞை.



[உதாரணமாக]

### பெரியபுராணம் சுந்தரமூர்த்திசுவாமிகள் ஜெனனம்.

எந்தப்பெண்ணை வரிக்க எந்தப்புருஷன் தன்னாலும், பெற்றோர் முதலானவர்களாலும், முயற்சிசெய்கிறானோ அது அப்படி கைகூடுமாறின்றி கிட்டக்கூடியதே வருகிறது, எல்லாரும் புண்ணியமட்டுஞ் செய்தவர்களாயாவது, அல்லது பாவமட்டுஞ் செய்தவர்களாயாவது இருக்கல்கூடாது இரண்டையுமே யீட்டுவார்கள். தங்கள் முயற்சிப்படி நிறைவேறாமல், முட்டுற்றபோழ்து, தெய்வ சம்மதமில்லையென்றும், தொந்தப்பட்டது வருமென்றும், கொடுத்து வைக்கவில்லையென்றும், பலவாறு சொல்லிச் சமாதானஞ்செய்து கொள்ளுகிறார்கள், இது ஒவ்வொருவருக்கும், நிகழ்கிற அநுபவ நிலை அவரவர் பாவபுண்ணியத்துக்கேற்பக் கூட்டுவித்தல், சிவச் செயலென்று சாதாரணமாய் அறிந்தவிஷயமாயிருப்பதால் அச் செயல்வழி முயற்சியின் முடிந்தமுடிவாகக்கிடைக்கிற பாத்திர மெதுவோ, அது திருவருட் சம்மதமென்று நினைத்துவந்ததை வரிக்கவேண்டியதுதான்.

### நல்வழி.

ஒன்றைநினைக்கினது வொழிந்திட்டொன்றாகும்
மன்றியது வரினும் வந்தெய்தும், ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினுநிற்கும்
எனையாளு மீசன்செயல்

26. வினா?

விவாகஞ்செய்தபின் யாதுசெய்தல்வேண்டும்.

புரு. விடை:—

கிரகாச்சிரமதர்மத்தை நடத்தல்வேண்டும். அதாவது வைகறை பிராமியகாலமான விடிய, ஐந்து நாழிகைக்கு முன்னெழுந்து, அவசிய கருமமுடித்து தந்தசுத்தி ஸ்நானம்பண்ணி, ஜெபதபாதிகள்செய்து, அநுஷ்டானமுடித்து, கடவுள்பூசைக்காகக் கிரகயஞ்ஞ காருகபத்தியம், தக்ஷணாக்கினியம், ஆகவனீய

மென்ற, முத்தீவளர்த்து அக்கினிகாரியஞ்செய்து, பிரமம், தெய்வம், பூதம், பிதிர், மானுட, மென்ற பஞ்சவேள்விமுடித்து, கடவுளைவழிபட்டு, கிளையோடுந், தம்மிடம் வந்தவரோடும், அன்னமருந்தி, சாஸ்திர ஆராய்ச்சிசெய்தல்தான் இல்லறதர்மம்

*தனிப்பாடல்.

அந்தணரழலிற்காண்ப ரறிவிலாமாந்தர் தாமுஞ்
சந்தியில், மரத்தில், கல்லிற், றுபரந், தன்னிற்காண்பர்
சிந்தையிலறிந்தயோகி சிந்தையிற்றனை காண்பர்
பந்தமதகன்றஞானி யாவையும் பரமாய்க்காண்பர்

நடை.

கிருகஸ்தனுக்கு, முறம், அம்மி, துடைப்பம், உரல், உலக்கை, தண்ணீர்க்குடம், உபயோகப்படுத்திக்கொள்வதால், ஐந்து கொலையுண்டாகிறதென்றும், அதற்காகப் பஞ்ச எக்யஞ் செய்கிறதென்றும், இப்படி மனுஸ்மிருதி 84-ம் பக்கத்தில் கூறுகின்றது அரிவாள்மனை, அக்கினி, திருகை இதுவுங் குற்றமுடைத்து.

(1) பிரம எக்யம், வேதமோதல்.

(2) தெய்வ எக்யம், தேவதையைக்குறித்து அக்கினியிலோமஞ்செய்தல்.

(3) பூத எக்யம், வாயச பலிமுதலான துவைத்தல்.

(4) பிதிர் எக்யம், அன்னத்தினாலே தர்ப்பணஞ்செய்தல்.

(5) மானுட எக்யம், மனிதர்களுக்கன்னம்போடுதல்.

இதுபெரும்பாலும் பிராமணர்கள்செய்வது.

குற்றாலத் தலபுராணம்.

மந்தமாருதச்சருக்கம்

முனமாகவைகறைப் போதெழுந்தசௌசாதிவினை
முடித்துவாசப்



புனலாடி ஜெபதபங்கள் முயன்று கடவுட்பூசை
முயன்றுமுப்பா
லனலோம்பியைவகை வேள்வியுமியற்றிக்
கிளைஞருடனடுத்தோர் தம்மைத்
தினமோம்பி நுகர்ந்து கலையயின்றிருக்க
லில்லறத்தோர் செய்கையாமால்

27. வினா?

சுத்த அத்துவித சைவசமையத்தவர்களுக்கேற்பட்ட தருமமென்ன.

27. விடை:—

பிராமியகாலத்திலெழுந்து, சுத்தனாய். விபூதி தரித்துக் கடவுளைவணங்கித் தமிழ்வேத தேவார பாராயணம் செய்தபின் சைவாகமப்படிக்குள்ள நித்யகன்மநெறியென்ற நூலிற் கூறியபடி. சத்கர்மநெறியென்ற, சவுசம், தந்தசுத்தி, ஸ்நானம், அனுஷ்டானம், சிவபூசை, போசனம் என்னும் ஆறுகன்மங்களில் முன்சொன்ன மூன்றும், விதிப்படி ஒன்றின் பின்னொன்றாகச் செய்தல் வேண்டும். சமயதீக்ஷைபெற்று சமயத்துக்குவந்தவனாய் விசேஷ தீக்ஷைபெற்றுப் புத்திரனாய் கிரமப்படி அனுஷ்டானஞ்செய்து உருத்திராக்கமணிந்து, சிவபூசையந்தரி, அகவயில், விதித்தபடி ஆன்மசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி, யென்ற பஞ்சசுத்திசெய்து, பூசையைமுடித்துக் கடவுளை வழிபட்டு, அதிதி, தேசிகன், சிவனடியாரை அழைத்துவந்து பாதபூசைசெய்து, போசனவிதியிற சொல்லியபடி அன்னமிட வேண்டும். அப்படிச் செய்யாதருந்துமன்னம்; மலம், விடம், பிரேதமாமிசம், புழு, இதற்குச்சரியென்று நூல் கூறுகின்றது, நால்வகைஉண்டி, அறுவகை உருசியோடு அன்னமருந்திப் பின் உண்ணவேண்டும் அப்பால், புராணபடனம், ஞானசாஸ்திர முதலியதாராய்ச்சிசெய்து, மாலையிலநுஷ்டான முடித்து கொன்றைவேந்தன் ஆலயந்தொழுவது சாலநன்று என்றபடி ஆலயஞ்சென்று கடவுளை வணங்கி வரவேண்டும் அதுவும் இம்மைமறுமைப்பயன் கருதாது தலையன்போடு வணங்கவேண்டும். பிரவிருத்தியுள்ளவனாயிருந்தாலும் சிவபூசைசெய்ய இயலாவிடினும், சம

யத்துக்கு வந்ததாயுள்ள சமயதீக்ஷையாவது பெற்று, இயன்றமட்டுந் தேவார புராணபடன முதலிய எவ்விதவுபாசனையாவது செய்தே தீரவேண்டும், ஸ்திரியும் தீக்ஷை பெற்றிருக்கவேண்டும் இல்லையாகிலவள் பாகஞ்செய்த அன்ன முதலியவைகளை யருந்தல் குற்றம்.

## குற்றாலத் தலபுராணம்.

### திருநகரச்சருக்கம்

மூலமறை மனுவோதி முறைபெறு சைவாகமத்தால்
 முதல்வர் பூசைக்
காலமுற நித்தியநைமித்திய காமியங்களினுங்
 கருத்தினூற்றி
பாலமுதுண்ட பிரானடியர் குபூசைத் திருந்
 தமுதமருந்திடுதன்
சீலமலாதுணைசேர்ந்த புணர்ந்திருப்பர்
 முப்போதுஞ் சிவபூசைசெல்வர்

நித்தியம், நித்தப் பூசைசெய்வது
நைமித்தியம், விசேட பூசைசெய்வது
காமியம், ஒன்றைக்கருதிப் பூசைசெய்வது

### ஆசாரக்கோவை

வைகறையாமந்துயிலெழுந்து தான்செய்யு
நல்லறமுமொண்பொருளுஞ் சிந்தித்துவாயவுதிற்
றந்தையுந்தாயுந் தொழுதெழுகவென்பதே
முந்தையோர்கண்ட முறை.

### கொன்றை வேந்தன்.

அன்னையும்பிதாவு முன்னறிதெய்வம்



## காசிகாண்டம்

### 4-ம் அதி. கற்பிலக்கணங் கூறியது

அறந்தவாத் தமதன் பாருளினுற்
றுறந்துளோர் பிறப்போர் தொழில் செய்கு நர
சிறந்த தொல்குலர் தெய்வம் பசுவிருந்
திறந்துளோர்க்கும் பகுத்தினி துண்பரால்

28 வினா?
இது ஸ்திரியன்னியில் முடியாதா?

28. விடை:—
கிரகமென்றும், இல்லென்றும், உள்ள வாசஸ்தலத்துக்கு கிரகிணியென்றும், இல்லாளென்றும் ஸ்திரிகளுக்கே அப்பேர் ஏற்பட்டிருப்பதால் கிரகமே அவளுடையதாயும், அவளே ஆண்டு வரத்தக்கதாயும், புருடன் செல்வழிச்சென்று, தருமம் நடத்த வேண்டியவளாயுமிருக்கிறாள். அதுபற்றி, உத்தமஸ்திரிகளில்லாத கிரகம், பாழென்றும், காடென்றும், நூல்கள் கூறுகிறது.

### காசிகாண்டம் 4-ம் அதி.

மண்ணுறு நன்மனை வேய்ந்தவயங்கிய
வண்ணன் மாடங்களாயினுங் கற்புடைப்
பெண்ணினல்லவரில்லெனிற் பேய்க்கண
நண்ணுகின்ற வனமென நாட்டுவார்

### நல்வழி

நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா வுண்டிபாழ்
ஆறில்லாவூருக்கழகு பாழ்—மாறி
லுடப்பிறப்பில்லாவுடம்பு பாழ் பாழே
மடக்கொடியில்லா மனை

நாலடியார், ௩௮-ம் அதி. பன்னெறி

மழைதிளைக்கு மாடமாய் மாண்பமைந்தகாப்பாய்
இழைவிளக்குநின்றிமைப்பினென்னாம்—விழைதக்க
மாண்டமனையாளையில்லாதானில்லகம்
காண்டற்கரியதோர் காடு

நடை.

மனைவாழ்க்கையானது தர்மமாகிய சரக்கேற்றியதோர் பாரவண்டி அதை நடத்தவேண்டுமானால் அந்தவண்டியிற் கருமமாகிய நோக்காலை வைத்துக் கட்டவேண்டும். அதை யிழுக்க எருதுகள் ஸ்திரி புருடர்களாக இடப்பக்கம் ஸ்திரியும் வலப்பக்கம் புருடனும் பூண்டு ஒற்றுமையாயும் ஒன்றுக்கொன்று முனையாமலும் பின்தாழாமலும் இழுக்கல்வேண்டும். ஆமாகில் எவ்வளவு தூரமானாலும் நடைபெறும். எருதுக்கொப்பாந்தம் திருகல் சாதித்தல் படுத்துக்கொள்ளல்போல ஸ்திரீயோ புருடனோ மாறுபட்டால் அந்தவண்டி அற்பதூரங்கூடச் செல்லாது நின்றுவிடுமென்று நூல் கூறுகின்றது. கிரகாச்சிரமம் நடத்தி முத்தியடையவேண்டுமானால் உத்தமஸ்திரீ கிடைத்தாலன்றி ஒருபோது முடிவு பெறாது.

குற்றாலத் தலபுராணம்.

தர்மசாமிச்சருக்கம்

தருமமெனும் பண்டமிடுஞ்சகடமா
  மனைவாழ்க்கை
கருமமெனு நுகம்பிணித்துக் காதலியுந்
  தானுமென
இருவராய்ப் பூண்டிழுப்பினெத்துணைத்
  தூரமுஞ்செல்லு
மொருவராய்ப் பூண்டிழுப்பி
  னோரிறையுஞ் செல்லாதால்



நன்னெறி

காதன்மனையாளுங் காதலனுமாறின்றித்
தீதிலொரு கருமஞ்செய்யவே, யோதுகலை
யெண்ணிரண்டு மொன்றுமதியென்முகத்தாய்
நோக்கருன் கண்ணிரண்டு மொன்றனையேகாண்.

நடை.

அப்படிச்செய்ய மனைவி பொருந்தப்பட்டவளாயில்லாதிருந்தால் அவளை வெறுத்து நீக்காமலும் கொடூரச்செய்கைகள் செய்யாமலும் ஆண்தன்மை வீரம், என்பது புருடத்தன்மையென்றும் பேதமைக்குணமென்பது பெண்களுக்கென்றும் ஏற்பட்டிருப்பதால் கிரகாச்சிரமதர்மத்தை நடத்துதற்கேற்ற விதிகளைக் கற்பித்துக் கொடுத்து திருத்தஞ்செய்து அறியாமையை மாற்றி ஊசியுஞ் சரடும்போல நட்புற்றுப் பொருந்தி தர்மத்தை நடத்திவரவேண்டும். உத்தமஸ்திரி புருடனிருக்குங் கிரகத்தைப்பார்க்கிலும் வைகுண்டலோகமுமினிதல்லவென்று காசிகாண்டம் ஆசாரங்கூறிய அத்தியாயத்திற் சொல்லுகிறது. ஸ்திரி புருடர்களுருவமட்டும் வேறேதவிர உயிர் ஒன்றென்றும் அவர்களுக்குள் நட்பில்லாமல் மூளுவது சரீரமும் ஆன்மாவுஞ் சண்டைபோடுகிறதுபோலென்றும் பொய்யான நாடகத்தில் ஸ்திரி புருடர்களாக வேடங்கொண்டோர் அதற்கேற்ற தொழில்களைச்செய்து நடித்துக்காட்டுதல் போல மெய்யாக ஸ்திரி புருஷர்களென்றமைந்து திருவருளாற் பொருந்தப்பட்டவர்கள் தர்மத்தை மற்றவர்களுக்குச் சாக்ஷியாய் திருவள்ளுவர் செய்துகாட்டியதுபோல இவர்களுஞ் செய்துகாண்பியாமல் முரண்டால் கடவுள் தெண்டிப்பாரென்றும் துஷ்ட மிருகங்களும் மனிதனுக்குளகப்பட்டு வசமாய் விடுவதால் அதுபோல ஸ்திரியோ புருஷனோ இயல்பில்லாதவர்களாயிருந்தால் இதோபதேசத்தால் நல்வழியிற்றிருப்பிக்கொள்ளவேண்டுமென்றும் நீதிநூல்முறையிடுகிறது.

காசிகாண்டம்

வேட்டகந்தன்னிற் பொருள் கவர்ந்துண்டோர் வீழ்கலா நாகிடைவீழ்வர் கோட்டமில் குணத்துக் கொழுநனுமுள்ளக்

குறிப்புணர்ந்தினியனசெய்யு வாட்டமின் முல்லை மனைவியுமுறையு மில்லினுமினிது சொல்மகிழ்ந்து பாட்டளிதுதையும் பசுந்துழா பலங்கற்பங்கயச் செங்கணுலகே.

கொன்றைவேந்தன்.

பேதமை யென்பது மாதர்க்கணிகலம்
நுண்ணறிவுடைய நூலொடுபழகினும்
பெண்ணறிவென்பது பெரும்பேதமைத்தே

நீதிநூல் யக-ம் அதி.

புருடர் பாரியரியல்பு.

ஆவியின்றி யுடலில்லை யுடலின்றி ஆவியில்லை
யதுபோற் பத்தா
தேவியெனு மிருவர் சேர்ந்தோருருவாந்
செழுமலருந் தேனும்போல
மேனியவிருவருமே கன்னாது முமண்செய்யில்
விளங்குமெய்யுஞ்
சிவனுமொன்றேயொன்று போராடியழிந்தொக்குஞ்
செப்புங்காலே க.

தந்தைதாய் சோதரருற்றாரையெல்லாங்
கைவிட்டுத் தன்னைச்சார்ந்த
பைந்தொடியை யன்னயவர்போலாதரிக்கக்
கணவனுக்கே பரமமாதி
யந்தமிலான் முதற்றெய்வம் பதியிரண்டாந்
தெய்வமென வன்பினோடு
சிந்தைதனி னினைந்தருதுஞ் சேயிழை
பூவையர்க்கெல்லாந் தெய்வமாமால் உ.

பொய்யான நாடகத்திற் பதிமனைபோல் வேடமுற்றோர்
பூண்டகன்மஞ்
செய்யாரே னகைக்கிடமாமுலகறிய
மணவாளன்றேவியென்ன



மெய்யா யுற்றோர்தம்முணட்பிலரேற்
பிரபஞ்ச விநோதக்கூத்தைக்
கையாற் கொண்டாட்டுவிக்கும் பரனவரை
யழற்புகுத்திக் காய்வானம்மா ங.

கொழுநனுயினு மனையாயினு மியல்பில்லாரெனிற்
கூறின்சொல்லால்
செழுமை நெறியிற்றிருப்பவேண்டு மிதத்தால்வசமாஞ்
சினவிலங்கு
மழல்வதினுற் றுன்பமிதுமல்லாது பயனுளதோ
வருநோயுற்ற
விழியினை நன்மருந்திடாதழற் பிழப்பை
விடிலந்நோய் விலகுங்கொல்லோ ச.

பழமொழி.

குதிரை யிருப்பறியுங் கொண்டபெண்சாதி
குணமறிவாளென்றும்
கற்பனை கல்லைப்பிளக்குமென்று மிருக்கிறது

நடை.

மோக்ஷமடைய இது ஒரு சோபானமுறை யென்பதையும் இது இன்றியமையாது வேண்டற்பாலன வென்பதையுங் கவனி யாமல் ஸ்திரி புருஷர்கள் ஒற்றுமையின்றி மாறுபட்ட குணமுடை யவர்களாய் அவரவர்களுக்கு நேர்ந்தபடி, பாவபுண்ணியங்களைச் செய்து ஜெனனத்தை விருத்திபண்ணி அக்கடலின் கரையைக் காண யாதொரு பற்றுக்கோடுமின்றி கிரகாச்சிரமதருமியென்பது போய் கிரக அனுச்சிரம அதர்மியெனப் பயனடையாது வறிதே வாழ்நாளை வீழ்நாளாகக் கடத்திப் பாழாக்கலாகாது.

இதுபற்றியன்றோ அன்னதானத்தால் ஸ்திரிகள் செய்கிற புண்ணியம் அவர்களுக்கென்றும், அவர்களைச் சரியாய் நடக்கும் படிக்கு புருடர்கள் செய்யாதுவிட்டதோடத்தால் அறியாமைக் குணம்பற்றி அவர்கள் செய்கிறபாவம் புருடர்களுக்கென்றும் புரு

டர்கள் நிஷியம் விரயஞ் செய்வதில் பாவபுண்ணியமிரண்டுமுண்டாவதால் புண்ணியம் புண்ணியத்தோடுசேர்ந்து ஸ்திரிகளுக்கென்றும் பாவம் தங்களுக்கென்றும் கூறியிருக்கிறது. இது புருடர்களுக்கெல்லாம் பொதுவே. இதன் விரிவு மகளிரிலக்கணத்திற் பரக்கக்காணலாம். ஆகவே கிரகாச்சிரமதருமத்திலுண்டாகிற பாவ முழுதும் புருடர்கள்மட்டுமே சுமக்கிற சுமைதாங்கியாகிறார்கள்.

## குற்றாலத்தலபுராணம்

### கௌவுர்ச்சன சருக்கம்.

பூவையார்செய்யும் பாவம் புருடர்மேற் புருடர்பாவங்
கோவின்மேற் சுமையாமந்தக் கொற்றவன்புரியுபாவ
மேவுமே புரோகிதன்பால் விண்புரோகிதத்தர்வின்னோன்
மூவர்பாதகமுந் தாங்கும் முழுச்சுமைதாங்கிபோன்றான்

### விவேகசிந்தாமணி.

மண்டலத்தோர்கள்செய்த பாவ மன்னவரைச்சேரும்
திண்டிறன் மன்னற்செய்த தீங்கு மந்திரியைச்சேரும்
தொண்டர்கள்செய்ததோடந்தொடர்ந்துதன் குருவைச்சேரும்
கண்டனமொழியாள் செய்த கன்மமுங் கணவர்க்காமே

### நடை.

அல்லாமலும் புருடன் பாவியாயிருந்தாலும் முற்காலத்தினடந்துவந்த ஆசாரணைப்படி புருடனுடன் உடன்கட்டையேறியோ, அக்கினியிற்பாய்ந்தோ உயிர்விட்டவள் உத்தமியாயிருந்தால் அவளைக்கண்ட நமன் புருடனைப்பற்றியிருந்த கையைவிட்டுவிட்டு ஓடுவானென்றும் கெருடன் சற்பத்தைத் தூக்கிச்செல்லுதல் போல, புருடனைத்தூக்கிக்கொண்டு தேவலோகம் போவாளென்றும் அவளுடைய ஒவ்வொரு உரோமத்திற்குங் கோடிகாலவீதம் மோக்ஷத்தில் புருடனோடு இன்பமநுபவித்துக் கொண்டிருப்பாளென்றும் அவர் சுற்றங்களு மோக்ஷமடையுமென்றுங் காசிகாண்டம் கூறுகின்றது.



பெரியபுராணத்தில் இல்லறத்திலிருந்த நாயன்மார்கள் ஸ்திரியோடே ஒற்றுமையாயிருந்து பக்திசெய்து மோக்ஷமடைந்தார்களென்று பலசரித்திரம் பார்க்கிறோம். இந்த ஆதாரங்களினாலே மோக்ஷமடைய உத்தமஸ்திரீயும் நரகஞ்செல்ல அதமஸ்திரீயும் துணைக்காரணமாகவிருக்கிறார்களென்பது சொல்லாமேவிளங்கும். மோக்ஷத்தினபேட்சையுள்ள கிருகஸ்தன் மேலேசொன்னவிதிகளைக்கவனித்துத் தருமத்தை நடத்தவேண்டும். இஃதிவ்வாறிருக்க இக்காலத்து நண்பர்களில் சிலர் பெண்களைத் தன்வசமாக்கொள்ளாமல் அவர்கள் வழியிற்சென்று தங்களுக்குள்ள சுயாதீன அதிகாரத்தையுஞ் சுதந்தரத்தையும் விடுத்து கிரகாச்சிரம தருமத்திலடையவேண்டிய சுகத்தையும் பயனையுங்கெடுத்துப் பெரும்பாலும் துன்புறுகின்றார்கள். அதை நீக்க முயலவேண்டும்.

### குறள் ௯௧ அதி. பெண்வழிச்சேறல்.

நட்டார் குறைமுடியார் நன்றாற்றார்
நன்னுதலாட் பெட்டாங்கொழுகுபவர்

### காசிகாண்டம் ௪-ம் அதி.

முற்றுச் செந்தழன் மூழ்கிய கற்பினோர்
புற்றராக்கொடு புள்ளரசேகல்போல்
எற்றுகால படர்கைபறித்தினி
துற்றகேள்வரோடும்பரினேகுவார்

கொழுநன் பாவியெனினுங் கொழுநனோ
டழலின் மூழ்கினள் கற்புடையாளெனில்
விழியிலன்னவட் காணில் வெங்கூற்றுவ
னுழுவலன்பனைக் கைவிடுத்தோடுமே

நீடொத்தலரோமுயிர் நீத்திடும்
வீடில்கற்பினள் மெய்ம்மயிரொன்றினுக்
காட்கப் பசும் பொன்னிலத்தரயிரங்
கோடிகாலங் கொழுநனோடின்புறும்

கற்புமேய கனக்குழை மாதரைப்
பெற்றுளோர்தம் மரபும்பெருந்தவக்
கற்பினாற்கொண்ட காதலனாருயிர்ச்
சுற்றம்யாவுந் துறக்கத்தினெய்துவர்

29. <u>வினா?</u>

விபூதி, உருத்திராக்கமணிந்து சிவபூசை முதலான எக்காரியமுஞ் செய்யவேண்டுமென்றும், அது தரியாது செய்யுங்கிரியை பயன்படாதென்றுஞ் சொல்லியிருக்கிறதே ஆனாலவ்விபூதியின் வரலாறென்ன.

29. <u>விடை:—</u>

விபூதிக்குக்காரணம் பசுக்கள் அவைகள் திருப்பாற்கடல் கடையும்போது க்ஷீராப்தியிற் பிறந்து கைலாசத்தில் வந்து ஜெகதீசனுக்குபயோகமாகிற பஞ்ச கவ்வியம் கோரோசனைகொடுத்தும் யாகாதி கிர்த்தியங்களுக்கு வேதியர்கட்கு உபகாரமாயும் இருந்தவைகள் இப்போதுலகத்திலிருக்கிற பசுக்களும் அந்த வர்க்கங்களே.

### பஞ்சகவ்விய விபரம்.

கோமயம், கோசலம், பால், தயிர்,
நெய், ஆக ஐந்து கோரோசனை

| பெயர். | நிறம். | ஜாதி. |
|---|---|---|
| 1. சுரபி | ஸ்வேதம் வெள்ளை | பிரமஜாதி |
| 2. சுமனை | இரத்தம் சிவப்பு | க்ஷத்திரியஜாதி |
| 3. நந்தை | கருமைகலந்தபொன்மை புகைநிறம் பீதவர்ணம் | வைசியஜாதி |
| 4. பத்திரை | கிஷ்டினம், கறுப்பு | சூத்திரஜாதி |
| 5. சுசீலை | தாமிரம், கருமை மிக்க சிவப்பு | சங்கரஜாதி |



### சிவஞானதீபம்.

பொற்பமரும் பாற்கடலி லுற்பவமாஞ் சுரபி
புகலிலதன் கோமயத்திற் கூவிளந்தானுளவாம்
அற்புதமாந் திருமகளவ் வில்வமதிற் பொருந்தும்
அகிலாரம் பளிதமத னளையதனி லுளவாங்
கற்பமருஞ் சுரர்க்கமுத நவநீதந் துதிக்குங்
கதிருடனே செந்நெல்லதன் பாலதனிற்றோன்றுஞ்
சொற்பயில் குங்கிலியமனையுற் பலவீரதனிற்
றோன்றிடுங்கோரோசனையு மதனுதரத்துதிக்கும்

பளிதம் = கருப்பூரம் அளை = தயிர்

காசிகாண்டம் உ-வது தேவர்கள் பிரலோகமடைந்தது.

ஆன்குளம்படியிற் சேர்ந்தவருந்துகள் தோயப்பெற்ற
ஊன்பயில்யாக்கை கங்கைதோய்ந்ததாமருப்பினுச்சி
வான்புனற் கடவுட்பேரியாறிருக்கும் வானிலவுகாலும்
கூன்பிறைமுடித்தசெல்வி கொம்பிடைவதியுமாதோ

உறுபுனலடக்கிவேத நெறிவழியொழுகுகின்ற
வறுதொழிலோருமானுங் குலமொன்றுமவருளாய்ந்து
மறுவறுமறையோர்தன்பான் மந்திரமனைத்தும்வைத்தேன்
தொறுவிடையவிகள்யாவுந் தோமறத்தொகுத்துவைத்தேன்

### தனிப்பாடல்.

நாலுகால்வேதமாகும் நயனங்களிரவிதிங்கள்
மேலெலாந்தேவரூபம் வீசுவால் நமசிவாயம்
ஆலமாங் கொம்பிரண்டு மயனொடுமாலுமாகுஞ்
சீலமாம் பசுவின்மேனி சிவமென்றுஞ் செப்பலாமே

### நடை.

இதன்பெருமை யின்னும் விரிக்கிற், பெருகும் இப்படிப் பசுக்களுக்கு, மிருந்த பெருமைகூறப்பட்டிருக்கிறது, மிருகவருக்கத்

திலே, பசுக்கள், மேன்மையுடையதென்பது சொல்லாமலே விளங்கும், பிள்ளைகள்முதலானவரைக் காப்பதுபோல் வளர்க்கக்கூடியது அதன்கோமயத்திலிருந்து, கற்பம், அநுகற்பம், உபகற்பமென்று, உத்தமம், மத்திமம், அதமமாக, மூன்றுவித விபூதி உண்டாக்கப்படுகின்றது.

## முதலாவது கற்ப விபூதியாவது.

உத்தமஜாதியும் கூன், குருடு, சொண்டி, நோய், கிழடு மலடு, முதலிய குற்றமில்லாததாயுமுள்ள பசுக்களைக் குளம்பாட்டி கொட்டகத்தைச் சுத்திசெய்து, கொண்டுவந்துகட்டி சம்பாவைக்கோலைப் போட்டு மறுநாட்காலையில் தூப, தீப, நிவேதனங், கற்பூரஞ்செய்து, அன்னமூட்டி, கோகாயத்திரி மந்திரம் (நூறு) ஜெபித்து, கோமயம் கீழேவிழாமல் கையிலேற்றுப் பிசைந்து உண்டைசெய்து, மேன்மாடங்களில் வைத்துலர்த்தி ஓமாக்கினியாற்றகித்து வாசனைத்திரவியஞ்சேர்த்து புதுமண்பாத்திரத்தில் வைத்து சுத்தமுடிக்கையிலடைத்துக்கொள்ளவேண்டுமென்று சுயம்புவ ஆகமம் சிந்திய விசுவ ஆகமங்கூறுகின்றன.

## பெரியபுராணத்தில்.

### முழுநீறுபூசிய முனிவர் புராணம்.

அம்பலத்தேயுல குய்யவாடுமண்ணா
லுவந்தாமெஞ்சினாயு மளிக்கவாக்க
ளிப்பரிசையனு மயமாயிருந்தபோது
லீன்றனிய கோமயமந்திரத்தினாலேற்
றம்பர்தொழுவெழுஞ் சிவமந்திரவோமத்தா
லற்பவித்த சிவாங்கிதனிலுணர்வுக்கெட்டா
வெம்பெருமான் கழனினைந்திட்டதாகி
லிதுகற்பமென்றெடுத்திங்கேத்தலாகும்

## இரெண்டாவது அநுகற்பமாவது

காட்டிலுலர்ந்துகிடக்கிற கோமயத்தைக் கொண்டுவந்து, தூளாக்கிக் கோசலத்தாற் குழைத்து உண்டைசெய்து, காய்க



பின், அத்திரமந்திரத்தால் தகித்தெடுப்பது, அநுகற்பமென்று பெரியபுராணத்திற் கூறுகின்றது.

### முழுநீறுபூசிய முனிவர் புராணம்

ஆரணியத்துலர்ந்த கோமயத்தைக் கைக்கொண்
டழகுறவுண் பொடியாக்கியாவின்சுத்த
நீராவித்தத்திர மந்திரத்தினாலே
நிறையமுறப்பிடித்தோம நெருப்பிலிட்டுச்
சீரணியும்படிவெந்து கொண்டசெல்வத்
திருநீறுமநுகற் பந்தில்லைமன்றுள்
வாரணியுமுலையுமையாள்காணவாடு
மாணிக்கக்கூத்தர் மொழிவாய்மையாலே

## மூன்றாவது உபகற்பமாவது

காட்டுத் தீயில் வெந்தசாம்பல், மாட்டுக்கொட்ட முதலியது வெந்தசாம்பல், இதுகளைக்கொண்டுவந்து மேலே சொல்லிய படி தகித்தெடுப்பது உபகற்பமென்று பெரியபுராணத்திற் கூறுகின்றது.

### முழுநீறுபூசிய முனிவர்புராணம்

அடவிபடுமங்கியினால் வெந்தநீறு
மானிலைகளன்றொடக்க வெந்தநீறு
மிடவகைகளெரிகொளுவ வெந்தநீறு
மிட்டிகைகள் சுட்டவெரி பட்டநீறு
முடனன்றி வெவ்வேறேயாவினீரா
லுரைதிகழுமந்திரங் கொண்டுண்டையாக்கி
மடமதனிற் பொலிந்திருந்த சிவாங்கிதன்னால்
வெந்ததுமற்று பகற்பமாகும்

## நான்காவது அகற்பம்

இது அன்னியரிடத்தில் வாங்கித்தரிப்பது அதமா அதமம். இது ஒருபோதுங்கூடாது

30. வினா?

இப்படி உண்டாக்கின விபூதியை எப்படித்தரித்தல் வேண்டும்

30. விடை:—

ஜலஸ்நானம், பஸ்மஸ்நானம் என்ற இரண்டில் முதலாவதைச்செய்ய வியலாதவன் உத்தூளனமாகிய பஸ்மஸ்நானஞ் செய்யலாமென்று மதங்கஆகமங் கூறுகின்றது, அதாவது (உபாகமம்)

சிரசு, நெற்றி, இருதயம், நாபி, சர்வாங்கம் ஈசானாதி பஞ்சப்பிரம மந்திரத்தால், இடவேண்டுமென்று சோமசம்பு ஆகமங்கூறுகின்றது.

நிவர்த்தியை யநுஷ்டிக்கிற ரிஷி சன்னியாசிகள், சங்கிதா மந்திரத்தால் உம் படு சேர்த்து அணியவேண்டுமென்று சுப்ரபேத ஆகமங்கூறுகின்றது.

தரிக்கவேண்டிய விடங்கள்

32. 16—8—5

இதில் முப்பத்திரண்டுக்கு விபரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| சிரசு | 1 | கண்டம் | 1 | குய்யம் | 1 | கணைக்கால் | 2 | |
| நெற்றி | 1 | விலா | 2 | நாபி | 1 | பாதம் | 2 | |
| காது | 2 | மணிக்கட்டு | 6 | தொண்டைமேலே | 2 | | — | |
| கண் | 2 | இருதயம் | 1 | உள்ளே | 2 | | 32 | |
| நாசினுனி | 2 | வாகு | 2 | முட்டு | 2 | | | |



இந்த ஸ்தானங்களுக்கு அதிதேவதைகள்

இதற்கு விபரம்

| 1 அட்டமூர்த்தி | 2 அட்டவித்தியேசுரர் | 3 அட்டதிக்குப்பாலகர் | 4 அட்டவசுக்கள். |
|---|---|---|---|
| பிருதிவி | உருத்திரன் | இந்திரன் | அனலன் |
| அப்பு | அனந்தன் | அக்கினி | அனிலன் |
| தேய்வு | சிவோத்தமன் | யமன் | ஆபச்சைவன் |
| வாய்வு | ஏகநேத்திரன் | நிருதி | சோமன் |
| ஆகாயம் | ஏகருத்திரன் | வருணன் | தரன் |
| சூரியன் | திரிமூர்த்தி | வாய்வு | துருவன் |
| சந்திரன் | ஸ்ரீகண்டன் | குபேரன் | பிரத்தியூசன் |
| ஆன்மா | சிகண்டன். | ஈசானன் | பிரபாசன் |

அட்டமூர்த்திக்குத் தேவாரம்

அப்பர் சுவாமிகள்

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
  இயமானனாயெறியுங் காற்றுமாகி
அருநிலையதிங்களாய் ஞாயிறாகி
  யாகாயமாயட்ட மூர்த்தியாகி
பெருநலமுங்குற்றமும் பெண்ணுமாணும்
  பிறருருவுந்தம் முருவுந்தானேயாகி
நெருநலாயின்றாகி நாளையாகி
  நிமிர்புன்சடையடிகணின்றவாறே

இடம் பதினாறுக்கு விபரம்

| இடம் | | | | அதிதேவதை |
|---|---|---|---|---|
| சிரசு | 1 | முட்டு | 2 | சிவன் |
| நெற்றி | 1 | பின்பக்கம் முது | | சதாசிவன் |
| அம்சத்வயம் | 2 | குக்குக்கீழ முச் | | மயேச்சுரன் |
| இருதயம் | 1 | சந்தி | 1 | ஈசானன் |
| நாபி | 1 | கண்டம் | 1 | தற்புருஷன் |
| மணிக்கட்டு | 4 | | — | அகோரன் |
| பாரிசம் | 2 | | 16 | வாமதேயன் |
| | | | — | சத்தியோசாதன் |

இதுதான் இப்போ அநுட்டிக்கப்பட்டு வருகிறது.

இப்படிக் காரண ஆகமங் கூறுகின்றது, காமிகஆகமத்திலும், சிந்தியவிசுவ ஆகமத்திலுஞ், சொல்வதாய் சைவபூசணத்தில் விபரித்திருக்கிறது.

இடம் எட்டுக்கு விபரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சிரசு | 1 | இருதயம் | 1 | நாபி | 1 | பின்பக்கம் | 1 |
| நெற்றி | 1 | வாகு | 2 | கண்டம் | 1 | | |

எட்டுக்கு ஐந்துக்கு விபரம்.

| அதிதேவதைகள். | இடம். | அதிதேவதைகள். |
|---|---|---|
| பிரமா | சிரசு | 1 ஈசானன் |
| கந்தன் | வாகு | 2 தற்புருஷன் |
| விநாயகன் | இருதயம் | 1 அகோரன் |
| விஷ்ணு | நாபி | 1 வாமதேயன் |
| ஈசுரன் | | சத்தியோசாதன் |
| பூமிதேவி | | |
| பிதிர்கள் | | |

திரிபுண்டரம்.

| தரிக்கும் விவரம். | மந்திரம் | அதிதேவதை | கிருத்தியம் |
|---|---|---|---|
| அனாமிகை (மோதிரவிரல்) | அகாரம் | பிரம்மா | சிருஷ்டி |
| மத்திமை (நடுவிரல்) தர்சனி ஆள்காட்டி விரல் | உகாரம் | விஷ்ணு | திதி |
| இந்தமூன்றுவிரலால் இடவேண்டும் | மகாரம் | உருத்திரன் | சங்காரம் |

மும்மலங்களையுந் தகிக்கதாய்ப் பொருள்கொள்ளும் இப்படித் தசதிகாலோத்திர ஆகமங்கூறுகின்றது.



[உபாகமம்]

இடவேண்டிய பிரமாணம்.

| ஜாதி. | நீளம். |
|---|---|
| பிராமணர் | ஆறு அங்குல நீளம் |
| க்ஷத்திரியர் | நாலு அங்குல நீளம் |
| வைசியர் | மூன்றங்குல நீளம் |
| சூத்திரர் | ஒரு அங்குல நீளம் |

இவ்விதந்தரிக்கவேண்டுமென்று, சுப்ரபேத ஆகமங்கூறுகின்றது. புருஷனுக்கு ஏற்பட்டது ஸ்ரீக்கும் உண்டு, குறைய இட்டால் ஆயுள் க்ஷீணம், திரிபுண்டரந், தடக்ஷயம் சிரசு, நெற்றி, இருதயம், புஜம், இதுகளில் நேத்திர அளவுக்கு இடவேண்டும், மற்றஸ்தானங்களில் ஒரு அங்குலம், தரிக்கவேண்டுமென்று, ஸ்மிருதிரத்நாவல்லி ஆகமங் கூறுகின்றது.

[உபாகமம்]

விபூதி செலவுசெய்யும் அளவு.

| ஜாதி | அளவு |
|---|---|
| பிராமணர் | இரண்டரைக்கழஞ்சி |
| க்ஷத்திரியர் | இரண்டு கழஞ்சி |
| வைசியர் | ஒன்றரைக்கழஞ்சி |
| சூத்திரர் | ஒரு கழஞ்சி |

இப்படி சர்வக்ஞானோத்தர ஆகமங்கூறுகின்றது.

[உபாகமம்]

தீக்ஷையில்லாதவர்கள் தரிக்கவேண்டியவிபரம்.

| ஜாதி. | விவரம். |
|---|---|
| பிராமணர் | திரியுண்டரம் ≡ இடலாம் |
| க்ஷத்திரியர் | வட்டம் ○ |

| | |
|---|---|
| வைசியர் | அர்த்த சந்திரன் — |
| சூத்திரர் | தீபம்போல மேல்நோக்கி இழுக்கவேண்டும். |

இதில் சமயம், விசேஷம், நிருவாணதீக்ஷை பெற்றவர்கள், ஆசாரியார், திரிபுண்டரமிடலாம், மற்றவர்கள் இடக்கூடாதென்று காரண ஆகமங்கூறுகின்றது. இன்னும் விரிக்கிற்பெருகுமென் றஞ்சி விடுக்கப்பட்டது.

## பிரமோத்திரகாண்டம்.

### திரிபுண்டரமுரைத்தது.

என்று வினவு முனிக்கிசன்
இயம்புமுரைத்த திருநீறு
நன்றுநீம்பாற் கோமயத்தைச்
சுட்டவடலையாருங்கா
னின்றதிரிபுண்டர மதுதான்
சென்னி நெற்றிகளமிபிர்தோ
ளொன்று மார்பு நாபி புற
முருவமுதலுக்தானமாய்

குழைத்துத்தைவர் தருற்பென்னார்க்
குழைத்தநீற்றை வெண்ணிலவி
லிழைத்ததென்னச் சொன்னவிடத்
தியற்றும்போழ்தி னெற்றியின்கண்
டழைத்த விரலெடுநீக்கித் தற்சனியா
லனுமிகையாற் பிழைத்தலறவே
தரித்தெதிராப்
பெரிய விரலால் நடுவணிந்தால்

அதுவே திரிபுண்டரமுரைத்த
வங்கமவையே யிடனுரும்
பதியாலுரைத்த மந்திரங்கள்
பஞ்சப்பிரமமுமபிடத



விதியால் வேதத் தெடுத்துரைத்த
வியன்மந்திரங்க ளென்றறிவாய்
புதிதாய் நின்ற காலங்கண்
முப்போதுக ளெப்போதினுமாம் ௫

நீளம் புருவத் தளவாகு
மிடையினீக்க மொருவிரலா
மானுந்தெய்வ முருத்திரனோ
டரியமகேசன் சதாசிவனு
நானுஞ்சிலங் கடைப்பிடியாய்
நான்காயிட்டுந் திரவியங்க
ளோந்தருபால் வெண்ணீறு
முலகுக்குயிராந் தோயமுமே ௬

31. வினா?

இத்தகைய விபூதியைத் தரித்துக்கொள்வதிற் பெறும் பயன்யாது.

31. விடை:—

இருகையாலும் உளர்த்துவமாக திரிபுண்டரம் மூன்று விரலாற்றறிக்கப்படுவது. அவ்விதம் இட்டால் ஆயிரங்கோடி வருஷம் கைலாசத்திலிருப்பான், ஏக அஸ்தத்தாலுந் தலைகுனிந் துந்தரித்தால் நூறு யோனிநாயாகப்பிறந்து, சண்டாளக்கிரகத்தி லிருப்பான், அணுவளவு பூமியிற்சிந்தினால் ஆயிரம் யுகம் நாக ப்ராப்தியடைவான், திரிபுண்டரமில்லாத நெற்றி, ஸ்மசானதெரிசன மாகும், கண்டால் மூலமந்திரம் நூறுஜெபித்துப் பாவத்தைப் போக்கவேண்டும். (லலாடசூன்யம் மயானதரிசனம்) திரிபுண்டரத் தால் ஆசாரம், ஜெபம், ஓமம், தீர்த்தம் தேவபூசை, இந்தப்பல னெல்லாம் கிடைக்கும். அரன், அங்கி, ஆறு, குரு, நலமிலாப் பூமி, இதுகளுக்கெதிர்நின்று விபூதியணியலாகாது

## பெரியபுராணத்தில்.

### முழுநீறுபூசிய முனிவர்புராணம்.

இந்தவகையாலமைத்த நீறுகொண்டே
யிருதிறமுஞ் சுத்தி வரத்தெரித்தபின்னர்
அந்தமிலா அரனங்கியாறுமெய்மை
யறிவித்தகுரு நன்மைபல்லாப்பூமி
முந்தவெதிராணியாதே யணியும்போது
முழுவதுமெய்ப்புண்டாகச் சந்திரனிற்பாதி
நந்தியெரி, தீபம்நிகழ் வட்டமாக
நாதனடியாரணிவார் நன்மையாலே

### சிவஞானதீபம்.

ஒருகாத்தை நீட்டிவிரல் மூன்றால்வாங்கி
யொருவிரலாற் பிடித்திறங்கி யோவிர்வெண்ணீறு
பெருநிலத்தில் விழப்புனைவோர் சிரவிசோமன்
பெருங்கால மருநரகிற் போகாதாழ்வா
ரிருகரத்தாற் றொழுதேற்றங்கிறைவனுரா
னெரிபதனையயனத்த நிலைக்கிதிற்பூசாமற்
றிருவளைதோள செவிசிரவப்புனைவோரென்றுந்
திருவருளாலிறையுலகஞ் சேர்ந்துளாரே

பதவை ஈ வழி

| தரிக்குமிடம் | தரித்தால் நீங்கும் பாப விவரம் |
|---|---|
| தலை | கழுத்துக்கு மேற்பண்ணின பாவம்போகும் |
| நெற்றி | அவமிர்த்து ஸர்விக தோஷம்போகும் |
| தொண்டை | அபக்ஷ்ய பக்ஷண தோஷம்போகும் |
| மார்பு | மனதினாற்பண்ணின பாவம்போகும் |
| நாபி | ஆண்குறியாற்செய்த பாவம்போகும் |
| முழந்தாழ் | காலினாற்பண்ணின பாவம்போகும் |
| முச்சந்தி | குதத்தினாற்பண்ணின பாவம்போகும் |
| பாரிசம் | பரஸ்திரீ ஆலிங்கன தோஷம்போகும் |



இது சைவ பூஷணத்திலும், ஸ்காந்தத்திலும் சொல்லுகிறது.

### கொடுக்கும் இம்மைப்பலன்.

| | |
|---|---|
| சிரசு | கிரீடமகுடாதிகளைக் கொடுக்கும் |
| நெற்றி | பட்டவர்த்தனராகப்பண்ணும் |
| கழுத்து | முத்துமாலை, பொன்மாலை, பட்டுவஸ்திரம் ஸ்திரீமுதலான போகப்பொருளைக்கொடுக்கும் |
| கை | தோள் வளைமுதலானது உண்டாகும் |
| முட்டு | இரத கெஜ துரக பதாதிகளைக்கொடுக்கும். |

### கொடுக்கும் மறுமைப்பலன்.

| | |
|---|---|
| தலை | ஒரு சந்திரகலையைக் கொடுக்கும் |
| நெற்றி | நேத்திரமுண்டாகும் |
| தொண்டை | லாஞ்சனமல்லது கறைக்கண்டமுண்டாகும் |
| மார்பு | சர்வஞ்ஞத்துவமுண்டாகும் |
| பாரிசம் | திவ்விய ஸ்திரீயுண்டாகும் |
| கை | மான் மழுமுதலான ஆயுதமுண்டாகும் |
| தொப்புள் | ரிஷபவாகனம் சாமரம்கிடைக்கும் |
| முச்சந்தி | கைலாசவாசங்கிடைக்கும். |

### பஸ்மதேவரூபம்.

மூன்றுமுகம், ஒன்பதுகண், மூன்றுகை, நடனகோலம், செவந்தமேனி, உக்ரவேடம், பஸ்மதாரணமென்று, மகுடாகமங் கூறுகின்றது.

பஸ்மம் பகாரம் பாவங்களைச் சேதிக்கிறது

மகாரம், மரணமாய்ப்போகிறது என்று பொருள்

| நிறம். | ஜாதி | அணிந்தபலன் |
|---|---|---|
| வெள்ளை | பிராமணஜாதி | போகமோக்ஷங்கொடுக்கும் |
| செவப்பு | க்ஷத்திரியஜாதி | கீர்த்தியைப்போக்கும் |
| பொன்னிறம் | வைசியஜாதி | ஐஸ்வரியம்போக்கும் |
| கறுப்பு | சூத்திரஜாதி | வியாதிபோகும் |

ஆனதால் வெள்ளை விபூதியே தரிக்கவேண்டும் பரமேசுரனே இதைத்தரிப்பதாய் தமிழ்வேதமே சொல்லுவதாலிது சிவசின்னமாகிறது.

## அப்பர்தேவாரம்.

நீறுமெய்ப்பூச வல்லானும்
நினைப்பவர் நெஞ்சத்துள்ளானும்
ஏறுகந்தேறவல்லானும்
எரிபுரை மேனியினானும்
நாறுகரந்தையினானும்
நான்மறைக்கண்டத்தினானும்
ஆறுசடைக் கரந்தானும்
ஆரூரமர்ந்தவம்மானே

## சுந்தரர் தேவாரம்.

பொடியார் மேனியனே
புரிநூலொரு பால்பொருந்த
வடிவார் மூவிலைவேல்
வளர்கங்கையி னங்கையொடும்
கடியார் கொன்றையனே
கடவூர்தனில் வீரட்டத்தெம்
மடிகே ளின்னமுதே
வெனக்கார் துணைநீயலதே

## கதை.

சர்வ சம்மாரகாலம் முப்பத்தாறு தத்துவமுள்ளபட அத்துவாக்களோடு அழிக்கப்பட்டு ஈசன் ஏகவுருவாய் நிற்பரென்று



சொல்லப்படுகிறது. பரசுபாணி சுடலையாடி யென்றும் சவந்தாங்கு மயானத்துச்சாம்பலென்றும் சொல்கிறபடி உலகத்தை அக்கினி பிரளயத்தாற் சுட்டெரித்தகாடாகிய மயானத்தில் நின்று அக்காலம் அந்த வெண்பொடியாடுவார்.

## திருமுகப்பாசுரம் சம்பந்தர்.

அரியகாட்சியராய்த் தமதங்கைசே
ரெரியரேறுகந் தேறுவர் கண்டமும்
கரியர்காடுறை வாழ்க்கையராயினும்
பெரியராரறிவாரவர் பெற்றியே

## விருத்தாசலப்புராணம்.

நீறுபுனைவார் வினையை நீறு செய்தலாலே
வீறுதனை நாமமது நீறெனவிளம்பும்
சீறுநரகத்துயிர் செலாவகைமருந்தாய்க்
கூறுடையதேவிகையின் முன்னிறைகொடுத்தான்

## திருக்கழுக்குன்றத் தலபுராணம்.

தீதுநீறெழுத் தெறுகையால் நீறுமேற்பிறந்த
சோதிவீதலாற் பசிதமென்றுரைத்த வாழ்க்கையினாற்
பூதியும்புறங்காத்தலாற் காப்பும்புன்மலமாங்
கோதுதீர்த்தலாற் கோரமுமெனப்பட்டததுவே

பூதியணியாதநுதல் பொன்று சுடுகாடு
ஆதியாணுமுனா யாதவர்களுமர்
சோதிவிழிகந்தமணி தூயவுடல்பூணார்
பாதகரெடுத்தவுடல் பன்றியுடலாமே

## அப்பர்தேவாரம்.

வேம்பினைப்பேசி விடக்கினையோம்பி வினைபெருக்
தூம்பினைதூர்த்தங்கோர் சுற்றந்துணை யென்றிருத்திர் தொண்டீர்
ஆம்பல்ம்பூம் பொய்கையா ரூரமர்ந்தானடி நிழற்கீழ்ச்
சாம்பலைப்பூசிச் சலமின்றித்தொண்டு பட்டுய்மின்களே

## சூதசங்கிதை.

### பற்பல தாரணமுரைத்த அத்தியாயம்.

பலர்புனித நீறணியார் ஞானமடையார் கோடி
பவமானாலும்
தகர்தலுறார் சமுசாரமாபாவமுடையராத்
தாழ்வார் கும்பி
புகரில் வருணாச்சிரம பலமுமுறாவறியற்றும்
புனிதமான
நிகரரிய புண்ணியமும் பாதகமாமென்றுபறை
நிகழ்த்துமாலோ

பல பவப்பாவியருக்கே நீற்றில் வெறுப்புண்டாகும்
பண்பார்நீற்றைக்
குலவவுயவரெல்லாமா பாவரெனத்தெரிந்து
கொள்ளல்வேண்டும்
நலமுறிம் மான்மியஞ்சொலவெம்பாலுமாற்றெம்முடைய
குருநாதனாலு
மலர்புகழீர் முடியுமோ முடியாதெக்காலத்தும்
வாய்மையிதே

### அப்பர்தேவாரம்.

சலந்தாங்கு மயானத்துச் சாம்பலென்பு
தலையோடு மயிர்க்கயிறு தரித்தான்றன்னை
பலந்தாங்கும் பாசுபத வேடத்தானைப்
பண்டமரர் கொண்டுகந்த வேள்வியெல்லாங்
கலந்தானைக் கச்சியே கம்பன்றன்னைக்
கழலடைந்தான் மேற்கறுத்த காலன்வீழச்
சிவந்தானை திருவீழி மிழலையானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே



### நடை.

சர்வசம்மாரகாலம், அக்கினி, அல்லது, ஜலத்தினால், உலகத்தையழிப்பாரென்று தெரியக்கூடியவிதமாய் அந்தவிரண்டு சின்னங்களையும ஜெகதீசன் மற்றச்சின்னங்களோடு, திருமேனியிலணிந்திருக்கிறார்,

### அப்பர்தேவாரம்.

கங்கையைச் சடையில்வைத்தார்
கதிர்பொதியரவும் வைத்தார்
திங்களைத் திகழவைத்தார்
திசைதிசை தொழவும்வைத்தார்
மங்கையைப் பாகம் வைத்தார்
மான்மறி மழுவும் வைத்தார்
அங்கையிலனலும் வைத்தார்
ஐயனையாறனாரே

32. வினா?

உருத்திராக்ஷ வரலாறென்ன.

32. விடை:—

ஈச்சுரன் திரிபுரசம்மார காலத்தில் துர்ச்சனரைத்தெண்டிக்க கோர சொருபங்கொண்டு, அகோர அஸ்திரத்தைப் பிரயோகித்தார் திவ்யவருடம் பொழிந்தது நேத்திரங்களினின்று ஜலம் விழுந்தது அந்த பிந்துவிலிருந்து உருத்திராக்ஷமுண்டாயிற்று இதில் சூரியநேத்திரமாகிய வலதுகண் துளியிலிருந்து கபிலநிறமாய்ப் பன்னிரண்டு பேதமாயும் இடதுகண்ணாகிய சந்திரநேத்திரத்தின் துளியிலிருந்து சுவேத நிறமாய்ப் பதினாறுபேதமாயும் நெற்றிக்கண்ணாகிய அக்கினி நேத்திரத்திலிருந்து கறுப்பு நிறமாய்ப் பத்துப்பேதமாயும் ஆக முப்பத்தெட்டுப் பேதமான விருக்ஷங்களுண்டாயிற்று இப்படி வாதுள ஆகமங்கூறுகின்றது.

## திருக்கழுக்குன்றத்தலபுராணம்.

கண்ணிமையாதான் பார்ப்பக்கண்ணினுந்
தண்ணியபுனற்றுளி துளித்தக்காழ்தலும்
புண்ணியக்கண்டிகைப் புனிதமாமரம்
கண்ணியங்கொழுந்தது விழுந்த ஞாலமே

## விருதாசலப்புராணம்

வன்றிரிபுரன்புரியும் வானைக்கோ நோக்கி
யன்றுவிடைமேலவனும் அம்பிகையும்வந்து
வன்றிறன் முராரியயன் வானவரைநோக்கி
மென்றுளிகள் முக்கணினும் வீழ்ந்ததெனைக்காக்க.

உருத்திரன் விழித்துளிகளே யுருத்திராக்கந்
திருத்திரவி சந்திரன்றிருந்துகன் றகண்ணி
லருத்திமிகு பெதபிரண்டாயபதினாறு
பொருத்தொரு பத்தென்பதிறம்பொன்றவளங்காரே

## ஜாதி.

வெண்மை மறைபொருநிமை வேந்துநிமைபொன்மை
வண்மைவணிகர்க்கு முன்வருக்கதுகலத்தல்
உண்மையுள ருத்திரருக்குள்ளது கறுப்பே
முன்மணிகள்காய்க்குமா முப்பதுடனெட்டே

| நிறம். | ஜாதி. |
|---|---|
| வெண்மை. | பிராமணஜாதி |
| பொன்னிறம் | க்ஷத்திரியஜாதி |
| இரண்டுநிறமுங்கலத்தல் | வைசியஜாதி |
| கறுப்புநிறம் | சூத்திரஜாதி |

ஒருமுகமுதல் (பதினான்கு) முகம்வரையுண்டு



33. <u>வினா?</u>

உருத்திராக்கந் தரிக்கும் விதியாது?

33. <u>விடை:—</u>

சிகையில் ஒன்று பூணுநூல் ஒன்று சிரசு முப்பத்தாறு நாற்பது, கழுத்து முப்பத்திரண்டு, மார்பு ஐம்பது, நூற்றியெட்டு, கை பதினாறு, மணிக்கட்டு பன்னிரண்டு, காது ஆறு, பெருவிரல், நான்கு.

## விருத்தாசலப்புராணம்.

மிக்கபதின்மூன்றினுக்கு மேன்முகமுமில்லை
தக்கதலையொன்று தலைமாலையு காலொன்பான்
அக்கலையிரட்டிகள மாங்குர நூற்றெட்டாம்
கைக்கணிகள் பன்னிருவர் காணகலமைம்பான்

## திருக்கழுக்குன்றத் தலபுராணம்.

சிகையகத்தினென்று முடிக்கொரு முப்பத்தோராறுஞ்
செழுங்கழுத்தில் தகையதொருநாலெட்டுந்
திருமார்பத்தைம்பதுங் கைத்
தலமீரெட்டும்
வகைமணிக்கட்டாறிரண்டுந் தாழ்வடங்கள்
நூற்றெட்டும் வகுத்தச்சாத்தி
நகைதருகண்டிகையோடும் போமடிக்கோரயமேக
நவிற்றலேயாம்
விரிக்கில் பெருகுமென விடப்பட்டது
உருத்திர அச்சம்
உருத்திரனுடைய நேத்திரமெனப்பொருள்

34 <u>வினா?</u>

உருத்திராக்கமணி யணிவதாற்பெறும் பலன்யாது?

34. <u>விடை:—</u>

அடியிற்கண்டபடி.

| முகம். | தேவதை. | பலன். |
|---|---|---|
| ஒன்று | ப்ரமம் | பிரம்ஹத்தி நிவிர்த்தி |
| இரண்டு | சிவசக்தி | பசுவதை நிவிர்த்தி |
| மூன்று | அக்கினி | ஸ்திரிஹத்தி நிவிர்த்தி |
| நாலு | பிரமன் | நரஹத்தி நிவர்த்தி |
| ஐந்து | காலருத்திரன் | பரஸ்திரிகமனம் அபக்ஷ்ய பக்ஷணதோஷம், சர்வபாபம் நிவிர்த்தி |
| ஆறு | முருகன் | யாகஞ்செய்தவனை வதைத்தபழி நிவிர்த்தி |
| ஏழு | ஆதிசேடன் | பொன்களவு, ஆலயக்களவு, கோவதை நிவிர்த்தி. |
| எட்டு | கணபதி | சொர்ணக்களவு, பரஸ்திரி உதாம், பிர்ஷ்டக்கைபடுதல், குருதாரந் தொட்டது நிவிர்த்தி. |
| ஒன்பது | பைரவன் | புத்திமுத்தியுண்டாக்கும் கோடி மறையோர்வதைமாறும் (இடக்கையிலணியவேணும்) |
| பத்து | மால் | நவக்கிரகதோடம், பசாசு, வேதாளம், ப்ரமராக்ஷிசை கெருடதோஷம், சர்பதோஷம் நீங்கும். |
| பதினொன்று | ஏகாதசருத்திரர்கள் | சிகையில் தரிக்கவேணும் ஆயிரம் அஸ்வமேதயாக பலன், கோடி பசுதானபலன். |
| பன்னிரண்டு | துவாதச [ஆதித்தர்கள்] | கண்டத்திலணியவேணும், கோமேதயாகம்கோடி பசுதானங் கிடைக்கும். அக்கினிபயமில்லை |
| பதின்மூன்று | கந்தன் | அட்டசித்திபோகம் கருவதை நீங்கும். |
| பதினான்கு | | சத்தி சிவபூஜைபலன் நூறுதேவரைப்பூஜை செய்தபலன் கிடைக்கும். |



### விருத்தாசலப்புராணம்.

ஒருமுகமிரண்டுமுகமுஞ் சிவசொரூபம்
மருவுமறையோர்பசு வதைத்தபழிமாறும்
அருமையுள மூன்றுமுக மக்கினிசொரூபம்
பெருகவனிபாற்றெருதி பெண்பழிகள்மாறும்.

நாலுமுகம் நாலுமுகன் நரவதைகள்மாறும்
காலவனலஞ்சுமுக முண்டிவினைகாலும்
வேலவனுருவாறுமுகம் வேதிவதைமாறும்
மேலவெழு சேடனுருவே மகளவேகும்.

அட்டமுகமானைமுக மானகுருதாரந்
தொட்டதறுமொன்பதுமுகம் வடுகன்மேனி
யெட்டுமரன் முத்தியொடு புத்தியிடக்கையில்
கட்டினொருகோடிமறையோர் வதைகள்காலும்

பத்துமுகமாயவன் பசாசுமிருகம்போம்
அந்தர்பதினொன்றரன னந்தகிரியெய்தும்
முத்திரவியீராறு முகத்தையுடல்பூணின்
மெத்தவுளயாகபலன் மெய்க்குலைகளேகும்

கந்தர் பதின்மூன்றுமுக முந்துகனபோகம்
சிந்தனையிலெட்டுவகைச் சித்திகளுமுண்டாம்
தந்தைதமர்தாய்குழவி தம்பி தமையன்பெண்
வந்தகருமாய்த்தவதை மாறுமதுபூணில்

### ஆசாரக்கோவை.

பூணுதற்குக் கண்டியினைக்
கூசிபிடும் புல்லியரைக்
காணுதற்குங் கூசுமான்கைத்து

சோதிவெண்பிறை சூடியகூடலா
ளாதியந்தமிலா னெழுத்தைந்துடன்
பூதிகண்டிகைமாலை புனைந்திடாச்
சாதியன்றியுண்டோ புலைச்சாதியே

நடை.

விபூதி, உருத்திராக்ஷம், இரண்டும் சிவசின்னமாதலின் சைவர்களாகிய இல்லறதர்மிகள் அணியவேண்டும், இக்காலத்தில் தீக்ஷைபெற்றவர்கள் விபூதியிட்டு அநுஷ்டானஞ் செய்கின்றார்கள் மற்றவர்கள் பரம்பரையிலேற்பட்டபடி விதிக்குவிலக்காய் எப்படியோ பூசியும் இட்டுக்கொள்கிறார்கள். சிவபூஜை செய்பவர்கள் அந்தக்காலத்திலும் சிறுபான்மையர் எப்போதும் உருத்திராக்ஷந்தரிக்கிறார்கள் மற்ற சிவசம்பந்தமுடையார் யாவரும் சைவமதத்தவரென்றதைக் குறித்துக் காட்டிய இச்சின்னத்தை அணிய மனங்கூசிப் பின்வாங்குகிறார்கள், அதைப்பற்றிக் கடாவிகழ்ந்தகாலத்து ஆயுள் நாளுக்குவரையறை தெரியக்கூடாத கணந்தோறும் ஆபத்துவரக்கூடிய. அநித்தியமான சரீரமென்பது அநுபவநிலையில் தெரிந்திருந்தும் அதையணிய ஒருகாலமுண்டென்று காலத்தின்மேலேற்றி விடையளிக்கின்றார்கள், இது சற்றும் பொருந்தாதென்க.

35. <u>வினா?</u>

சிவனடியார்களுக்கு நாலுவகையுண்டி அறுவகை உருசியுடன் கிரகாச்சிரமதர்மி அன்னம் அளிக்கவேண்டுமென்று, சொல்லப்பட்டிருக்கிறதே, அடியாரென்பவர், யாவர் அவரிலக்கணம்யாது

35. <u>விடை:—</u>

ஸ்காந்தம் உபதேசகாண்டத்திற் சொல்லுகிறபடி புறத்திலக்கணம் பத்து, உடலிலக்கணம் பத்து, அகத்திலக்கணம் மூன்று ஆக இருபத்துமூன்று இலக்கணமுடையார் அடியாரெனப்படும். இதின் விவரம்.

### புறத்திலக்கணம் பத்து.

(1) விபூதிருத்திராக்ஷந்தரித்தல்.

(2) குருவை வழிபடல்.



(3) சிவபெருமானைத் தோத்திரஞ்செய்தல்

(4) சிவநாமங்களைஉச்சரித்தல்.

(5) சிவபெருமானைப் பூஜைசெய்தல்.

(6) சிவ்புராணங்களைக் கேட்டல்.

(7) சிவதருமங்களைச்செய்தல் .

(8) சிவாலய தெரிசனஞ்செய்தல்

(9) சிவனடியாரிடத்தன்றி பிறரிடத்துப் போசனம்பண்ணாமை.

(10) சிவனடியார்களுக்குக் கொடுத்தல்.

### உடலிலக்கணம் பத்து.

[1] சிவபெருமான் பெருமையைச் சிந்திக்குந்தோறும் பேசுந்தோறுங் கண்டம் விம்முதல்.

[2] நாக்குத்துடித்தல்.

[3] உதடு துடித்தல்.

[4] சரீரம் நடுங்குதல்.

[5] உரோமம் சிலிர்த்தல்.

[6] குறுவேர்வைகொள்ளல்.

[7] நாக்குத் தழுதழுத்தல்.

[8] ஆனந்தக்கண்ணீர் செரிதல்.

[9] வாய்விட்டழுதல்.

[10] பரவசமாய்த் தன்னை அயர்த்தல்.

### அகத்திலக்கணம் மூன்று.

[1] பஞ்சாக்ஷரத்தைமானதமாக ஜெபித்தல்

[2] மானதபூஜைசெய்தல்,

[3] சிவபெருமானைத் தன்னோடு பிரிவறக்காண்டல்.

இவ்விலக்கணமமைந்த அடியார்கிடைப்பதரிதாயின்மேலே கண்ட இலக்கணங்களில் ஒருபுடையொத்த அடியாரை கிரகாச்சிரமதர்மி தெரிந்தெடுத்துக்கொள்க சமையதீக்ஷைபெற்று, சரி

மைத்தொண்டினும் விசேஷ தீக்ஷைபெற்று கிரியா யோகத்தொண்டினும் நிற்பவர்கள் அடியாரென்றழைக்கப்படும் நிர்வாணதீக்ஷைபெற்று ஞானபாதத்தை யெட்டினவர் ஞானி யென்றழைக்கப்படுவார். தவிர, கொல்லாமைமுதலிய பல நற்குணங்களுமமைந்திருக்க வேண்டும்.

### காந்தம் உபதேசகாண்டம்.

செய்யமேனிச் சிவனடியார்க்கவ
லெய்தக்காணு மிலக்கணப்பத்துள
மெய்யிலெய்து மிலக்கணம் மெய்ம்மசா
லையிரண்டகத்துள்ளன மூன்றரோ

அலக்கணீக்கு அரனடியார்க்கென
விலக்கணங்களிருபத்து மூன்றுள
வலப்படுத்து முதற்படுபத்தையும்
புலப்படுத்தி நமக்குப் புகலுவோம்

### புறத்திலக்கணம்.

வாசப்பூதி யுருத்திரமாமணி
பூசிப்பூணல் குரவனைப்பூசித்தல்
ஆசைப்பாட்டினாலனைப்புகழுதல்
ஈசற்குள்ள நாமமியம்புதல்

எந்தையீசனருச்சனை யோம்புதல்
தந்திரச்சிவதன்மம் புரிகுதல்
முந்தையோன்கதை கேட்டன்புறைமையமைப்பாற்
புந்திகூர்ந்தாலயம் போற்றுதல்

ஒத்தபத்தரிடத்தல தோரிடந்
துய்த்தனித்தலத் தொண்டரிற்றொண்டராய்ச்
சித்தமன்புறவீதன் முன்செப்பிய
பத்துமிங்கிவைகாணப் படுதிரால்



### உடலிலக்கணம்.

தொண்டர்மெய்யிற் றுலக்குமிலக்கண
முண்டோர் பத்தென்றுரைத்த துரைக்குதுங்
குண்டையூர்தி சிவத்தியல் கூறுங்காற்
கண்டமுற்றொரு விம்மிதங்காட்டுதல்

ஏத்துமெந்தை யியற்கையுணர்தொறு
நாத்துடித்தெழும்பாமை நகைப்புறம்
பூத்தமுத்தந்துடித்தல் விபூதிகொண்
டார்த்தணிந்ததன்னங்கங்குலுங்குதல்

மயிர்ப்புறம்புளகித்தல் வரன்முறை
வியர்த்தரன்வசமன்றி விளப்புறாப்
பெயர்த்திடாமையானந்தம் பெருகணீ
ருயற்படுத்துதல் வாய்விட்டழுகலே

பரவசத்தினனாகிப் படர்சடை
யாதுளப்படத்தன்னையயர்க்குதல்
விரவுபத்தும் விடுத்துரைத்தோமிவை
வரமுனித்தலையீர் மனக்கொள்விரால்

### அகத்திலக்கணம்.

உளத்திலக்கண மூன்றென்றுரைத்தன
மளக்கினைஞ்செழுத்துன்னலகப்பட
வளர்க்குமானத பூசனைமைக்கடுக்
களத்தனத்தனை யொன்றெனக்காணுதல்

### குருசங்கிதை.

### அடியார்பூசாவிபூதியும் அவனைப்போற்றினோர்.

### பேறும் உரைத்த அத்தியாயம்.

தன்னடிக்கன்பு சான்றவராயினு
மன்னுமெய்யடியாரை வழிபடா
ரென்னிலந்தண்மதி முடியீச்சுரன்
அன்னவர்க்கருள்செய்த லரிதரோ

நீறுகண்டிகை கொள்ளுங்கியதிய
சேறுமைந்தெழுத் தெண்ணுமுளத்தினர்
மாறில்பத்தியில் பூசைவயக்குசர்
ஆறுருடிபடியவராவரால்

பரவுகோயிற் பணிபலசெய்பவர்
விரவுமேன்மைப் புராணவிருப்பின
ருருவுறும்மர வோதைபெழுப்புவ
ராவுபூண்டவர்க் கன்பர்களாவரால்

காவுளானபன் கண்ணான் முற்றேவர்கள்
யாவருந் தொண்டராயினுமும்மல
மோவிமெய்யரு ளுண்மையிற்பற்றுபு
மேவுமின்னர்விசேடவடியரே

36. வினா?

அடியவர்க்குச்செய்யும் பூசையதிகமோ சிவபெருமானுக்குச்செய்யும் பூசையதிகமோ

36. விடை:—

நமது பரமசிவம் அடியாருளத்தையே கோவிலாகக்கொண்டெழுந்தருளியிருத்தலில், அவரைச் சரலிங்கமென்றழைக்கப்படுவர், அவருக்குச்செய்யும் பூசை, பரமசிவத்துக்கு யேற்றதாகும். ஸ்திரலிங்கமென்றழைக்கப்படுகிற, நமது சதாசிவமூர்த்திக்குச்செய்யும் பூசை, அவருக்கேயுரியது, ஆனதுபற்றி அடியார் பூசையே யதிகம், அடியார்வேடம் சிவரூபமென்றுஞ் சிவமாயே ஆகின்றார்களென்றுஞ், சித்தியார் நூலில் கூறுகின்றது. அல்லாமலும், அடியார்க்கருத்தியும், வழிபட்டும்மோக்ஷமடைந்தவர், பத்தொன்பது நாயமார்களென்று, பெரியபுராணத்தால் வெளிப்படுகிறது.

அப்பர்தேவாரம்.

பனைக்கைமும்மத வேழமுரித்தவன்
நினைப்பவர்மனங் கோயிலாக்கொண்டவன்
அனைத்தும் வேதமாமம்பலக்கூத்தனைத்
தினைத்தனைப்பொழுதும் மறந்துய்வனே



நகமலாதடிமையில்லை தானலாற்றுணையுமில்லை
நகமெலாந்தேயக்கையால் நாண்மலர் கொய்துதூவி
முகமெலாங்கண்ணீர் மல்க முன்பிருந்தேத்துந் தொண்டர்
அகமலாற் கோயிலில்லை ஐயனையாறனார்க்கே

திருமந்திரம்

படமாடக்கோவிற் பகவற்கொன்றீயி
னடமாடக்கோவி னம்பர்க்கங்காகா
நடமாடக்கோயி னம்பர்க்கொன்றீயிற்
படமாடக்கோவிற் பகவற்கதாமே

சூதசங்கிதை

படியினுளின் படியிப்படியிடை
முடிவிலன்புமுதிருபுனுற்றும்வெண்
பொடிகொண்மேனியன் பூசையினும்மவ
னடியர்பூசையதிகமதிகமே

சித்தியார் 12-வது சூத்திரம்

அறிவரியான்றனை யறியயாக்கையாகி யங்கங்கே
யுயிர்க்குயிரா, யறிவுகொடுத்தருளாற்—செறிதலி
னாற்றிருவேடஞ் சிவனுருவேயாகுஞ்—சிவோகம்
பாவிக்குமத்தாற் சிவனுமாவார்—குறியதனுலித
யத்தேயரனைக்கூடுங் கொள்கையினாலனவர்
குறியொடுதாமழியு—நெறியதனாற்சிவமேயாய்
நின்றிடுவரென்றுனேசத்தாற் றொழுதிடுநேசத்தார்விடவே

37. வினா?

எவ்விதமாய்ப் பாகஞ் செய்தருத்தல்வேண்டும் அதன் பலன்யாது?

37. விடை:—

கிருகஸ்தாச்சிரமத்தில் ஸ்ரீ புருடர்களுக்கு அன்றுடகம்பத்திக்குற்றங்கள் ஏற்படுகிறது தவிர சுத்தசைவர்களாகிய கொகச்

சிரமதர்மிகளுக்கு ஆகாரவஸ்துக்கள் நெல்லு காய்கள் பழங்கள் கிழங்குகள், கீரை, முதலியவைகளாகவிருக்கிறது. இவைகள் ஓரறிவுள்ள அசரவுயிர்க் கொலைக்குற்றமாய் ஏற்படுவதால் அந்தப் பாவமும் நாடோறும் ஸ்திரிகளுக்கேறுகிறது. இது முறம் முதலியவைகளா லுண்டாகிறதென்று மனுஸ்மிர்தி சொல்வதாய் முன் (26-வது விடையில்) கூறியிருக்கின்றனம்—உத்தமஸ்திரீகளால் விதிப்படிக்கு சிவார்ப்பணமாகச்சமைக்கப்படுகிற அமுதை நான்வகையுண்டி யறுவகைருசியோடு அடியார்க்கு அருத்திப்பாவத்தை நீக்கவேண்டும். மற்றும் விபரம் மகளிரிலக்கணம் (8-வது விடையிற் கூறப்பட்டிருக்கிறது.) கிரகாச்சிரமதர்மி தீக்ஷைபெற்றுக் கொள்ளாதவர் கிரகத்தில் அன்னம் புசிக்கலாகாது

## சிவதருமோத்திரம்.

### 4-வது பலவிசிட்ட காரண இயல்.

கலைத்துழல், கூலிவேலை, சந்தையிற்கொண்டு விற்கை, கொலைத்த சொற்கூட்டுங்கோபம், அசத்தியம், கூறுமுள்ளுமலக்கிடன், மெழுகலங்கியாக்கனீரரிசி, யென்றே இலக்கணத்தியம்பும் பத்துந்தமக்கெனிற் பாவமீட்டும்.

### இதில் புருஷன் குற்றம் 5,

| | | |
|---|---|---|
| 1, | உழுதல் | செந்துக்கள் மரித்தல் எருதுக்கு வருத்தமுண்டாக்குதல் |
| 2, | கூலிவேலை செய்தல் | திருந்தச்செய்யாமை-வெட்டலால், கொத்தலால், கொலை. |
| 3. | சந்தையிற்கொண்டு விற்றல் | ஏறவாங்கிக் குறையக்கொடுத்தல். |
| 4. | கோபம் | பிறருக்கு துன்பஞ்செய்தல் தனக்கு உணர்வு கெடுதல் வன்சொற் பேசல். |
| 5. | அசத்தியம் | பிறருக்குத் துன்பமும், பகையும், அச்சமும் பழியும். |



### ஸ்திரீகள் குற்றம்.

1. பெருக்கல்.
2. மெழுகல்.
3. அக்கினி மூட்டல்.
4. தண்ணீர் கொண்டுவருதல்.
5. அரிசி மினுக்கல்.

2, 3, முதலிய அறிவுள்ள சாவுயிர்களான எறும்பு, கறையான், வண்டு, புழு, ஜலசெந்து சேதமாதலால் கொலை.

ஸ்திரீகள் புருடர்கள் அசர உயிர், கொலை கீரை, தண்டு, காய் கிளங்கு, தானியாதிகள்.

### இதற்கு கருவி.

நீர்க்குடம், களவு, அம்மி, குளவி, உரல், உலக்கை, திருகை, ஆட்டுரல், குளவி, கோடரி, வெட்டரிவாள், பன்னரிவாள், அரிவாள்மனை, முதலியன.

### சிவதருமோத்திரம்.

தேசுறு சிவாதி பூசைக்கெனவிவை தன்னைச்செய்யி
னூசமாம் பாவபேதந் தம்மையே நாடிச்செய்யில்
பாசமா நரகபேதப் படுகுழிப்படுத்தியென்று
மூசல் போதுழல் வித்தாக்குந் துயரினுக்களவுமுண்டோ

### அடியார்களுக்கமுதளிக்கும் பலன்.

### பெரியபுராணம்

#### இளையான் குடிமாற நாயனார்

கொண்டுவந்து மனைப்புகுந்து குலாவுபாதம் விளக்கியே
மண்டுகாதலினாதனத்திடைவைத் தருச்சனைசெய்தபின்
உண்டி நாலுவிதத்திலாறுசுவைத்திறத்தினிலொப்பிலா
அண்டர்நாயகர் தொண்டரிச்சையினமுது செய்யவளித்துளார்

பெரியபுராணத்தில் பூம்பாவையை எழுப்ப

எத்தனித்தபோது, திருஞானசம்பந்தர் சொன்னது.

மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடு
மண்ணலாரடியார் தமையமுது செய்வித்தல்
கண்ணினாலவர் நல்விழாப் பொலிவுகண்டார்தல்
உண்மையா மெனிலுலகர் முன்வருகெனவுரைப்பார்

எந்தை பிரானடியார்கள் யாவர் மனையிற் சென்றாலும்
அந்த மனையின் முனிவர்குழா,மமரர் குழாங்களொருங்கியிடுங்
தந்தமனையிற் செல்வங்கடானே நின்று கூத்தாடு
முந்தமடியார் பூசையினன் மூவேழ் சுற்றங்களைபேறும்.

அகரமோ ராறுகோடி யருந்தவ நூறுகோடி
சிகரமோராறுகோடி செய்திட்ட பலன்கள் யாவு
மகரகேதனனை வென்ற மாதேவனடியார்க்கன்னம்
பகரவே தனவுகண்ட பலன்றனக் கொவ்வாதன்றே.

அமிர்தசாரம்.

அவனுண்ட தண்டமெலாமுண்டதயனுஞ்
சிவனுந்திருமாலுமுண்டான் சிவமென்றும்
பூரண ஞானியைப் பூசித்தான் பூசித்தான்
காரணனைக் கண்ணாரக்கண்டு.

38. <u>வினா?</u>

நால்வகையுண்டி அறுவகை உருசி யென்றாலென்ன?

38. <u>விடை:—</u>

விவரம்

1. உண்டல் அன்ன முதலியவைகளை உண்டல்.
2. தின்றல் கறிவர்க்கங்களை அருந்தல்.
3. பருகல் தண்ணீர் அல்லது வென்னீரைப் பருகுதல்.
4. நக்கல் தேனை நக்கலும் பாயாசத்தையுறிஞ்சுதலும்,



அறுவகை உருசி,

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | கைப்பு | உப்பு | 4 | உவர்ப்பு | பாக்கு |
| 2 | தித்திப்பு | இனிப்பு | 5 | துவர்ப்பு | துவர்ப்புக்கொள்ளல் |
| 3 | புளிப்பு | . | 6 | கார்ப்பு | உறைப்பு |

39. <u>வினா?</u>

கிருகஸ்தன் ஆகாரங்கொள்ளவேண்டிய கிரமமென்ன.

39. <u>விடை:—</u>

ஒருதரம் உண்ணல்வேண்டும். சக்தியற்றவனாயிருந்தால் இருபோது பொசிக்கலாம். ஆனாலும், கோழிமுட்டை பருமன் அளவில், முப்பத்திரண்டு கவளத்துக்கு அதிகம் அருந்தல் கூடாது.

உதாரணம்.

(சூதசங்கீதை)

ஒருதர மில்லறத்திலுறைபவன் பொசித்தல்வேண்டும்
பெருகிய வசத்தனாயிற பின்னுமோர்தரம் பொசித்தல்
மருவிய கவளநா லெண்வயங்குகுக் குடவண்டந்தான்
பொருவிய வளவைத்தாகும் புசிக்குமோர் கவளமாதோ.

40. <u>வினா?</u>

கிரகாச்சிரமதர்மி தள்ளத்தக்க குணமென்ன கொள்ளத்தக்க குணமென்ன.

40. <u>விடை:—</u>

இராக முதற்பதின் மூன்று தள்ளத்தக்கது பின்னும்.

கொலை, பொய், களவு, கள்ளருந்தல், குரு நிந்தை, இந்தப் பஞ்சமாபாதகமும் புறங்கூறல், புலால் உண்ணல், அழுக்காறு பிறர் பொருளபகரித்தல், பிறர்மனை நயத்தல், அடியாரைப்பிழைத்தல், முதலிய கெட்டகுணங்களுந் தள்ளத்தக்கது.

## கொள்ளத்தக்கது.

இச்சைமுதல் மூன்று, பின்னும் அருள், அன்பு, வாய்மை, ஒழுக்கம், செய்நன்றியறிதல், கொடை இனியவைகூறல், இரக்கம், பண்பு, முதலிய குணங்கள் எனப்படும்.

### தள்ளத்தக்க. பதிமூன்று குணத்துக்கு விபரம்.

| | | |
|---|---|---|
| 1 | இராகம் | பரஸ்திரி கமனம் |
| 2 | த்வேஷம் | அபகாரத்துக்குப் பதிலபகாரஞ்செய்தல் |
| 3 | காமம் | புத்ராதி சம்பாதிக்க எண்ணல் |
| 4 | குரோதம் | வேண்டுங்காரியத்தில் குறை செய்வோன் மேற்கோபங்கொள்ளல் |
| 5 | லோபம் | ஈயாக்குணம் |
| 6 | மோகம் | தானுண்டாக்கின பொருண்மேலிச்சை |
| 7 | மதம் | செல்வத்தாலகந்தரித்தல் |
| 8 | மச்சரம் | ஒருவர் சுகஞ்சகியாமை |
| 9 | ஈரிஷை | தன்துக்கம் வேறொருவர்க்கேகிட நினைத்தல் |
| 10 | அசூயை | தனக்கு வரும் சுகம் பிறருக்கு வாராதென்றுமதித்தல் |
| 11 | டம்பம் | தான் செய்ததைப் பிறர் மெச்ச நினைத்தல் |
| 12 | தர்ப்பம் | செல்வம் தனக்கே சொந்தமென்று நினைத்தல் |
| 13 | அகங்காரம் | பிடித்ததைச் சாதித்தல் |

### கொள்ளத்தக்ககுணம், மூன்றுக்கு விபரம்.

| | | |
|---|---|---|
| 1 | இச்சை | மலசல மோசனம்பண்ணல் |
| 2 | பக்தி | ஈசன் இணையடி மறவாதிருத்தல் |
| 3 | சிரத்தை | கடவுள் வாக்கியத்திற்கனிவு |

இதற்குதாரணம், சத்தப்பிரகாண நூலிற் கண்டுகொள்க.

41 <u>வினா?</u>

சைவமென்றும் அசைவமென்றுஞ் சொல்லப்படுகிறதே யதன் விபரமென்ன.



41. <u>விடை:—</u>

சிவசம்மந்தம் சைவம் சிவனைத் தொழுவோன் சைவனென்று பொதுவிதி யேற்பட்டிருந்தாலும் சைவ[illegible] ஒழுக்கங்களோடு மாமிசபக்ஷணம், இல்லாமல் அரு[illegible] சைவரென்றும் ஐயறிவுள்ளதாயும் பரிகாரத்தால் நீங்குவதல்லாததாயும், பெரும்பாவத்தால் வந்தனவுமாகிய, மாடு, ஆடு முதலிய மிருகசாதிகளையும்; கோழி முதலிய பக்ஷி சாதிகளையும் நீர்வாழ்வனவாகிய மச்ச முதலியதுகளையும் கொன்றருந்துபவரை அசைவரென்றுஞ் சொல்லப்படும்.

சைவசமயத்தவராயுஞ் சிவவணக்கஞ் செய்பவராயுமுள்ள வேளாளர் முதல் மற்றெந்தவகுப்பினரேனும் ஜீவதயாள குணத்தை முன்னிட்டு கட்டாயம் புலாலுண்ணலை நிறுத்தவே வேண்டும். இல்லாவிடில் அநேகம்பிறவி யெடுக்கவும். பழிக்குப் பழிவாங்கவும் நேரிடும். மனிதவுடலை வைத்துக்கொளுத்துகிற விடம் ஸ்மசானமென்றும் (சுடுகாடு) விலங்குக்கும் புட்களுக்குஞ் சுடுகாடு புலன்கெட்ட, புல்லறிவாளர் வயிறென்றும் நூல்கூறுகின்றது

புலாலுண்ணல் பெரும்பாவமாயும் அதை நீக்கல் விடுபேற்றுக்குச்சார்வான பெருந்தவமாயும் முடிவுபெறும்.

### குறள் உ-கம் அதி. புலால்மறுத்தல்.

தன்னூன்பெருக்கற் குத்தான்பிறிதூனுண்பா
னெங்ஙனமாளுமருள்

படைகொண்டார் நெஞ்சம்போ னன்றூக்கா தொன்ற
னுடல் சுவையுண்டார்மனம்.

அவிசொரிந்தாயிரம் வேட்டலினொன்ற
னுயிர்செகுத்துண்ணாமை நன்று.

சொல்லான்புலாலை மறுத்தானைக்கைகூப்பி
யெல்லாவுயிருந்தொழும்.

வள்ளலார்.

அம்மாவெனவலற வாருயிரைக்கொன்றருந்தி
யிம்மானிடரெல்லா மின்புற்றிருக்கின்றார்
அம்மாவெனுஞ் சத்தங்கேட்டிரங்கன்றமாதவர்க்கும்
பொய்ம்மாநிலையமென்றாற் புசித்தவர்க்கென்சொல்லுவதே.

திருமந்திரம்.

பொல்லாப்புலாலை நுகரும்புலையரை
எல்லாருங்காண வியமன்றன்றூதுவர்
செல்லாகப்பற்றிய தீவாய்நரகத்தின்
மல்லாக்கத்தள்ளி மறித்துவைப்பாரே.

கொன்றைவேந்தன்.

நோன்பென்பது கொன்றுதின்னாமை.

நாலடியார் தீவினையச்சம் ௬-ம் அதி.

துக்கத்துட்டூங்கித்துறவின் கட்சேர்கலா
மக்கட்பிணத்த சுடுகாடு—தொக்க
விலங்கிற்கும் புள்ளிற்குங் காடேபுலன்கெட்ட
புல்லறிவாளர் வயிறு

இது கிடாய் வெட்டும்போது சொன்னது

தனிப்பாடல்

உங்கண்மக்களுநீங்களும் பேய்கொள
வெங்கண்மக்களு மியாங்களுமென்செய்வோம்
போங்கவிட்டுப் புதுமணஞ்செய்கிர்
எங்கள்கேள்வியிறைவன் கேட்பனே.

42. <u>வினா</u>

கிரகாச்சிரமதர்மிகள் அனுசரிக்கவேண்டிய சைவ ஒழுக்கமாவதென்ன தள்ளவேண்டியதென்ன.



42 <u>விடை.</u>

ஒழுக்கம் உலகநடை என்றபடி சைவசமய ஒழுக்கத்தில் திறம்பாமல் நடக்கவேண்டுமென்று என்னுவோர் சிலரே

இக்காலம் நமது சமயத்துள்ளவர்களும் வாலிபச்சிறுவர்களும், பண்டுபோலில்லாமல் கல்வி அறிவில், மிகத்தேர்ச்சியடைந்து கொண்டேவருகிறார்கள். அது வியக்கத்தக்கதும் பெரும்பாக்கியமாயுள்ளதுமே அன்னியபாஷையோடு (தாய் பாஷைஆகிய) தமிழையும் உடன்கற்றே வருகின்றார்கள், அப்படிக்கிருந்தும் அவர்கள் மதிநுட்பமானது நாம் செய்தபாவத்தால் எந்தக்குலத்தில் பிறந்து எந்தச்சமயத்தைப்பற்றினவர்களாயிருக்கின்றார்களோ அந்தச்சமய நூல் ஆராய்ச்சிக்குறைவினால் சொந்தமத ஒழுக்கங்களிலே செல்லாது அவைகள் கீழே ஆழ்ந்து ஒடவும் புறச்சமய ஒழுக்கங்களும் அனுசாரங்களுந் தலையெடுத்தாடவும் நேர்ந்துவிட்டது அறிவின்முதிர்ச்சியும் அதைச்சார்ந்துகிடக்கிறது (வருமாறு)

1. சிகாயநமவென்று சிவபூசையில், சிவனையர்ச்சிக்கிற, ஒரு மந்திரம். அதாவது, சிரசில் சிகை (குடுமி) யிருக்கவேண்டுமென்பது பொருள், அது இப்போ முண்டிதமாய் மாறி, உரோமத்தை கத்திரியால் வெட்டி வகுப்பெடுத்துச் சீவி மேல் நாட்டார் ஆசாரனை குடிகொண்டது, சிலர் இரண்டு மூன்றங்குலம் முன் நெற்றிப்பக்கத்தில் ஷேக் என்ற பேர்வைத்து விட்டு விட்டு மற்றப்பாகமுழுதும், பெண்களுக்கொப்பாக உரோமத்தை வளர்த்துப் பின்பக்கம் அதை யிருகூறாய் வகிர்ந்து கொண்டைபோட்டுக் கொள்கிறார்கள். அதாவது (பக்கொண்டை) .

சிரசு, முன்பக்க நெற்றிமுதல் பின்பக்கம் பிடரிவரையுள்ள நீளத்தில் கண்டமத்தியுள்ள பாகத்தில் சந்திரன்போல விருத்தமாய் குடுமி யிருக்கவேண்டுமென்பதுதான் முறையும் முன் அநுஷ்டானமும்.

௨. சைவர்களென்று அறிய அறிகுறியாயிருக்குஞ் சிவசின்னங்கள் தரிப்பதில்லை லலாடம் சூன்யமாகவே காணப்படுகிறது

3. பன்னிரண்டு ஆறு அல்லது ஒன்பது ஆறு முழமாய் சோமன் அங்கவஸ்திரம், (கவுபீனத்தோடிசைந்த ஒருடை) கிழுடைபணிந்து மேல் உடுத்தப்படும் சைவ வைதீக வுடை பண்டார வுடையாய்மாறிக் கௌபீனந்தரியாது மெல்லிய வெள்ளை வஸ்திரம் மடித்தாவதில்லாமல் ஒற்றைபாய்ப் பூமிதோயக்கட்டி உலாவப்படுகிறது. ஸ்திரிகள் திருஷ்டிபடுங்கால் வெட்கமடைந்து முகத்தை மாறிக்கொள்ளுகிறார்கள்.

கவி.

அல்லூண், எழுத்தாணி ஆடையொடு
வெள்ளோலை

நல்லோர்கள் நாலுமறவார்.

யாத்திரைசெய்யுங்கால் அட்டாயம்
இருக்கவேண்டுமென்பதே

4. விருந்திக்குச்செல்லுங்காலம் சட்டையிட்டுக்கொள்ளுகிற வழக்கமாறிச் சதா சட்டையே தரிக்கப்படுகிறது அதில் விசேடக்குற்றமில்லாவிடினும் ஆலயதெரிசனத்துக்குப் போகுங்கால் சட்டைதரிக்கலாகாதென்ற விதியை மறந்துவிடுகிறார்கள். போசனவிதிப்படி சாப்பிடுகிறதிலும் விசேடமாள் முதலிய சைவ பந்தியிலும் சட்டைதரித்துண்ணப்படாதென்பதற்கு விலக்காக நமது சைவ மதத்துக்கு மாறுபுள்ள மகமதியமதஸ்தர் ஆசாரனையைக் கடைப்பிடித்து கைச்சட்டைகளைத் திணைத்துக்கொண்டு உண்ணுகிறார்கள் பந்தி பரிமாறவுஞ்செய்கிறார்கள் அக்காலம் மற்றவர்களுக்கு விரோதத்தோற்றமுண்டாகிறது.

5. சட்கர்மகிறியில் அவசியகருமந்தவிரமற்றவை நடைபெறுவதில்லை ஏககேசமாய் இஷ்டம்போல விதிக்கு விலக்காய் தந்தசுத்தி ஸ்நானம் விபூதிப்பூச்சு நடந்தேறும்.

6. அன்னபானாதிகளில் நம்மரபுக்கிசையாத அபக்ஷ்ய பக்ஷண தோஷங்களும் (அதாவது மாமிஷ பக்ஷணம்)* தகாத பானங்களும் (அதாவது கள்ளு, சாராயங்குடித்தல்) பலவிதமான



ஒழுக்கக்குறைவுகளும் நிலைகொண்டே வருகின்றன இன்னம் விரிக்கிற் பலவாறாகப்பெருகும் இத்தகைய அனுசாரக்குற்றங்களைச் செய்பவர் மேலேற்றாமல் "பழையனகழிதலும் புதியனபுகுதலும் வழு வலகாலவகையினானே" என்ற நன்னூற் சூத்திரவிதிப்படி தரும தேவதையொரு காலோடு நடக்கிற இக்கலிகாலக்கொடுமையின் மேலேற்றிக் கூறப்பட்டது.

ஸ்ரீமான் ஆறுமுக நாவலரவர்கள் நூலில் இந்த அனுசாரங்களை ஆங்காங்கு கண்டனஞ்செய்திருக்கிறார்கள். ஆனாலும் குற்றத்தைக்களைந்து, குணத்தைக்கைக்கொள்ளில் உத்தமோத்தமமாயிருக்கும் பார்வையினால் இன்ன குலத்தன் இன்ன மதஸ்தன் என்று அறியக்கூடாத மயக்கமும் நீர்கொழியும் இது எஞ்ஞான்று நம்மவர்களுக்கு கைகூடுமோவென்று சிவபெருமான்றிருவருளைச் சிந்திக்கின்றனன்.

ஸ்திரிகள் குலவேறுபாடு இலகுவாய் தெரியக்கூடிய பன்னா நகை நடை உடை பாவனைகளெல்லாம் மாறி ஒழுக்கங்குன்றின பெண்களின் மோகவுடையாய்த்திரும்பி அவ்வாறே கெட்டு விசாரித்தறிந்துகொள்ளவேண்டியதே தவிர தன்படியே அறியக்கூடியதன்மையும் போய்விட்டது. ஸ்திரிகளுக்குக் காரணம் புருஷர்களே.

## தருமதேவதை விபரம்.

பரமசிவன் பிரபஞ்சத்தையொழித்து ஏகவுருவாய் நிற்குங்கால் தான் அழியாதிருக்கும்பொருட்டு இடபரூபமாய் வந்து தாங்கினதாய்ச்சொல்லப்படுகிற தர்மதேவதையானவன்.

1-வது கிரேதாயுகத்தில், தவம், ஆசாரம், அருள், மெய், யென்ற நாலுகாலோடு நடந்தான்

2-வது திரேதாயுகத்தில் தவம் என்ற ஒருகால்கெட்டு அது அவமாய் மேலேகண்ட மற்ற மூன்று காலோடும் நடந்தான்.

3-வது துவாபரயுகத்தில் புண்ணியமான ஆசாரம் அருளாகிய இரண்டு கால்கெட்டு பாவமான அதர்மம் அனுசாரம் என்ற இரண்டுகாலோடு நடந்தான்.

4-வது கலியுகத்தில், தவம், ஆசாரம், அருள், இந்த மூன்று காலுங்கெட்டு, அதற்கு மாறுயுள்ள, பாவம், அநாசாரம், அருளின்மை, என்ற பாவம், மூன்று காலும், புண்ணியமான மெய், ஒருகாலுமாக நடந்துவருகிறுன் இக்காலம் உண்மையொன்று தவிர மற்றவைகள் யெல்லாங்குடிபோயின தருமதேவனுக்கு இறையவன் கொடுத்த வரம்.

திருதலப்புராணம் தருமதேவதையிடப மானசருக்கம்.

முதிபமேர்ருகங்களுங்கு முதலபவிடையிருகும்
விதிமுறைவருமாலங்கண் விரவுமெய்த்தருமநீதி
யிதுவெனநான்கு மூன்றிரண்டினுெடொன்றதாகப்
பதமுறலூன்றி நீயிப்பாரினிற் சரிப்பாயென்றும் (13)

43. வினு?

இல்லறவாசிக்குப் புத்திரன் வேண்டுவது அவசியமா அது எற்றுக்கு

43. விடை:—

அவசியந்தான் ஏனெனில் பிரமச்சாரியாயிருந்த ஒருவன் அதைவிட்டு இல்லறதர்மத்தைக்கருதி ஒரு கன்னிகையை நேடி பெற்ருேர் தாரைவார்த்துத் தத்தஞ்செய்ய அவன் ஏற்று ஸ்திரியின் கையைப்பற்றிக்கொள்ளுகிறுன் அப்படித் தாரைவார்க்கிற நீரோடு இவனுக்குப் புத்தவென்கிற நரகம் வந்துவிடுகிறதுபும் என்ற நரகம் பிராப்தியாகிறதாய் மனுஸ்மிர்தி ஒன்பதாவது அத்தியாயத்தில் கூறப்படுகிறது நரகத்திலிருந்து தன்னை நீக்கிக் கொள்ள ஆண்மகவு வேண்டியதே பிதாவைப் புத்து என்கிற நரகத்திலிருக்க வொட்டான்கரையேற்றஞ் செய்வான் என்ற காரணம்பற்றியே புத்து இரான் புத்திரன் என்று பிள்ளைகளுக்குப் பேருண்டாயிருக்கிறது புன்னுமம் என்கின்ற நரகத்தில் நின்றும் நீக்கிக்காப்பவன் என்றுஞ் சொல்லுகிறது.

பிள்ளைகள் செய்யவேண்டியதாய் திக்கடன் நீர்க்கடன் என்று இரண்டு ஏற்பட்டிருப்பதில் மயானகட்டஸ்தலத்தில் முத்தி



திசைவரை ஆன்மாவைவிட்டு நீங்காமலிருக்கிற சூக்கும தேகத்தை குடமுடைத்து நீக்கியும் கட்டையிலிருக்கிற ஸ்தூல சரீரத்தைக் கொள்ளி சொருகித் தகனமாகச்செய்தும் பிற்பாடு சிரார்த்தவிதிப்படி தெய்வலோகம் சுவர்க்கம் எமலோகம் நரகம் பைசாசலோகம் பூமியில் மனுடப்பிறவி அசுரப்பிறவி ஆக இந்த ஏழுகதியில் ஆன்மா எதிலாவது சென்றடைந்திருப்பானென்று உத்தேசித்துப் பிதிர் தேவதைகளை நோக்கி அதற்குரிய சிரார்த்தமான அக்கினிகாரியஞ்செய்தும் ஆமம் அல்லது அன்னமளித்தும் பிண்டப்பிரதானஞ்செய்தும் எள்ளுந்தண்ணீருமிறைத்தும் சாப்பிட்டபின் உச்சிட்டத்தைப் பெலிபோட்டு நீர்வார்த்தும் தக்ஷணையீந்தும் தக்ஷணையோடு போசனஞ்செய்வித்தும் முறையே அந்தந்தப்பதவியடைந்த பிதிர்களுக்கு திர்ப்திபண்ணி தந்தையை நரகத்தைவிட்டு நீக்கிக் கரையேற்றஞ்செய்கிறுனென்றறிக.

இப்பொழுது சைவர்கள் சிலதுமட்டுஞ் செய்துவருகிறுர்கள்.

சுலோகம்.

அக்கியோதந்து தேவஸ்தம் சுவர்க்கஸ்தம் விப்ரபோஜனம் எமஸ்தம் பிண்டதாநேநா விக்ர்தம் நரிகேஜா தேக்ஷணுக்கிரமம் மந்வியாணும் அசுரபூரிபோசநம் உஜிஸ்டம் பைசாசேநா சிரார்த்தம் சப்தவிதியதே.

ஆன்மாக்கள் அல்லது உயிர்கள் ஒடுங்குகிற அல்லது

ஒடுக்கப்படுகிற பதங்களின் விபரம்.

| | |
|---|---|
| 1. சமயதீக்ஷை பெற்றவர் சமயி | கந்தசண்டசுருநீதபதம். |
| 2. விசேஷதீக்ஷை பெற்றவர் புத்திரன் | பத்மசமயபதம். |
| 3. நிர்வாணதீக்ஷை பெற்றவர் சாதகன் | ஈச சதாசிவ சாந்தபதம். |
| 4. ஆசாரியன் | தத்வாதீதசொரூபசிவபதம். |

5 பிரமணன் — வசுருத்திர ஆதித்தபதம்.

1, இரண்டை வழிபடவேண்டும்.

1ம் 2ம், மூன்றை வழிபடவேண்டும்.

1ம் 2ம் 3ம், நாலை வழிபடவேண்டும்.

இந்த நாலையும் 5-வது வழிபடவேண்டும்.

1, 2, 3, 4, ஆன சைவர்கள் 5வையர் வணங்குதலும் சிராத்தத்துவருக்கு பூசித்தலும் கூடாது. அதற்கு விதியில்லை. மேலே கண்ட 5-வது பதம் 4 பதங்களுக்கும் கீழுள்ளது.

இக்காலம் தீக்ஷைபெற்றுக்கொள்ளாதவர்களுக்கும் கிரியை செய்கிறார்கள். அவர்கள் யாதொரு கிரியைக்கும் சம்பந்தப்பட்டவர்கள் அல்லவென்பது ஆகமத்துணிவு தாக்காலம் செய்வதெல்லாம் பணச்சிலவுக்கும் செய்பவருடைய காலக்ஷேபத்துக்கும் ஏற்பட்டதைத்தவிர அந்தவுயிருக்கு யாதொரு பலனும் இல்லை.

குறள் எம் அதி புதல்வரைப்பெறுதல்.

பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த
மக்கட்பேறல்ல பிற.

எழுபிறப்புந்தீயவை தீண்டாபழிபிறங்காப்
பண்புடை மக்கட்பெறின்.

12ம் அதி. நடுவு நிலைமை.

தக்கார் தகவிலர் என்ப தவரவ
ரெச்சத்தாற் காணப்படும்.

நைடதம் நகர்நீங்குபடலம்.

மெய்ம்மின்னுமை மருங்கொசிபவிங்கிய
கொம்மைசேர் முலையினுங்குதலைமென்மொழிச்
செம்மைய அருமகப்பெறுதலிமையோர்க்
கிய்மையுமறுமையு மின்பமில்லைபால்



பாரதம் ஆதிபருவச்சருக்கம்.

பாண்டுமகாராசன் குந்திதேவியைக்கேட்டது

கல்லாமழலைக்கனியூறல் கலந்து கொஞ்சுஞ்
சொல்லானுநக்கிபழுதோடிக் கொடர்ந்துபற்றி
மல்லார்புயத்தில் விளையாடிமகிழ்ச்சிமைந்த
ரில்லாதவர்க்கு மனைவாழ்வினினிமையென்னும்

மெய்தானவ்வண்மை விரதந்தழல் வேள்விநாளுஞ்
செய்தானு ஞாலத்தவர் நற்கதிசென்றுசேரார்
மைதாழ்கடங்கண் மகவின்முகம்மன்னுபார்வை
யெய்தாதொழியிற் பெறுமின்பமிலனுமில்லை

சுலோகம்

மரணாந்தங்காசிற்கஷ்தி அதவாபுத்திரசந்ததோ

44 வினா?

எப்படிப்புத்தி . சோற்பத்தி செய்துகொள்ளவேண்டும் அதற்கேற்பட்ட விதி என்ன.

44, விடை:—

ஒவ்வொருமாதமும் ஸ்திரியானவள் விலக்கமாய் மூன்று நாளிருந்து நாலாநாள் ஸ்நானஞ்செய்து புனிதையாகிறாள் அந்த நாள்முதல் பன்னிரண்டு நாள்வரைக்கும் கருத்தரிக்கும் காலம் அப்பாலுள்ளநாளில் அந்தமாசங்கருவில்லை இந்தப்பன்னிரண்டு நாளும் புருடன் ஸ்திரியை விட்டு விலகக்கூடாது விலகினால் சிசுவதைசெய்தபாவத்துக்குள்ளாகி நரகத்துக்குப்போகிறான் இந்தப் பன்னிரண்டுநாளில் மாதப்பிறப்பு அட்டமி, சதுர்த்தசி பௌர்ணமி, அம்மாவாசை இவைகள் வந்தால் அந்த ஐந்துநாளும் ஸ்திரி சங்கமத்தை விலக்கவேண்டும் சிரார்த்ததினமும் பகற்பொழுது மெய்ப்பொழுதும் விலக்கவேண்டும் இரெட்டைப்பட்டநாளில் ஆண்பிள்ளையும் ஒற்றைநாளில் பெண்ணுங்கருவாகுமென்று சொல்லியிருக்கிறது புருடன் விந்து சுக்கிலம் ஸ்திரி விந்து சுரோணிதம்

இதில் புருடன் விந்து ஸ்திரி விந்துக்கு ஏற்றம் தாழ்வு சமத்திருல் ஆண் பெண் அலிப்பிள்ளை (ஆணும் பெண்ணுமல்லாதது) பிறக்குமென்றும் கருத்தரிக்கும்போது சத்துவம் இராசதம் தாமதம் என்ற குணங்களில ஸ்திரி புருஷர்களுக்கு எந்தக்குணம் வியாபித்து நிற்குமோ அந்தக்குணமே பிள்ளைகளுக்குண்டாகுமென்றும் அந்த நாட்களில் அன்னியஸ்திரி கமனஞ்செய்யலாகாதென்றும் விதியிருப்பதால் இதையறிந்து சேர்ந்து நல்ல புத்திரனைப்பெற்று நரகத் துன்பத்தை மாற்றவேண்டும் ரிஷிகள் இந்த விதிகளையறிந்து நல்ல புத்திரனை உற்பத்திசெய்துகொள்ளுகிறார்கள்.

உதாரணமாக பாரதம் பார்க்க.

(பாராசரர் வியாசரைப்பெற்றது தான்) இதைத்தெரிந்துகொள்ளாமல் மனசுக்குநேர்ந்தபடி அப்பன்மதப்பட்டான் அம்மை எதிர்ப்பட்டாள் நான் பிறப்பட்டேனென்றுசொல்வதுபோல விலக்குநாட்களில் கூடி ஆகாதபிள்ளையைப் பெற்று வருத்தமடைந்து நரகத்துக்குள்ளாகிறார்கள் பிள்ளைகள்நடைகண்டு இவன் ஆகாவழி நேரம்பிறந்தவனென்று உலகர்சொல்வதைக் கேட்கிறோம் இதைக் கவனித்து புத்திரவுற்பத்தி செய்துகொள்ளவேண்டும். ஆனால் மேலேசொன்னபடி கருத்தரிக்கும் நாட்பன்னிரண்டும் பிராமணப் பெண்களுக்கென்றும் மற்ற மூன்றுவருணத்துக்கும் முறையே பத்து, எட்டு, ஆறு நாளென்றும் நாலாநாள் விலக்கவேண்டுமென்றும் அதில் கருத்தரித்தால் சிசுவுக்கு அற்பாயுளென்றும் வேதஞ்சொல்வதாய் பாராசரஸ்மிருதி ஆசாரகாண்டத்தில் கூறுகின்றது இதையுங்கவனிக்க.

காசிகாண்டம்.

10-வது சிவசன்மா தேய்வலோகங்கண்டது.

அரியபூம்புனலாடிய நாண்முதல்
மருவுபன்னிரு நாளுமணந்திட
லொருவனிற் பிழையாமலொழுகுதல்
பெருமைசான்ற பிரமச்சரியமே



காசிகாண்டம்.

38வது ஆசாரங்கூறியது.

பூத்துநீராடு நாண்முதனாலோர்
புகன்றநாட்புணர்வது விதியாம்
வாய்த்தநற் கருப்பமெய்தியஞான்றும்
புரந்தரன் மகளிருக்களித்த
வேத்தரும்வரத்தாற் புணர்தலாமிறந்தோர்க்
கிருங்கடன் கழிப்பியஞான்றும்
தீத்தநற்பகலும் பருவமோரைந்தும்
புணர்ந்திடினிரய மெய்துவரால்

---

விதித்த நாட்களினுந் தம்மனையலது
பிறர்நலம் விழைந்திடலாகா
மதுக்குழல் மகளிர்பூத்தநாள் கழிப்பின்
மற்றவீராறு நாட்களினு
முதித்திடும் புதல்வனிரட்டையா நாளி
லொற்றைநாளிவைகளின் மணப்பிற்
புதுத்தளிரழகுவற்றுமா மேனிப்
புதல்விவை யினிதினிற் பெறுவார்

| | | |
|---|---|---|
| ஆண் | 6, 8, 10, 12, 14, 16 | 5ம் நாள் முதல் |
| பெண் | 5, 7, 9, 11, 13, 15 | 16ம் நாள் வரை |

கூர்மபுராணம்.

வருணாச்சிரமமுறைத்த அத்தியாயம்.

அருப்ப முலையார் பூப்பெய்தி
நீராட்டயர்நாள் முதலாய்த்
தெரித்தநாளா மீறுறிற்
றிங்கள்தோறு மகிழ்சிறப்பக்
கருப்பமினி திறுமளவுங்
கலவானுயிற் கருவழித்தோ
னுருப்பாதகமிவர்க் காரு
மென்னமறைகளோதுமால்

நீத்தபருவ மோனார்து
நீக்கித்தனது மனைக்கிழத்தி
பூத்தநீராடிய நாட்டொட்
டொரைத்தநாளிற் புணர்கிற்போன்
வாய்த்தவில் வாழ்பவனெனினும்
வானப்பிரத்தனறத்துறந்தோன்
ஏத்தும் பிரமசாரியினும்
பிரமச்சாரியென்பரால்

அகப்பொருளிலக்கணம்

கற்பிற்பிரிவியல்.

பூத்தகாலைப்புனையிழை மனைவியை
நீராடியபின்னீராறு நாளும்
கருவயிற்றுறூஉம் காலமாதலிற்
பிரியப்பெறா அன்பரத்தையிற் பிரிவோன்

சங்கப்புலவர்.

ஆசாரக்கோவை.

தீண்டாநாண்மூன்றுஞ்சேர்க்கார் நீராடியபின்
னீராறு நாளுமிகவற்க வென்பதே
பேரறிவாளர் துணிபு

சிவதருமோத்திரம்.

சுக்கிலமதிகமாயிலாணெனுமுருவந்தோன்றும்
சுக்கிலங்குறையிற் பெண்ணாஞ்சோணி தந்தலையாயிற்
சுக்கிலத்தவிதான்றேன்றுந் தோய்ந்தவவ்விருவர்பாலும்
மெய்க்குணமிலங்கு மக்கள்பாலுமக்குணமேயேயும்

ஔவையார்.

சந்ததிக்கழகு வந்திசெய்யாமை

வெற்றிவேற்கை.

அச்சமுள்ளடக்கி யறிவகத்தில்லாக்
கொச்சைமக்களைப் பெறுதலினக்குடி
யெச்சமற்றேமாந்திருக்கை நன்றே



நீதிவெண்பா.

பொறிபுதியிலாதபலபுத்திரரைப் பெற்றதிலோர்
நற்புதல்வனைப் பெறுதனன்றாமே—பொற்கொடியே
பன்றிபலகுட்டி பயக்கதினாலேதுபயன்
ஒன்றமையாதோகரிக்கென்றேது

குற்றாலத்தலபுராணம்.

மந்தமாருதச்சருக்கம்.

பதித்துவை மிநீராடிற் பன்னிருநாட்படிகடவார்
விதித்தகுலதருமம்விடார் பிறர்மனையை விரும்புவாரார்
துதிப்புமனைபறத்திருந்துந் துறவோரே துறவோராய்க்
கதித்தமனஞ் சுழிபட்டாரிருவகைக்குங் கழிபட்டார்

45. வினா

புத்திரப்பேறு கிட்டவில்லையானால்யாதுசெய்தல்வேண்டும்

45. விடை:—

ஆணோ, பெண்ணோ மலடென்பதின்று அதற்கு மூன்று காரணமுண்டு அதாவது

விபரம்.

1. கருக்குழியில், சூதகவாயுவினால், வயிற்றுவலி முதலிய உபாதியுண்டாதல்.

2. ஜென்மாந்தரத்தில், செய்துள்ள பாவகன்மங்கள்.

3. பத்மினிமுதலிய, நாலுசாதியை, மூன்றாக வகுக்கப்பட்ட ஜாதிவேற்றுமை.

இதுகளினால்லாமலிருக்கக்கூடும் உபாதியை ஔடதத்தினாலும், கருமத்துக்குப் பரிகாரஞ்செய்து, தெய்வவழிபாடு செய்வதினாலும் நிவர்த்திபெற்றுக்கொள்ளலாம். ஜாதிபேதம், பாவ புண்ணியப் பகுப்பின்பேரில் கடவுளமைத்திருப்பதால், கன்ம ஒற்றுமையும், ஜாதிகளின் பொதுவான ஒற்றுமையுமிருந்தாலொழிய மற்றப்படி, அவர் திருவருளின்றேல் அதை நீக்கமுடியாது.

இப்படியெல்லாஞ் செய்துபார்த்துங் கிட்டவில்லையாகில் மறுவிவாகஞ்செய்துகொள்ளவேண்டும் அதிலும் பயன்பெறுவிடில் ஒருவனுக்குப் பத்துவகையான புத்திரருண்டென்று மனுஸ்மிருதியிலும் ஏழுவகையான புத்திரருண்டென்று, காசிகாண்டத்திலுங் கூறுவதால் அவரவர் இஷ்டம்போலெடுத்துக்கொள்ளவேண்டியது.

புத்திரவிவரம், மனுஸ்மிருதி.

| | | |
|---|---|---|
| 1. | ஔரசன் | தன்மனைவியிடம் பிறந்தவன் |
| 2. | க்ஷேத்திரசன் | கணவனனுமதிபெற்று, மற்றவனைச் சேர்ந்து, தருமசந்தானமாயுண்டானவன் |
| 3. | தத்தன் | ஒருவன் குமாரனைத் தத்தமாகப் பெற்றுக்கொண்டவன் |
| 4. | கிரத்திரிமன் | ஒருவனைத் தானேபிள்ளையாகவைத்துக்கொள்ளுதல் |
| 5. | கூடோற்பன்னன் | கணவனுக்குத்தெரியாமல் சோரத்திற் பெற்றபிள்ளை |
| 6. | அபவித்தன் | எறிந்துவிடப்பட்ட பிள்ளையையெடுத்துக்கொள்ளுதல் |
| 7. | கானீனன் | விவாகமாகுமுன், தாய், தந்தைவீட்டிலிருக்கும்பொழுது, பெற்றபிள்ளை பின் அவளை மணப்பவனுக்கு, இவன், கானீனபுத்திரன் |
| 8. | ஸஹோடசன் | கருப்பமாயிருந்தவளை விவாகஞ்செய்தபின், பிறந்தபிள்ளை |
| 9. | கிரீதன் | விலைக்குப் பெற்றுக்கொண்டபிள்ளை |
| 10. | பௌநற்பவன் | நீக்கப்பட்டாவது, விதவையானபிறகாவது, மற்றொருவனைச் சேர்ந்து பெற்றபிள்ளை |

அந்தப் பிள்ளையை யுண்டுபண்ணினவனுக்கு பௌநற்ப புத்திரனென்று சொல்லப்படும்.



காசிகாண்டம்

| | | |
|---|---|---|
| 1. | ஔரசபுத்திரன் | மேலேசொன்னபடி |
| 2. | மேற்சொன்னபடி | க்ஷேத்திரசபுத்திரன் |
| 3. | மேற்சொன்னபடி | கிரீதபுத்திரன் |
| 4. | மேற்சொன்னபடி | தத்தப்பிள்ளை |
| 5. | பிள்ளையாகவே | வந்துபுகுந்தவன் |
| 6. | பெண்ணுடையபிள்ளை | |
| 7. | பிராணபயந்தீர்த்தவனும் பிள்ளைதான் | |

க்ஷேத்திரசபுத்திரன் பெற்றுக்கொள்வது, இந்த கலியுகத்துக்கு விலக்கு துவாபரயுகத்தில் விசித்திரவீரிய அரசன் ஸ்திரீகள், அம்பிகை அம்பாலிகைக்கு வியாசரால் திருதராட்டிரன் பாண்டு மகாராஜன் பிறந்தார்கள்.

பஞ்சபாண்டவர்கள் தாயாகிய குந்திதேவியானவள் துருவாசமுனியிடம் பெற்றுக்கொண்ட வரப்படி எமன், வாய்வு, இந்திரனைச்சேர்ந்து தருமர், வீமன், அருச்சுனனையும், சூரியனைச் சேர்ந்து, கன்னனையும் மத்திராதேவி அசுவினிதேவரிருவரைச் சேர்ந்து நகுல சகாதேவரையும் பெற்றாள் இவர்கள், க்ஷேத்திரச, கானீன, புத்திரர்களென்று, பாரதங் கூறுகின்றது. இப்போ புத்திரவரிசையிற் சிலதுமட்டும், அநுஷ்டானத்திலிருக்கிறது.

காசிகாண்டம்

மனைவிதன் கொழுநர்க்கீன்றோன்
மற்றவனருளினுய்ந்
மனையவளபலாற் கின்றோன்
அரும்பொருள் கொடுத்துக்கொண்டோன்
இனிதுற கெத்துமைந்தன்
மகவெனப்புகுந்த மைந்தன்
தனையைசெய்தம்மாலாவி
யுய்ந்தவன் றனையராவர்.

46. வினா?

கிருகஸ்தன் பின்னும் எந்தெந்த நிலையினை விரும்பலாகாது

67815
F412
[illegible]

46. விடை:—

சிந்தை வேறுபட்டவள் உபாதியால் மெலிந்து இளைத்தவள், மனதிற் காமவிச்சைகொள்ளாதவள் விரதம் பூண்டவள், கருப்பமுற்றவள், மாதவிடாய் மாறினவள், இந்த அறுவரையுந், தன் பெண்டாகவிருந்தாலும், வலிதிற்புணரலாகாது, கருப்பமுற்றவள், புருடனைச் சேரலாமென்று, இச்சித்தவள் வரங்கொடுத்திருந்தாலும், இஷ்டமில்லாவிடச் செய்தல்கூடாது.

### பிரமோத்திரகாண்டம்.

பஞ்சாக்ஷரமகிமையுரைத்த அத்தியாயம்.

சிந்தைவேறாயினர் பிணியிற்றேய்பினர்
புந்தியின்விருப்பிலார் விரதம்பூண்டுளார்
உந்தியிற்கருவினை யொருவுபூப்பினர்
முந்துறம்வலியினன் முயங்கற்பாலரோ

### திருவிளையாடல்.

இந்திரன் பழிதீர்த்த படலம்.

கருவின்மாதர்கருவுயிர்க்கு மளவுமுறையாற் கணவர்தோள்
மருவிவாழ்பயன்ணகழ்ந்தகுழியு மகளல்லபடிவொழிக
பொருவினீருமிறைதோறு மூழிப்பொலிபோகங்குறைபட்
டொருவினுலுந்தைகமென வொழியாநலமுமுதவினூர்.

47. வினா?

பின்னுந்தீண்டக்கூடாத அன்னியஸ்திரிகள் யாவர்

47. விடை:—

கீழே வருகிறபடி

1. விவாகமாகாத கன்னிப்பெண்கள்
2. புருஷனையிழந்த விதவைகள்
3. அன்னியனுடைய மனைவி
4. பொதுமாதர்கள்
5. வீட்டுவேலைப்பெண்களான அடிமைகள்



இந்த ஐவர்களையுந் தீண்டலாகாது.

48. வினா?

அப்படியானாலதற்பயன் எவ்விதமாய்முடியும்

48. விடை:—

கீழேகண்டபடி

| | |
|---|---|
| 1. கன்னியைச்சேர்ந்தால் | பாவமாகும் |
| 2. தாதிப்பெண்ணைச் சேர்ந்தால் | அறிவு, ஒழுக்கம், அழகு கெட்டுப்போகும் |
| 3. விதவையைச் சேர்ந்தால் | வாழ்நாள் குன்றிவிடும் |
| 4. பொதுமாதரைச் சேர்ந்தால் | திரவியம் நாசமாகும் அல்லாமலும் மனைவிவெறும்பக் கூடுகிறவன் ஏழுபிறவி பெண்ணாய்ப்பிறந்து விதந்துவாளனென்று மாகபுராணங் கூறுகின்றது |
| 5. அயலவன் மனைவியைச்சேர்ந்தால் | மேலேசொன்ன நாலுதீங்குஞ் சேர்ந்து |

மற்றெல்லா நலமும் ஒருங்கே கெட்டுவிடும், மருந்திடு, செய்வினைகளால் பல உபாதியுண்டாகித் தேகநாசமும் வரும்.

### நீதிவெண்பா.

கன்னியரைபொன்ஞண் கழிந்தோரை மற்றயலார்
பன்னியரை மாயப்பரத்தையரை யுன்னரிய
தாதியரை நல்லோர் தழுவநினையார் நரகத்
தீதுவருமென்றே தெரிந்து

சீலங்குலமடியாடிண்டிற் கெடுங்கணிகை
யாலிங்கனந்தனநாசம்மாகும் நாலிழந்த
வல்லிதழுவக்குறையும் வாழ்நாள் பிறர்மனையைப்
புல்லினர்க் கெல்லாநலமும் போம்

மாகபுராணம் 24-வது அத்தியாயம்.

விதனமிக்கு மனைவிலைதுய்ப்பிடப்
பொதுமடக்கையைப் புல்லியதீமையோர்
கதியிற்பெண்பிறப் பேழ்முறைகைமையாய்
மதிகளர்ந்து வருந்துவரென்பவே

49. வினா?

அன்னியன் மனைவியைப்பற்றி எல்லாம் ஒரு சேரக்கெட்டு விடுமென்று ஏற்றக்கூறியதென்னை

49. விடை:—

ஒவ்வொரு புருடர்களும் கிரகாச்சிரம தருமத்தை நடத்தும்பொருட்டே வேறு குடும்பத்திலிருந்து ஒரு பெண்ணை அக்கினிமுதலிய தேவசாக்ஷியாகத் தந்தையிடத்தில் தத்தம்வாங்கி மங்கலசூத்திரந்தரித்தப்பின் கற்புக்கெடாமலிருப்பதற்கு நக்ஷத்திரபதவியடைந்து வடமீனென்று பேர்கொண்ட அருந்ததியைச் சாக்ஷிகூறி ஆகாயத்தைத் தாண்டிக்காட்டியும், வழுவிப்போன, அகலிகை, கல்லாயிருந்ததை, அம்மி, மிதித்துக்காட்டியும் பிரமாணஞ்செய்யப்பெற்றுக், கைக்கொள்ளுகிறார்கள் அப்படிக்கட்டுப் பட்டுவருகிற பெண்கள் தந்தைவீட்டிற் பிறந்து வளர்ந்தவர்த, ஒரு சம்பந்தந்தவிர வேறொன்றும், அவளுக்குப் பாத்தியமில்லாமல், புகுந்தகுடும்பங்களிலுள்ள இரணம், தனம், பாவம், புண்ணியம், சுக, துக்க, முதலிய இம்மைப்பயனுக்குஞ் சுவர்க்க, நரகமுதலிய, மறுமைப்பயனுக்கும், சர்வசுதந்தரமுடையவளாகின்றாள் அப்பேர்ப்பட்ட பெண்களின் கற்பைக்கெடுத்து; விபசாரதோஷத்துக்குட்படுத்தி, ஆச்சிரம தர்மத்தைப்பாழாக்கி, நரகத்துக்குள்ளாக்கும், பாவம், மிகப்பெரிதாதலில் இதற்கு ஏற்றக்கூறி, நூல்கள் வற்புறுத்தித், தடுக்கிறது ஸ்ரீமாந் வேதநாயகம்பிள்ளையவர்கள் எழுதியிருக்கிற, நீதிநூலில், ஒவ்வொருவரும், தன்னைப்போற் பிறரை யெண்ணவேண்டுமென்றும் தன் பெண்டை, அயலான் பார்த்தால் அவனைத் தின்றுவிடுதல்போல் சினங்கொள்பவன் அன்னியன் மனைவியைத் தாய் சகோதரி போல், எண்ணாமல் அவளைச் சேரவிரும்பல், என்ன மதியீனமென்றும்,



குரு ஒரு தப்பு செய்தால் சீடன் ஒன்பது தப்புச்செய்ய நினைக்குமாறுபோல தினம் அன்னியஸ்திரியை இச்சித்துச்செல்லுகிற கணவனைக்கண்ட மாது அந்த முறையே தானும் இஷ்டமான புருடனை தேடிச்செல்லல்தான் ஒழுங்கென்று புருடன் விடுவிட்டு அகலுஞ்சமயத்தை எதிர்பார்த்திருப்பாளென்றும்;

கடவுள், ஆணும் பெண்ணுமாக அமைத்துக் கன்மப்படி ஸ்திரி புருஷனென்று பேரிட்டு பொருத்திவைத்திருக்கிற முறையைக்கடந்து கள்ளவழிப்புணரும் பாதகனை, ஏ! பூமிதேவியே நீ கமாகவெடித்து விழுங்கிவிடமாட்டாயா, ஏ! மேகசாலமே அவன் தலைமேல் இடியை வீழ்த்திக்கொல்லமாட்டாயா, இது செய்தால் குற்றமாவென்று, சாபங்கூறி கண்டனஞ் செய்திருக்கிறார்கள், இப்படிக்குக் கொடியமொழிகூறுவானேனென்றால் பொதுவாய் மாந்தர்கள் இத்தக்குற்றம்பற்றிக் கெட்டு நரகத்துக்காளாகிறார்களே யென்று அவர்கள்பேரிற் கொண்ட இரக்கத்தின் முன்னிலையாய்த் தன் மனதிலுள்ள பரிதாபத்தையும் வருத்தத்தையும் வெளியிட்டு ஆறுதலடைந்திருக்கிறார்களென்று சொல்லவேண்டும். அல்லாமலும்; காமத்துக்குக் கண்டவிடங் கண்ணென்றபடி இந்த பெரிதான தீங்கை விளைக்கிறது காமவிச்சையே. அதைத்தடைப்படுத்த நாணமென்று. ஒரு குணம், ஸ்திரி புருடர்களுக்குப் பொதுவாக ஏற்பட்டிருக்கிறது. அந்தக்குணத்தை யெவ்வகையாகவேனும் பாதுகாத்தலே புத்தியின் பிரயோசனம். நாணம்போனால் மானம் போகும். நல்லகுணங்கள்போய் கெட்டகுணம் குடியேறும். இது பற்றியே குறளில் காமத்துப் பாலில் ஸ்திரிகளை நோக்கி நாணம்" வேண்டுமானால் காமத்தைவிடு, காமம்வேண்டுமானால் நாணத்தைவிடு. இந்த இரண்டையும் பொறுத்தல்கூடாதென்று நாயனார் கண்டித்திருக்கிறார்.

புருடர்களை நோக்கி "நாணுடைமையென்று" ஒரு" அதிகாரஞ் சொல்லி இருக்கிறார்." பெரியோர்கள் "காமம்" இக்குணம் பற்றி பரவாமல் வெளிப்படாமல் உள்ளடங்குமென்று, நாலடியார் நூல் கூறுகின்றது.

குறள் 15ம் அதி பிறனில்விழையாமை.

எளிதென வில்லிறப்பா னெய்து மெஞ்ஞான்றும்
விளியாது நிற்கும் பழி

---

பகை பாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்

125ம் அதிகாமத்துப்பால்.

காமம் விடுவொன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேனிவ் விரண்டு

102ம் அதி. நாணுடைமை.

அணியன்றோ நாணுடைமை சான்றோர்க்கஃ தின்றேல்
பிணியன்றோ பீடுநடை
நாணுயிரைத் துறப்பருயிர்ப்பொருட்டா
ணாண்டுறவார் நாணாள்பவர்

கொன்றைவேந்தன்.

பிறர்மனைபுகாமை யறமெனத்தகும்

வெற்றிவேற்கை.

தன்மனையவளைத் தனிமனையிருத்திப்
பிறர்மனைக்கேகும் பேதையும் பதரே

நல்வழி.

நண்டுசிப்பிவேய்கதலி நாசமுறுங்காலத்திற்
கொண்டகருவழிக்குங்கொள்கைபோ—லொண்டொடி
போதந் தனங் கல்வி பொன்றவருங்காலமயன்
மாதர்மேல் வைப்பார்மனம்

நாலடியார், 9-ம் அதி. பிறர்மனைநயவாமை.

புக்கவிடத்தச்சம் போதரும்போதச்சம்
துய்க்குமிடத்தச்சந்தோன்றுமற்—றாப்பச்சம்
எக்காலுமச்சந்தருமா லெவன்கொலோ
வுட்கான் பிறனில்புகல்

---



காணிற்குடிப்பழியாங் கையுறிற்கால்குறையு
மாணின்மை செய்யுங்காலச்சமா—நீணிரயத்
துன்பம்பயக்குமாற் றச்சாரிநீகண்டா
யின்பமெனக்கெனைத்தாற்கூறு

சிவதருமமோத்திரம்.

9-வது சுவர்க்க நரக சேடவியல்.

ஐவகையாகத்தோன்றுமாக்கிடாதருந்திறனுந்
தெய்வமேகொழுநனென்று தெளிந்தவச்சிந்தையுற்ற
தையலைக்காமுற்றானந்தணர் தகற்புடையாடன்னைப்
பொய்முபக்கியவைப்புல்கும் புலையனும்பன்றியாவான்

நீதிநூல் 12-ம் அதி. விபசாரம்.

தன்னைப்போற்பிறரையெண்ணறகுதியார்தான் மணந்த
மின்னைப்போலிடையினாளை விழியினானோக்குவோனைத்
தின்னல்போன்முனிவுகொள்வோ ரயலவன்றேவிதன்னை
யன்னைசோதரிபோலெண்ணுதனைந்திட விரும்பலென்னே

---

ஓர்பிழைகுருவேசெய்யி னென்பதுபிழைகள்செய்ய
நேர்சிறுசிடனென்னநிதம்பதி பலமின்னார்தோள்
சேர்வது காணுமில்லாடினம்பல புருடர்சேர்தல்
சீரெனவுன்னியன்னான் செலவுபார்த்திருப்பள்மாதோ

---

பண்டோரான் பெண்ணமைத்தவ் விருவருக்கு
மணமியற்றி பானிரக்கல்
கொண்டளித்த முறைகடந்து கள்ளவழி புணர்ச்சிசெய்யுங்
கொடியோர் தம்மை
மண்டலமே வாய்பிளந்து விழுங்காயோ
வவர் தலைமேல் வானுலாவுங்
கொண்டலே பேரிடியை வீழ்த்தாயோ
விதுசெய்யிற் குற்றமுண்டோ

நாலடியார் 9-ம் அதி. பிறர்மனை நயவாமை.

பாவவெளிப்படா பல்லோர்கட்டக்கா
ஏரவேர்கட்காமநோயோ து—கோடிதே
விரவாருணுனுப்படலஞ்சியாது
முரையாதுள்ளாறிவிடும்.

நடை

பாரதம் துரோணபருவம் பன்னிரண்டாம்போர்ச் சருக்கத்தில் தருமனைப்பிடித்துத்தரவேண்டுமென்று துரியன் துரோணனைக்கேட்க விசயன் முன்னணியிலும் வீமன் பின்னணியிலும் நிற்க நடுவே, தருமனிற்பதால் இந்தச்சென்மத்தில் பிடிக்கமுடியாதென்று வில்லாசிரியர் கூற அதற்குப்பக்கமிருந்த உதவியாசர்கள் அவர்களைச் சகாயஞ்செய்யவொட்டாமல் தடுத்துவிடுவோமென்று சொன்ன சபதத்தில் ஒன்று.

பாரதக்கவி.

மறனிற்சிறந்தபுயவலியால் வரைபோன்றனிலன்மைந்தனெனப்
புறநிற்பானைத்தம்முனிடைப் போகாவண்ணந்தகைந்திலமே
லறனிற்கொண்ட தன்மனையாளமளித்தலத்திலழுதிரங்கப்
பிறனிற்றேடும்பெரும்பாவி பெறும்பேறெமக்கும்பேறென்றான்

(பேறு என்பது நரகமே).

இன்னும் மகளிரிலக்கணம் (8வது டி வினா விடையில்) வேசிதயிலென்ற விரிவான வசனத்திலுங்காணலாம்.

50. வினா?

கிரகாச்சிரமதருமம் நடைபெற, இன்னும் இன்றியமையாது வேண்டற்பாலதியாது

50. விடை:—

பொருள்மட்டுமே இதற்குக் காரணம்.



குறள் 25-ம் அதி அருளுடைமை.

அருளில்லார்க்கவ்வுலகமில்லைப் பொருளிலார்க்
கிவ்வுலகமில்லாகியாங்கு

கொன்றைவேந்தன்.

திரைகடலோடியுந் திரவியந் தேடு

விவேகசிந்தாமணி.

பொருளிலார்க்கின்பமில்லை புண்ணியமில்லையென்று
மருவியகீர்த்தியில்லை மைந்தரிற்பெருமையில்லை
கருதியகருமமில்லைக் கதிபெறவழியுமில்லை
பெருநிலந்தனிற்சஞ்சாரப் பிரேதமாய்த் திரிகுவாரே

51. வினா?

பொருள் எப்படிச் சம்பாதித்தல்வேண்டும்.

51. விடை:—

புருடராய் ஜெனனமெடுத்தவர் யாவரும் ஐந்துவயதிற், கல்வி ஆரம்பஞ்செய்து, பொருள்தேடவேண்டிய முயற்சிக்குப் போதுமானமட்டும் சுயபாஷை அன்னியபாஷை முதலியதைக் கற்றுக்கொள்வதோடு தங்கள் மதங்களுக்குரிய சமய நூலையும் அதன்வழித்தாய்வரும் ஆசாரமுதலியவைகளையும் ஆராய்ச்சி செய்து ஒரு தொழிலைக் கைப்பற்றவேண்டும்.

52. வினா?

எத்தொழிலைக் கைப்பற்றவேண்டும்.

52. விடை:—

அறவழியாய்ப் பொருளீட்டவேண்டுமென்றும் முக்கியமாய்க், குற்றமற்ற உத்தமத் தொழிலைக் கைக்கொள்ளவேண்டுமென்றும் நூல்களெல்லாம் முறையிடுகின்றன. பொருளீட்டுவதின் முடிவு, துன்பமென்றுங் கூறுகின்றது. ஆனால், அப்படிக்கெல்லாம் வாய்க்குமா வாய்க்கமாட்டாது.

53 வினா?

உத்தம மத்திம அதமத்தொழில்களாவதென்ன

53. விடை:—

உத்தமம் குசலவித்யாகாம் மத்திமம், கிருஷி வாணிபம் அதமம், சேவகாவிர்த்தி பாரஹாம் ருகஜீவனம், என்று சொல்லப்பட்டிருப்பதால், உத்தமமுங் குற்றமுமற்ற தொழிலான வித்தியா போதகத்தொழிலைக் கொள்ளவேண்டும் பிள்ளைகள் அறிவாளராகி அழிவில்லாத கல்விப்பொருளைப்பெற்று இகபரசாதனம் பெறுதற்குத் தகுதியுடையவராயாகின்றார்கள் இத்தொழில் மிக்க பெரும்புண்ணியம் அறவழியாவிட்டியதற்கும் நாலடியார் நூலில் அழிவு கூறுகின்றது நாயனார் நிசவுத்தொழில் பாவமற்றதென்று கைக்கொண்டதாய் சரித்திரத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது "நாவில் இளைநக்கி நால்வெருடு பேளையறிவேனோ குழைக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து என்ற" கவியால் வெளியாகிறது.

குறள் 76-ம் பொருள் செயல் வகை.

அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்தபொருள்,

(தனிப்பாடல்)

வெள்ளத்தாற்போகாது வெங்கனலால்வேகாது வேந்தராலும்
கொள்ளத்தான்முடியாது கொடுத்தாலுங்குறையாது நிறைவே
[யன்றி
கள்ளர்க்கோமிகவரிது காவலுமோதானெளிது கல்வியென்னு
முள்ளத்தேபொருளிருக்க வேறுமொருபொருள்தேடியுழல்கின்
[றுயே

நாலடியார் 14-ம் அதி. கல்வி.-

வைப்புழிக்கோட்படா வாய்த்தீயிற்கேடில்லை
மிக்கசிறப்பினரசர் செறின்—வவ்வா
ரெச்சமெனவொருவன் மக்கட்குச்செய்வன
விச்சைமற்றல்லபிற



குறள் 40-ம் அதி. கல்வி

யாதானு நாடாமாலூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாதவாறு

நீதிநெறிவிளக்கம்.

அறப்பொருளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையுநாட்டு—முறங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியினூங்கில்லை
சிற்றுயிர்க்குற்ற துணை

நாயனார்சொன்னது

பூவி லயனும் புரந்தாளும் பூவுலகைத்
தாவி யளந்தோனுந் தாமிருக்க—நாவில்
இழைநக்கி நூனெருடு மேழை யறிவேனோ
குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து

54. வினா?

இது கிட்டாதாயின் யாதுசெய்தல்வேண்டும்.

54. விடை:—

மத்திமத்தொழிலாகிய, கிருஷி வாணிபஞ்செய்தல்வேண்டும், கிரிஷித்தொழில் மேலானதென்று நாயனார் முதலியோர் சொன்னாலும் அதில் அசாக்கொலைமுதலியதுண்டாவதால் குற்றமென்று மனுஸ்மிர்தி மறுக்கிறது கிரகாச்சிரமதர்மம் (26-வது விடை பார்க்க) குற்றம் வந்தாலும் பரிகாரத்தால் நீக்கக்கூடிய அற்பக்குற்றங்கள்தான் வியாபாரமும் அசத்தியத்தால் பெருங் குற்றமுண்டாக ஏதுவாகிறது. இக்குற்றங்களுக்கெல்லாம் காரணம் ஆசையே அதுதான் பிறவிக்கு வித்தென்று நாயனார் சொல்லுகிறார்,

குறள் 30-ம் அதி. வாய்மை.

வாய்மையெனப்படுவ, தியாதெனின் யாதொன்றுந்
தீமையிலாதசொலல்

யாமெய்யாக் கண்டவற்று ளில்லையெனைத்தொன்றும்
வாய்மையினல்லபிற.

---

அவாவென்பவெல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

---

நடை.

மனிதர்களுக்கு ஆசைமட்டுமல்ல அதன்வழித்தாய் பேராசை, துர்ஆசை, யென்று இரண்டு கிளைவிட்டெழும்புகிறது. அதாவது தம்மின் மெலியாரைப்பார்த்து (Be Content with what you have) என்றபடி உள்ளதுகொண்டு திருப்தியடையாமல் அன்னியர் செல்வப்பெருக்கத்தைப்பார்த்து அதுபோலாக மேலுமேலுஞ் சம்பாதிக்கவேண்ணுவது பேராசை. அன்னியர் செல்வத்தைக் கண்டு, தப்பமென்ற, பொறாமைக்குணத்தால் அவனைக்கெடுத்து வாழநினைத்தல் துராசை இதனால் மனது, ஒருவரையிலடைபடாமல் பாந்துசென்று பாவத்தையீட்டுகிறது. இந்தவிரண்டாசையுங் கூடாதென்று நூல்கள் சொல்லுகிறது, இந்த ஆசையை நீக்கிப் பொருளீட்டவேண்டும்

கிரிஷித்தொழில், சிறுபான்மை வணிகருக்கும்பெரும்பான்மை வேளாருக்கும் உரியதென்று உழவு அதிகாரத்தின் அவதாரி கையில் நாயனர் சொல்லுகிறார். உழவு தொழிலால் பல புண்ணியம் இயல்பாக வந்தேறுகிறது, கிரிஷி வாணிபமென்று சேர்த்துக்கூறியிருப்பதால் வைசியருல வகுப்பினரென்று சாதிக்கக் கூடிய வேளாளர்களுக்கே இத்தொழில்கள் உரியனவாம்.

நீதிநெறிவிளக்கம்,

தம்மின்மெலியாரை நோக்கித்தமதுடைமை
யம்மாபெரிதென்றகமகிழ்க, தம்மினுங்
கற்றாரைநோக்கிக் கருத்தழிக கற்றதெல்லா
மெற்றேயிவர்க்கு நாமென்று



தாயுமானவர்.

"ஆசைக்கோரளவில்லை யகிலமெல்லாங்கட்டி
யாளினுங்கடன் மீதிலே
ஆணைசெலவேநினைவ ரளகேசனிகராக
வம்பொன்மிகவைத்த பேரும்
நேசித்துரசவாத வித்தைக்கலைந்திடுவர்
நெடுநாளிருந்தபேரும்
நிலையாகவேயினுங்காய கற்பந்தேடி
நெஞ்சுபுண்ணாவரெல்லாம்
யோசிக்கும்வேளையிற்பசிதீரவுண்பது
முறங்குவதுமாக்முடியும்" என்றும்

"ஆசையெனும் பெருங்காற்றூடிலவம்பஞ்செனவு
மனதலையுங்காலம் மோசம்வரு" மென்றுஞ்சொல்லுகிறார்

பிரபுலிங்கலீலை.

ஓடும்பொன்னுமுறவும்பகையுமோர்
கேடுஞ்செல்வமுங்கீர்த்தியும் நிந்தையும்
வீடுங்கானமுவேறறநோக்குதல்
கூடுந்தனமைகொளுமணம் நன்மணம்

நீதிவெண்பா,

ஆசைக்கடியானவில் லோகத்தினுக்கு
மாசற்ற நல்லடியானாவானே—ஆசை
தனையடிமைகொண்டவனே தப்பாதுலகந்
தனையடிமைகொண்டவனேதான்.

குறள் 104-ம் அதி. உழவு.

உழுதுண்டுவாழ்வாரே, வாழ்வார் மற்றெல்லாந்
தொழுதுண்டுபின்செல்பவர்

---

பலகுடைநீழலுந்தங்குடைக்கீழ்க்காண்ப
அலகுடைநீழலவர்

கொன்றைவேந்தன்.

தொழுதூண்சுவையி னுழுதூணினிது
மேழிச்செல்வங் கோழைபடாது.

ஆத்திசூடி.

பூமி திருத்தியுண்

வெற்றிவேற்கை.

உழவர்க்கழகிங்குழு தூண்விரும்பல்

நல்வழி.

ஆற்றங் கரையின் மரமு மரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—யேற்ற
வுழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லைக் கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு

நாலடியார் 1-ம் அதி. செல்வநிலையாமை.

துகடீர்பெருஞ்செல்வந் தோன்றியக்காற்றொட்டுப்
பகடுநடந்தகூழ் பல்லாரோடுண்க
யார்மாட்டு நில்லாதுசெல்வஞ்
சகடக்கால் போலவருந்.

ஏரெழுபது கம்பர்.

வெங்கோபக் கலிகடந்தவேளாள ரணிவயலுள்
பைங்கோல முடிதிருந்தப் பார்வேந்தர் முடிதிருந்தும்
பொங்கோதக் கடற்றானைப்போர்வேந்தர் நடத்துபெருஞ்
செங்கோலை நடத்துங்கோலேறடிக் குஞ்சிறுகோலே.

திருவிளையாடற் புராணம்.

மாமனாகவந்து வழக்குரைத்த படலம்.

நட்பிடைவஞ்சஞ்செய்தும் நம்பினார்க்கூன்மாறுட்டத்
திட்படக்கவர்ந்துமேற்றோர்க் கிம்மியுமுதவாராயும்
வட்டியின்மிதப்பக்கூறி வாங்கியுஞ்சிலர்போலீட்டப்
பட்டதோவறத்தாறிட்டு நம்பொருள்படுமோவென்று



55. வினா?

அதுவுங்கிட்டாதாயின் யாதுசெய்தல்வேண்டும்.

55. விடை:—

அதன்மமாகிய அடிமைத்தொழிலைக் கைக்கொள்ளவேண்டியதுதான், அதிலும் பாவமுண்டாதற்குக்காரணம் மேலே சொன்ன ஆசையைத்தவிர வேறில்லை. யாவர், அவரவரியல்புக்கேற்ப எத்தொழிலைக் கொண்டாலும் பொருள் பெரும்பாலும் பாவஞ்செய்தற்கு முக்கிய கருவியாயிருப்பதால் மனதை ஆசைச்சுழற்காற்றோடு செல்லவிடாமலும் பிறவிப்பெருங் கடலையுந் துக்கத்தையும் விருத்திசெய்யாமலும் பாவபுண்ணியத்தை நன்றாய்ப்பகுத்தறிந்து அறவழியில் பொருளீட்டவேண்டும் பொருளென்பதற்கு பிரதிபதமான செல்வம் என்றவார்த்தையே தனக்கு இயல்பான நிலையாமையென்ற (அர்த்தத்தை அதாவது செல்வோமென்பதை) விளக்கி நிற்கிறதைக்காண்க.

56. வினா?

பொருளீட்டற்குக் காரணம்யாது அது யாவருக்கும் ஒரு தன்மைத்தாய் முடியுமா அல்லது எப்படி.

56. விடை:—

பொருளீட்டுதலுக்குக் காரணம் முயற்சியே இகலோக வாழ்வுக்கோ பரலோகவாழ்வுக்கோ முயற்சி யின்றியமையாது வேண்டப்பட்டது முயற்சியன்றியில் ஏதுவுஞ் சாத்தியப்படாது ஆகவே உலகர் தர்மவழியோ அதர்மவழியோ அவரவர்களாசை முன்னிலையாக பலவாறாக முயற்சிசெய்கிறார்கள். முயற்சிக்காதவர்கள் கிடையாது. ஆனாலும்முயற்சி சிலருக்கு மேற்பட்ட பயனையுஞ் சிலருக்குத் தக்கபயனையுஞ் சிலருக்கு அற்ப பயனையுங் கொடுக்கிறது சிலருக்கு முயற்சி பயனளியாமலும் வீணாய்ப்போகிறது சிலர் யாதொரு முயற்சியுஞ் செய்யாமல் புதையலெடுத்தல் அன்னியரால் எதிர்பார்க்கப்படாமல் தரப்படுதல் முதலானதால் பொருள் பெற்றுக்கொள்ளுகிறார்கள். இவைகளினுட்பத்தை யாராய்ச்சி செய்யுங்கால் (சித்தியார் ஒரு வினைசெய்யாதோருமுடையரிவ்வுலகத்துள்ளே) Man proposes, God disposes, என்றபடி யனி

